உ

சிவமயம்

# வடஇலங்கையின் சக்திபீடம்


# நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன்

(வரலாறும் தலப் பெருமையும்)

(ஆய்வு)

வாகீசகலாநிதி

கனகசபாபதி நாகேஸ்வரன், B.A (Hons); M.A,



JPL

C8774

வெளியீடு

சபாரத்தின சுவாமிகள் நூற்றாண்டு விழாச்சபை

கொழும்பு - இலங்கை

05-10-2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்




பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேகரிப்புப் பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# வடஇலங்கையின் சக்திபீடம்

# நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன்

## (வரலாறும் தலப் பெருமையும்)

(ஆய்வு)


**நூலாசிரியர்**

அருட்கலைமாமணி, சித்தாந்த பண்டிதர், வாகீசகலாநிதி

கனகசபாபதி - நாகேஸ்வரன், B.A (Hons); M.A

பரம்பரை அறங்காவலர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன்
தேவஸ்தானம் , நயினாதீவு.

முதுநிலை விரிவுரையாளர், தரம் 1,
மொழித்துறை, சபரகமுவ பல்கலைக்கழகம்.
ஆலோசகர், தமிழ் இணையப் பல்கலைக்கழகம்.
கொழும்பு, இலங்கை.



8774 CC

205549



வெளியீடு

திருக்கேதீச்சரம் ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள்
நூற்றாண்டு விழாச்சபை
கொழும்பு - இலங்கை.

05 - 10 - 2004



NOHA JPL

பொது சன நூலகம் யாழ்ப்பாணம். விசேட சேர்க்கைப் பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

205549 CC

உ

சிவமயம்

VADA ILANKAIYIN SHAKTHI PEEDAM

# NAINAI SRI NAGAPOOSHANI AMMAN

(VARALARUM THALAP PERUMAIYUM)

(RESEARCH)

R C
294.535

AUTHOR

ARUDKALAI MĀMANI,
SIDDHANTA PANDIT, VAAKĒESA KALĀNITHI,
**KANAGASABAPATHY NAGESWARAN, B.A (Hons); M.A,**
(HERIDITARY TRUSTEE, SRI NAGAPOOSHANI AMMAN KOVIL,)
SENIOR LECTURER, GR. 1, DEPARTMENT OF LANGUAGES,
FACULTY OF SOCIAL SCIENCES AND LANGUAGES,
SABARAGAMUWA UNIVERSITY OF SRI LANKA.
ADVISOR, THAMIL VIRTUAL UNIVERSITY,

Published by:
**Thirukketheeswaram Sri Sabaratna Swamigal Centenary Clebration Committee**

**05 - 10 - 2004**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

நூலின் பெயர் : வடஇலங்கையின் சக்திபீடம்
நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன்
(வரலாறும் தலப் பெருமையும்)
(ஆய்வு)

துறை : தல வரலாற்றாய்வு

நூலாசிரியர் : சித்தாந்தபண்டிதர், வாகீசகலாநிதி
கனகசபாபதி நாகேஸ்வரன்,B.A (Hons); M.A.
முதுநிலைவிரிவுரையாளர், மொழித்துறை,
சமூகவிஞ்ஞான மொழிகள் பீடம்
சபரகமுவ பல்கலைக்கழகம்.
(பரம்பரை அறங்காவலர்,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்,
நயினாதீவு, இலங்கை.)

முதற்பதிப்பு : தாரண புரட்டாதி (2004)

விலை : ரூபா **200/=**

பதிப்புரிமை : ஆசிரியருக்கே

அச்சுப்பதிப்பு : லக்ஷ்மி அச்சகம், கொழும்பு-13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடஇலங்கையின் சக்திபீடம் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன்

உ

சிவமயம்

ශ්‍රී ලංකා සබරගමුව විශ්වවිද්‍යාලය

சபரகமுவ பல்கலைக்கழகம் இலங்கை

SABARAGAMUWA UNIVERSITY OF SRI LANKA

තැ.පෙ. 02, බෙලිහුල්ඔය. P.O.Box- 02-Belihuloya, Sri Lanka.

දුරකථනය : Tele: 045-2280017.

# முகவுரை

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

(திருமந்திரம்)

வடஇலங்கையின் "சக்திபீடம்" எனத்திகழ்வது நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம். குண்டலினித் தொழிற் பாடும், ஸ்ரீ சக்கரபூசை வழிபாட்டு மேன்மையும் உடையது இத் திருத்தலம். சக்தி வழிபாடு நாக - பாம்பு வழிபாட்டோடு தொடர்பு கொண்டமைவது. இன்றும் உலக மக்களிடையே பேத மற்ற முறையில் நயினை அம்மன் திருத்தலம் கீர்த்தி பெற்று மிளிருவது.

நயினை வரலாறும் அம்பாளின் மகிமையும் குறித்த பல செய்தி களை முதலியார் குல. சபாநாதன், பேராசிரியர்கள் ஆ.வேலுப் பிள்ளை, க.கணபதிப்பிள்ளை, சி.பத்மநாதன், கா.இந்திரபாலா, சி.க.சிற்றம்பலம், க.சத்தியசீலன், வி.சிவசாமி, ப.கோபாலகிருஷ் ணன், கா.கைலாசநாதக்குருக்கள், கா.குகபாலன், செ.குணசிங் கம், கலாநிதிகள் க.குணராசா(செங்கையாழியான்), பொ.இரகுபதி, செ.கிருஷ்ணராசா, ப.புஷ்பரத்தினம்; க.சி.குலரத்தினம், க.சொக் கலிங்கம், ஆ.தியாகராசா, (முன்னாள் A.G.A) நா.க.சண்முகநாத பிள்ளை,B.Sc, நா.விசுவலிங்கம், ச.ஆ.பாலேந்திரா, ஆ.தேவராசன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகேசு சிவராசசிங்கம், க.தங்கேஸ்வரி பா.உ., திருமதி. தனபாக்கியம், ஐ.சரவணபவன், இணுவில் மா.த.ந.வீரமணிஐயர், பண்டிதர், வித்துவான் ப.க.குகதாசன,B.A, வித்துவான் ப.க.காமாட்சிசுந்தரம், "வரகவி" ஸ்ரீ நாகமணிப் புலவர், ஸ்ரீ முத்துக்கு மாரசுவாமிகள், சிவஸ்ரீ ஐ.கைலாசநாதக் குருக்கள், சிவஸ்ரீ சுவாமி நாத. பரமேஸ்வரக்குருக்கள், சிவஸ்ரீ சம்பு. மகேஸ்வரக்குருக்கள், சிவஸ்ரீ கைலை.வாமதேவக்குருக்கள், சிவஸ்ரீ வை.மு.பரமசாமிக்குருக்கள், சிவஸ்ரீ வை.மு.ப.முத்துக்குமாரசாமிக்குருக்கள்; அமரசிங்கப்புலவர், வித்துவான் சி.குமாரசாமி, B.A சுத்தானந்த பாரதியார், முதலியார் செ.இராசநாயகம், சுவாமி ஞானப்பிரகாசர் இன்னும் பலர் எழுதியுள்ளனர்.

நாகதீபம், மணிபல்லபம் போன்ற சொற்கள் இன்றைய நயினா தீவையே குறித்துநிற்கின்றன என உண்மைவரலாற்று, இலக்கிய, நடைமுறைச் சான்றுகளுள்ளமையை ஆய்வாளர்கள் ஒப்ப ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். வலிந்து இல்லாத பொய்ச் சான்றுகள் கொள்ளவேண்டிய தேவையில்லை. இயற்கையாயுள்ளனவும், இயல்பாயுமுள்ளனவுமான போதிய, தக்க உண்மைச் சான்றுகளும், நம்பிக்கையும், நடை முறையும் நயினா தீவையே, மணிபல்லவத்தையே வரலாற்றுச் சிறப்புடைய தொன்மையாக நிறுவப்போதுமானவை. உண்மையும் அஃதே. எனினும் பரிபூரண உண்மை மேலும் துலங்க வேண்டும் என்பதற்காகவே பலரது நம்பகமற்ற, அடிப்படைகளற்ற போலி ஆய்வுகளும், கருத்துக்களும், எழுத்துக்களும், நூல்களும் வெளி வந்த வண்ணமுள்ளன. **'மெய்ப்பொருள் காண்பது அறிவு.'** என்பது ஆய்வறிஞர்க்கே இன்று அத்தியாவசியமாயுள்ளது.**'அறிவுத் தெளிவு'** தான் ஆய்வாளனுக்கு-நூலுக்குப் பேரழகு. எனவே இனி மேலாயினும் நயினைத்தீவினதும், மணிபல்லவத்தினதும், நாகவழிபாட் டினதும் பூர்விகத்தை- மகத்துவத்தை - மாண்புகளை ஆய்வறிஞர்கள் நடுநிலைமை நின்று எழுதிப்பரப்புவார்களாக! சார்பு நிலை நோக்கு இதற்கு வேண்டியதில்லை. . நடுநிலை ஆய்வே அவசியம்.

இந்நூல் வெளியீட்டில் என்னை உற்சாகப்படுத்தி நின்ற திருக்கேதீச்சரம் ஸ்ரீ சபாரத்னசுவாமிகள் நூற்றாண்டு விழாச் சபையினருக்கு என் மனமார்ந்த நன்றிகள். குறிப்பாக சபைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடஇலங்கையின் சக்திபீடம் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தலைவர் 'திருப்பணித் தவமணி' சி. தியாகராசா (STR), உப தலைவர் உயர்திரு வே. திருநீலகண்டன், செயலர் தம்புதுரை ராசா ஆகியோரது அன்புக்கு நான் அடிமை.

இந்நூலினைக் கணினிப்படுத்தி மிகுந்த நேர்த்தியுடனும், அழகுறவும் அச்சேற்றிய **லக்ஷ்மி அச்சக** உரிமையாளருக்கும் மிகுந்த பொறுமையுடனும் அன்புடனும் பணிபுரிந்த கணினித் தொழில்நுட்ப வல்லுனர்களுக்கும், ஊழியர்களுக்கும் என் உளமார்ந்த நன்றிகள் உரித்தாகுக. நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் பேரருள் இவர்கள் அனைவருக்கும் பரிபூரணமாகக் கிடைப்பதாக.

எமது ஆய்வும் நூல்களும் பொய்ம்மையாளர்க்குச் சிம்ம சொப்பனம். உண்மை தேடுவோர்க்குக் கலங்கரைவிளக்கம். எனது இந்நூலைத் தமிழ்ச் சைவ உலகம் உவந்தேற்றிப் போற்றி மகிழும் என்பதில் ஐயமில்லை.

எம் குலதெய்வம் அகிலலோகநாயகி, அகிலாண்டேஸ்வரி ஸ்ரீ மகாநாகராஜேஸ்வரி அம்பாளின் மகிமைத் திருவருள் உலகைப் பரிபாலிப்பதாக.

தீராப்பிணி தீர இந்நூலை அம்பாள் பெயரிலே யார்த்தேன்.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்".**

சுபம்.

அன்பன்,
**வாகீச கலாநிதி.**
**கனகசபாபதி நாகேஸ்வரன்.**

மொழித்துறை,
சமூகவிஞ்ஞான மொழிகள் பீடம்,
சபரகமுவ பல்கலைக்கழகம்,
பெலிஹுல்லோயா.
இலங்கை
(045.∴2280017)
05.10.2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சமர்ப்பணம்

எந்தையும், கனடாவாழ் தமிழ்பேசும் மக்களால் **"அருள்மாமணி"** என்னும் கௌரவப்பட்டம் வழங்கப்பட்டுப் பாராட்டப்பெற்றவரும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தின் மரபுவழிப் பரம்பரை அறங்காவலர் வழியில் உதித்தவருமான **நயினையம்பதி ஸ்ரீமான் பரமலிங்கம் கந்தசாமி கனகசபாபதி** அவர்களுக்கும், எனையீன்றுபுறந்தந்த என் தாயாரும், கனடாவாழ் தமிழ் கூறுநல்லுலகால் **"வித்துவாட்டி" "கவிஞர்"** எனும் கௌரவப்பட்டங்கள் வழங்கப்பட்டுப் பாராட்டப் பெற்றவருமான **நயினை ஸ்ரீமதி சுந்தரம்பிள்ளை கோகிலாம்பாள்** ஆகிய என் கண்கண்ட தெய்வங்களின் பொன்னார் திருவடிகளுக்கு மிக்க பணிவன்புடன் இந்நூலினைச் சமர்ப்பணம் செய்து தொழுகிறேன்.

வாகீசகலாநிதி,

**கனகசபாபதி நாகேஸ்வரன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'அருள்மாமணி' ப.க. கனகசபாபதி 'வித்துவாட்டி', 'கவிஞர்' சுந்தரம்பிள்ளை கோகிலாம்பாள் தம்பதி. (வாகீச கலாநிதி நாகேஸ்வரனின் பெற்றார்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"அருள்மாமணியும் - வித்துவாட்டியும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

**அருட்கலைமாமணி, சைவசித்தாந்த பண்டிதர்,**

**வாகீசகலாநிதி,**

**கனகசபாபதி -நாகேஸ்வரன், B. A(Hons) ;M.A.**

**(அகில இலங்கை சமாதான நீதிவான்)**

**முதுநிலை விரிவுரையாளர், மொழித்துறை,**

**சபரகமுவ பல்கலைக்கழகம்.**

ஈழத்தில் சக்தி பீடங்களுள் ஸ்ரீபுவனேஸ்வரிபீடம் எனமிளிரும் நயினை ஸ்ரீ நாகபூஷணிஅம்மன்தேவஸ்தானத்தின் மரபுவழி அறங் காவலர் வம்சத்தில் தவசிரேஷ்டர் ஸ்ரீமான் **பரமலிங்கம கந்தசாமி கனகசபாபத**' எனும் 'அருள்மாமணி'க்கும் **ஸ்ரீமதி சுந்தரம் பிள்ளை கோகிலாம்பாள்** எனும் 'வித்துவாட்டி'க் 'கவிஞ'ருக்கும் மூத்த புதல்வன் **வாகீசகலாநிதி கனகசபாபதி** நாகேஸ்வரன், **எம்.ஏ.** இலக் கிய ஆய்வாளர், கவிஞர், கலைஞர், கல்விமான், இன்னிசைச் சொற்பொழிவாளர், மொழிபெயர்ப்பாளர், நேர்முகவர்ணனையாளர், பண்ணிசைக் கலைச்செல்வர், கதாப்பிரசங்கி எனும் பன்முகப்பட்ட உன்னத ஆளுமைகளின் திருவுரு.

நயினாதீவு மகாவித்தியாலயம், நாவலப்பிட்டிச் சின்னக் கதி ரேசன், தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறையில் **பேராசிரியர், கலாநிதி கனகசபாபதி கைலாசபதியின** மேற் பார்வையின்கீழ்த் தமிழ் இலக்கியத்தில் கலைமாணிச் சிறப்புப் பட்டத்தினையும், **பேராசிரியர், கலாநிதி ஆ. வேலுப்பிள்ளையின** மேற் பார்வையின்கீழ் முதுகலைமாணிப் பட்டத்தினையும் முறையே 1979, 1988ஆம் ஆண்டுகளிற் பெற்றார். தற்போது பேராதனைப் பல்கலைக்கழகத்திலே தமது கலாநிதிப் பட்டத்திற்கான ஆய் வினை நிகழ்த்துகிறார்.

சபரகமுவ பல்கலைக்கழகத்து மொழித் துறையிலே முது நிலைத் தமிழ் விரிவுரையாளராகவும், (தரம்-1) இணைப் பாளராகவும் பணியேற்றுள்ளார். யாழ். பல்கலைக்கழகத்திலும், சபரகமுவ பல்கலைக் கழகத்திலும், தமிழ் இணையப் பல்கலைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகத்திலும் பட்டதாரிகள் பலரை உருவாக்கியுள்ளார்; உருவாக் கிவருகிறார். தமிழின் பல்வேறு துறைகளிலேயும் ஈடுபாடு கொண் டுள்ள இவர் இலக்கியம், சமூகம், கலை, சமயம், வரலாறு, தொல் பொருளியல், அரசறிவியல், இதழி யல், கல்வி, பண்பாடு, மொழி, வாழ்க்கைவரலாறு, பத்திரிகையியல் எனும் துறைகளிலே பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

1972 ஆம் ஆண்டு முதல் இவரது ஆய்வுக் கட்டுரைகள் *கோமுகி, சங்கமம், கலாசுரபி, மல்லிகை, செவ்வந்தி, இந்துநெறி, இனமுழக்கம், தமிழ்ஒலி, பராசக்தி, தேன்பொழுது, ஊற்று, ஆலய மணி, ஜீவசக்தி, தமிழோசை, உள்ளம்* ஆகிய இலக்கியச் சஞ்சிகைகளிலேயும், ஈழநாடு, உதயன், தினகரன், வீரகேசரி, தினக்குரல் பத்திரிகைகளிலேயும் வெளிவந்துள்ளன.

1980களில் ஈழநாடு பத்திரிகையின் உதவி ஆசிரியராயும், 1985 வரை ஐந்தாண்டுகள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாப னத்தின் தமிழ்ச்சேவையில் நிகழ்ச்சிகள் தயாரிப்பாளராயும், பகுதி நேர அறிவிப்பாளராயும் பணியாற்றினார். இந்திய அலஹபாத் திலும், மலேசியாவிலும் திருச்சியிலும், நடந்த சமய இலக்கிய மாநாடுகளிலே 1979 இலும், 1983இலும் (2000 இலும்) பங்கேற் றார். இலண்டன் கனடா நாடுகளில் வெளியிடப்பட்டுள்ள சமய இலக்கிய மலர்களில் இவரது ஆய்வுக் கட்டுரைகள் பிரசுரமா கியுள்ளன.

நல்லையாதீனம், பருத்தித்துறை சாரதாஆச்சிரமம், கொழும்பு விவேகானந்த சபை, அகில இலங்கை இந்துமா மன்றம், கொழும்புத் தமிழ்ச் சங்கம், அகில இலங்கைக் கம்பன் கழகம், யாழ்ப்பாணம் திருநெறிய தமிழிசைச் சங்கம், ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கம், கலாசார அமைச்சின் கலைக் கழகத்தின் இலக்கியக் கருத்தரங்குகள், தமிழ் இணையப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழக இந்துமாமன்றம், Sri Lanka Foundation Institute (S.L.F.I), யாழ்ப்பாணம் செஞ்சி லுவைச் சங்கம், இந்து சமய கலாசார அமைச்சு, திணைக்களம் ஆகிய நிறுவனங்களிலே இலக்கிய, சமய விரிவுரைகளை நிகழ்த் தியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்,B.A.(Hons) ; M.A. (Jaffna)

இவர் தேமதுரத்தமிழோசையினை உலகமெல்லாம் பரப்பும் கடப்பாட்டில் கால்நூற்றாண்டுக் காலம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் தமிழ் சேவையில் சைவநற்சிந்தனை, அருளமுதம் (இந்துசமய சஞ்சிகை நிகழ்ச்சி), இலக்கியப் பேச்சுகள், இந்து சமயப்பேச்சு, கலந்துரையாடல்கள், சொல்வளம் பெருக்குவோம், ஆலயத்திருவிழா நேர்முகவருணனைகள், கதாப்பிரசங்கம் என்ப வற்றிலே பங்கேற்றுச் சேவையாற்றி வருவதும் தமிழ்கூறும் நல்லுலகம் நன்கு அறிந்ததே.

**அருள்மொழிச்செல்வர், செஞ்சொல்வாரிதி, இன்னிசைச்சொல் வேந்தன், செஞ்சொல்வாணர், மணிமொழிவாரி, நவரஸக்கலைஞானி, சொற்பேராழி, சித்தாந்தபண்டிதர், அருட்கலைமாமணி, வாகீசகலாநிதி** என்னும் கௌரவப் பட்டங்களைப் பெற்றுள்ள இவர் **அகில இலங்கைச் சமாதான நீதிபதியும்** ஆவார்.

***கலாசுரபி*** (1979), ***தடுத்தாட்கொண்ட புராணம்*** (பல்கலைக்கழக உள்வாரி வெளிவாரிப் பட்டதாரி மாணவருக்கான பாடநூல்)(1989). ***சிவதத்துவமலர்***(1996), ***சத்திதத்துவமலா***(1996), ***நவநாதம***(1998), ***பக்திமலர்***(2004) என்னும் நூல்களின் ஆசிரியர். நாடறிந்த ஆன்மிக இலக்கியப் பேச்சாளர். இவருக்குத் தம்பிமார் இருவர்; தங்கையர் அறுவர்; கனடாவிலும் நாவலப்பிட்டியிலும் வாழ்கின்றார்கள். இவர் நாரந்தனை வண்ணார்பண்ணை ஸ்ரீமான் பாலசிங்கம் பூமணி தம்பதியின் மருமகனும் ஆவார். மனைவி இரதிமலர்தேவி; மகன்மார் பிரகாஷ், குருபரன்; மகள் தாரணி என்போர் குடும்பத்தினர்.

**பேராசிரியர், கலாநிதி, க. அருணாசலம், M.A;Ph.D.**

**முதுதமிழ்ப் பேராசிரியர்,**
**தமிழ்த்துறை,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்,**
**பேராதனை,**
**இலங்கை.**
**19.05.2004.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடஇலங்கையின் சக்திபீடம் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன்



உ
சிவமயம்

ARUDKALIMAAMANI, SIDDHANTHA PANDIT,
VAAKEESAKALANITHY.

***KANAGASABAPATHY NAGESWARAN,*** *B.A (HONS); M.A.*
(WHOLE - ISLAND JUSTICE OF THE PEACE).
SENIOR LECTURER, Gr.1,
DEPARTMENT OF LANGUAGES,
SABARAGAMUWA UNIVERSITY OF SRI LANKA.

**'VAAKEESA KALANITHI' KANAGASABAPATHY NAGESWARAN,M.A** (05.08.1952) hails from the hereditary chain of Chieftain's noble and illustrious family of Nainatheevu Shree Nagapooshani Amman Temple, that luminates as **"PUVANESWARY- PEEDAM"** Which is most - revered among sixtyfour Hindu divine- powered chapters of SriLanka. He is the eldest son of 'Thavasireshdar' **SRIMAN PARAMALINGAM KANTHASAMY KANAGASABAPATHY** alias 'Arulmamani' and 'Viththuvaaddi', "Kavignar" **SHRIMATHI SUNTHARAMPILLAI KOHILAMBAL.**

He is a researcher of literature, Kavignar, Kalaignar, Academician, Lecturer in Thamil, Lecturer in (Thevaram) divo tioinal songs, Translator, Commentator, Honarary Doctor holder (Vaakeesa Kalanithy) in hindu devotional songs reciting and could be precisely deservedly called a living idol of multi- faceted and multi - skilled governance.

He is old student of Nainativu Maha Vidyalayam, Nawalapitiya Kathiresan College and Tellippalai Mahajana College. He received his special degree in Thamil Literature under the guidance of **PROFESSOR, DR. KANAGASABA PATHY KAILASAPATHY** and his Post - graduate degree under the guidance and supervision of **PROFESSOR, DR. A. VELUPPILLAI** of Jaffna University in Years **1979** and **1988** respectively.

He has resumed duties as senior lecturer (Gr.1) in Thamil and also as co- ordinator at the Department of Languages of Sabaragamuwa University. He was responsible for producing

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

several graduates from Jaffna university, Sabragamuwa university and Thamil virtual university. He is involved in research and analysis of many areas and sectors of the Thamil Language. He has presented several Research papers in areas like Literature, Society, Art, Religion, History, Archaeology, Politics, Journalism, Education, Culture, Indigenous medicine, Siddha medicine, Linguistics, Languages, Biography, Comparative religion, Textual criticism, Thamil Literary criticism, Prose, Poetry and mass media Journalism. From year 1972, his articles and research papers were published in Literature-Magazines such as *Koomuki , Sevvanthi, Inthu- neri, Inamulakkam, Thamil- Oli, Parashakthi, Thaen- Pozhuthu, Oottu, Alaiyamani, Jeevasakthi, Thamiloosai, and Ullam.* His articles were published in news papers such as *Eelanadu, Uthayan, Thinakaran, Veerakesari and Thinakkural.*

He has served in year 1980's (Eighties) as Sub editor at *'Eelanadu'* news paper company. Till year 1985, for five years, he has worked as a part-time announcer& producer at Thamil Service of SriLanka Broadcasting Corporation. He took part at conferences held in Alahabad, Trichi (India) and Malaysia in years 1979 & 1983. His research papers have been published in religious and literary magazines which were published in London and Canada. He has delivered lectures on subjects of religion and literature at Nallai Aatheenam, Nallur, Colombo Vivekanantha Sabai, All Ceylon Hindu Congress, Colombo Thamil Sangam, All Ceylon Kampan Kazhaham, Jaffna Thiruuneriya Thamilisai Sangam, Ariya- Dravidian Language development Society, Literary Seminars at Thamil Literary Committee of State Art's council conducted by Sri Lankan Cultural Ministry, Thamil Virtual University, Hindu mantram Peradeniya University, Ministry of Hindu Religious Affairs and Department of Hindu Religious and Cultural Affairs.

It is a known fact to the pleasant Thamil- speaking- world that, he, inspired by the anxiety and responsibility of spreading the melltiflluous- Thamil -Speech to the whole world, devoted one- fourth of a century to the Thamil- Service of Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Broadcasting Corporation (S. L. B. C). He continues to offer his self - less service in programmes such as saiva- benificial- thoughts cum meditation, Arulamutham (Hindu religious magazine programme) , Lectures on Literature, Lectures on Hindu religious affairs, Talks, Seminars, improve- word- power programme and Temple festival commentaries.

He was awarded with honorary degrees such as **'Arlmozhichchelvar', 'Cencholvarithi', 'ManimozhiVaari', 'Navarasakkalaignani','Cotperazhli','Siddhantha pandit', 'Arudkalai-maamani' and 'Vaakeesakalaanithy'. He is a Whole Island Justice of the peace (J.P)** Also, he is a well known orator and publisher of ***Kalaasurabi*** (1979), ***Thaduththaadkonda-puranam*** Thamil Text (curriculam book for under graduates of University Internal and External degrees) (1989),***Saivathat hthuvamalar***(1996), ***Sakthithaththuvamalar*** (1996), ***Navanatham*** (1998), ***Bakthimalar***(2004). He is son - in-law of **Mr. Balasingam** and **Mrs. Poomani Balasingam** of Vannarpannai. His wife **Mrs. Rathymalarthevi, Pragash** and **Guruparan** as his sons, his daughter **Tharani** are is his loving family.

**Professor, Dr. K. Arunasalam, M.A.;Ph.D**

Senior Professor of Thamil ,
Department of Thamil,
University of Peradeniya,
Peradeniya,
Sri Lanka.
19.05.2004.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்,B.A.(Hons) ; M.A. (Jaffna)

உ

சிவமயம்

# ஆய்வுக்கும் அப்பால்

## அதிசயம்! அற்புதம்! முழுவதும் உண்மை!

## (2004.05.31 இல் நிகழ்ந்தது)

**நயினைத்** திருத்தலம் பற்றிய இந்நூலின் முதற் புறாவ் சீர்செய் யவெனக் கொழும்பு லக்ஷ்மி அச்சகத்தினரிடமிருந்து எடுத்து வந்த தினமும் **2004.05.31** தான்; **புல்லரிக்கும்நிகழ்வு**; பலர் நம்ப மறுப்பதுமாம்!

அன்றையதினம் சபரகமுவ பல்கலைக்கழகத்தில் 300 புதிய மாணவர்களுக்கும் பெற்றாருக்கும் வரவேற்புக் கூட்டம் பிரதான மண்ட பத்தில் நடைபெற்றது. அதிசயம்! **திடீரெனக் கதவினூடாகப் பாம்பொன்று தோன்றி நெளிந்தது.** பார்வையாளர் முன்வரிசையில் இருந்த நான் அதனை அவதானித்தேன். சபைக்குட் புகுந்த அப்பாம்பினை மாணவர் கள் கதிரையொன்றிலே ஏற்றி நிறுத்தி யன்னலினூடாக வெளியே செல்லவிட்டனர். சிறிது நேரம் சபையில் நடுக்கமும் பதட்டமும ஏற்பட்டு ஓய்ந்தது. பாம்பஹின்ன என்பது கிராமத்தின் பெயர். பல்கலைக்கழகத் தின் பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், உட்பட சபாமண்டபம் நிரம்பிய மக்கட்கு **அம்பாள் பாம்புருவிலே புறப்பட்டு ஆசீர்வதித்துச் சென்றதாகவே இந்நிகழ்வை யான் எண்ணி வியக்கிறேன்.** என்னுள்ளுணர்வு அமைதி கண்டது. **நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளே** நேரிலே வந்து ஆசிகள் தந்து அத் தொடக்கங்களுக்கும் கால்கோள் இட்டுச் சென்றதாகவே நான் பரிபூரணமாக நம்புகிறேன்; இது என் உள்ளுணர்வு; அவ்வளவே.

எங்கே நினைப்பினும் அங்கே தாமாகவே **(நாகமாகவே)** தோன்றி யருள் செய்பவள் **ஸ்ரீ நாகபூஷணி அம்பிகை. அன்றே என்னுணர்விலும் அறிவிலும் ஒரு பேருண்மை புலனாயிற்று. அதாவது, எப்பேற்பட்ட ஆய்வுக ளுக்கும் பிடிபடாத சூக்குமமான பொருள் தெய்வத்திருவருள் என்பதே அந்தப் பேருண்மை.** அன்பர்கள் மெய்சிலிர்க்கும்படி நாகமாகவே தோன்றி அருள் செய்பவள் **நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்.** அம்பாளின் திருவடிகளை நீள நினைத்து, தொழுது வழிபடுவதே மண்ணினிற் பிறந்தார் தினமும் செய்யத்தக்கது. **திருவருள் என்றும் எம்மை வழிநடத்தும்.** நம்புவோமாக.!

சுபம்.


மொழித்துறை,
சபரகமுவ பல்கலைக்கழகம்,
பெலிஹுல்லோயா,
இலங்கை.
31.05.2004.

அன்பன்,
**சொற்பேராழி, வாகீசகலாநிதி,**
**கனகசபாபதி நாகேஸ்வரன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக் |
|---|---|---|
| 1. | சுருக்கக் குறிப்புகள் | 01 |
| 2. | நாகவம்சம்/ நாகவணக்கமுறை/ நாக அரசு | 17 |
| 3. | நாகவழிபாடு | 26 |
| 4. | உலகம் முழுமையிலும் நாகத்தின் புனிதம் | 28 |
| 5. | நாகர் வரலாறு | 29 |
| 6. | கல்வெட்டுக்களில் நாகவழிபாட்டுச் சான்றுகள் | 34 |
| 7. | நாகபாம்பு வழிபாடு | 37 |
| 8. | நாகவழிபாடும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மனும் | 38 |
| 9. | சக்தியும் சிவமும் | 38 |
| 10. | நயினாதீவுச் சிலாசாசனம் (கல்வெட்டு) | 39 |
| 11. | ஸ்ரீ நாகபூஷணி அம்மை | 40 |
| 12. | நாகம் அர்ச்சனை செய்த காட்சி | 41 |
| 13. | இந்திரலோகம் எனத் திகழும் சக்தி பீடம் | 42 |
| 14. | போர்த்துக்கேயர் கோயிலை இடித்தலும், தீவைத்தலும் - தேரை அழித்தலும் | 43 |
| 15. | ஆலயபூசையும் விழாவும் | 47 |
| 16. | சர்வமத சந்நிதி நயினையாத்திரை - அன்று | 47 |
| 17. | நயினையாத்திரை - இன்று | 49 |
| 18. | "வாகீசகலாநிதி" பெயரிட்ட 'அமுதசுரபி' அன்னதானசபை | 50 |
| 19. | நயினைமான்மியமும் நாகம்பாளும் | 52 |
| 20. | நயினைமான்மியத்தின் காப்புச் செய்யுள் | 53 |
| 21. | பாயிரம் | 54 |
| 22. | "நயினாதீவு சாமியார்" எனப்படும் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி | 55 |
| 23. | நயினை ஊஞ்சல். (பின்னிணைப்பு) | 57 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## வட இலங்கையின் சக்திபீடம்

# நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன்

## (வரலாறும் தலப்பெருமையும்)

## (ஆய்வு)

## சுருக்கக் குறிப்புகள்

1. சப்ததீவுகள் 1 லைடன் தீவு, 2 காரைதீவு, 3 எழுவை தீவு, 4 அனலைதீவு, 5 நயினாதீவு, 6 புங்குடுதீவு, 7 நெடுந்தீவு.

2. சதுரவடிவமுடைய நயினாதீவு 3மைல் நீளமும் 1மைல் அகலமும் 4மைல் சுற்றளவுமுள்ளது.

3. பிரபஞ்ச உற்பத்தி என்னும் நூல் 'புவனேஸ்வரிபீடம்' என்றும், யாமள தாண்டகம் 'திரிபுரபைரவி பீடம்' என்றும் குறிப்பிடும்.

4. நல்லூர்ச் சுவாமி ஞானப்பிரகாசர் 1922 ஆம் ஆண்டு மாசிமாதம் நயினைக்கு வந்தார்.

5. 1937 இல் 12ஆம் நூற்றாண்டிற் செய்யப்பட்ட சாடிகள் (சீனத்துச் சாடிகள்) 'பப்பரவன் சல்லி' என்னுங் காணியிற் கிணறு தோண்டியபோது கண்டெடுக்கப்பட்டுக் கொழும்பு நூதனசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

6. யாழ்ப்பாணக் கச்சேரி இடாப்பு 1882 இல் தயாரிக்கப்பட்டது.

7. நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் இராமலிங்கர் இராமச்சந்திரர் 1788 இல் கட்டியது. மனேச்சர் இராம லிங்கம் கார்த்திகேசரும் பிறரும்: கல்லுக்கட்டடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. கிழக்கு வாயில் இராஜகோபுரம் 1935 ஆம் ஆண்டு கட்டப்பெற்றது.

9. விமானப் புனரமைப்பு 1951 ஆம் ஆண்டு மேற்கொள்ளப் பட்டது.

10. 26.04.1951 இல் புனராவர்த்தன சம்புரோஷண மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

11. 1938 ஆம் ஆண்டு எழுந்த கோரிக்கையின் பிரகாரம் 1939 ஆம் வருடம் கோவில் நிர்வாகம் சம்பந்தமாக ஆரம்பித்த வழக்கு 1944 ஆம் ஆண்டு ஒரு உடன்படிக்கை யின் பிரகாரம் முற்றுப்பெற்றது. 1944 ஆம் ஆண்டு தொடக் கம் முதலாவது நிர்வாக சபை 5 வருடங்களுக்கு அதாவது 1949 வரை செயற்பட்டது.

12. 1976 ஆம் ஆண்டிலிருந்து 1985 வரை பெறுநர் (Receiver) ஒருவரின் மேற்பார்வையின் கீழ் ஆலயம் பரிபாலிக்கப் பட்டது.

13. புதியநிர்வாகத்திட்டத்தை நீதிமன்று 1985 ஆம் ஆண்டு வழங்கியது. 1986 இல் 12 பேர் கொண்ட உறுப்பினர் சபை இடம்பெற்றது.

1986 இல் நீதிமன்றின் உத்தரவு மூலம் புதிய நிர்வாக நடைமுறைத் திட்டம் அமுலுக்கு வந்தது. அதன்படி 12 பேரைக் கொண்ட அறங்காவலர் சபையில் 4பேர் பரம்பரை அறங்காவ லர்கள் ஆவர்.

14. 1944 முதல் 1949 வரை நடைமுறையில் இருந்த முதலாவது நிர்வாகத்தில் பரம்பரைத் தர்மகர்த்தாக்களாக முத்துக் குமாரு காசிப்பிள்ளையும், பரமலிங்கம் கந்தசாமியும், வேலுப்பிள்ளை பொன்னம்பலமும், சரவணமுத்து இரகுப் பிள்ளையுமாகிய நால்வருடன் கணபதிப்பிள்ளை வேலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுதபிள்ளை, கதிரித்தம்பி கந்தையா, ஆறுமுகம் நாகலிங்கம், சண்முகம் நாகநாதர் கந்தையா, சின்னத்தம்பி துரைச்சாமி ஆகியோர் வழிபடுநர் மகாசபையின் உறுப்பினர்களாக இருந்து முதல் நிர்வாகத்தை ஆரம்பித்தார்கள். பின்பு முகாமைத் திட்டத்தின் விதிகளுக்கு அமைவாகப் பரம்பரை முறையில் மு. காசிப்பிள்ளை, பின் கா. ஆறுமுகமும், க. கந்தசாமியின் பின் க. கனகசபாபதியும், ச.இரகுபிள்ளையின் பின் இ. தியாகராசாவும், கா.ஆறுமுகத்தின் பின் ஆ.தியாகராசாவும், வே. பொன்னம்பலத்தின் பின் பொ. இராசலிங்கமும் க. கனகசபாபதியின் பின் க.நாகேஸ்வரனும் பரம்பரைத் தர்மகர்த்தாக்களாக நிர்வாகத்தில் சேவையாற்றியும் சேவையாற்றிக்கொண்டும் உள்ளனர். திரு.இ.தியாகராசா தாமாக விலகியதால் அவரின் இடத்திற்கு திரு. குமாரவேலு சரவணபவானந்தன் நீதிமன்றத்தால் நியமனம் பெற்றுப் பரம்பரை அறங்காவலராகியுள்ளார்.

15. 1951 இல் விமானங்கள் புனரமைக்கப்பட்டு 26.04.1951 இல் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

16. 21.08.1955 இல் நடைபெற்ற கூட்டத்தில் அரசாங்க அதிபர் ம.ஸ்ரீகாந்தா தலைமையில் தேர்த்திருப்பணிச் சபை நிறுவுவதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

17. அம்மன் சித்திரத்தேர் வேலை 24.08.1956 இல் ஆரம்பமாகியது.

18. அம்மனின் புதிய திருத்தேர் 8.7.1957 இல் வெள்ளோட்டம் விடப்பட்டது.

19. அம்மன்திருத்தேர் 11.7.1957 இல் திருவீதியுலாவலம் வந்தது.

20. 1963 இலும் 1983 இலும் மகாகும்பாபிஷேகங்கள் நடைபெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. 1986 இல் மார்ச்மாதம் வன்செயலால் பிள்ளையார் தேர், சுப்பிரமணியர் தேர் இரண்டும் அழிக்கப்பட்டன.

22. 1.4.1998 இல் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

23. 1.4.1998 முதல் தினமும் அன்னதானம் நடைபெற்று வருகிறது.

24. 1958 இல் கிடுகுகளினால் வேயப்பட்டிருந்த தேர்க்கொட்டகை அரச படைகளினால் தீக்கிரையாக்கப்பட்டது. பின், 03.03.1986 இலும் அனர்த்தம் ஏற்பட்டது.

25. தற்போதைய கோவிலின் விஸ்தீரணம் 250 பரப்பு.

26. 1958 இல் அரசபடைகளால் தீக்கிரையாக்கப்பட்டவை.
   1. கிழக்குக் கோபுர முகப்புக் கொட்டகை.
   2. தலவிருட்சமான வன்னி மரம் (மீண்டும் தளிர்விட்டுத் தழைத்துள்ளது.)
   3. தெற்கு மடம்.
   4. பூந்தோட்டமும் வேலிகளும்.
   5. பழைய தேர்க்கொட்டகை (தேர் தப்பிவிட்டது) இழப்பீடு ஏதும் தரப்படவில்லை.

27. 1986.03.03 இல் தீக்கிரையாக்கப்பட்டவை.
   1. கிழக்குப் பிரதான கோபுரக் கதவுகள்.
   2. 100 வருடப் பழைமைவாய்ந்த அம்பாள் தேர் (58 இல் தப்பியிருந்தது.)
   3. பிள்ளையார், முருகன் தேர்களும் பாதுகாப்புமண்டபமும்.
   4. அம்பாள் திருமஞ்சமும் பாதுகாப்பு மண்டபமும்.
   5. மூன்றுவாசல் பெரிய சப்பரமும் பாதுகாப்புக் கொட்டகையும்.
   6. மின் பிறப்பாக்கி இயந்திரமும் அனைத்து இணைப்புக் களும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. பணிமனை உபகரணங்கள் சேதப்படுத்தப்பட்டன.
8. உள் பணிமனை, பணப்பெட்டி சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டன; சூறையாடப்பட்டன.
9. பகல் பூசை வேளையில் இடம்பெற்ற இந்த நிகழ்வால் விக்கிரகங்களில் அணிந்திருந்த திருவாபரணங்களும் சூறையாடப்பட்டன. (இவையாவும் அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் இழப்பீடும் ஒரு பகுதி வழங்கப்பட்டது.)
10. கடற்படையினரின் பூரண கட்டுப்பாட்டில் இருந்த கால கட்டத்தில் ஊரடங்குச்சட்டம் நடைமுறையில் இருந்த இரவு வேளையில் அம்பாளின் கோயில் களஞ்சியம் உடைக்கப்பட்டு நித்திய பாவனைக்குரிய திருவாபரணங்கள் சூறையாடப்பட்டன. இவற்றின் அன்றைய பெறுமதி ரூபா 175,000 ஆகும். இரவுக் காவலாளி சம்பவம் நடந்த தினத்தில் 1993-12-17 அன்று கடமையில் இல்லை என்பது பொலிசாரின் கூற்று.

11. அறங்காவலர்களின் தனிச்சிறப்பு:

"இக் கோவிலில் பண்டு தொட்டு இன்று வரை திருமுறைகளை ஓதுபவர்களும், புராணங்களைப் படித்துப் பொருள் சொல்பவர்களும் அறங்காவலர்களாகவே இருந்து வருகிறார்கள். அதாவது அந்த அளவு இவர்கள் திருமுறைகளைப் பண்ணோடு பாடுவதிலும் விழாக் காலங்களிலும் விசேட நேத்தி வேண்டுதல்களிலும் உரிய திருமுறைப் பாடல்களை அந்த அந்த இடங்களில் பாடுவார்கள். இதே போன்று *கந்த புராணம், திருவிளையாடற்புராணம், சிவராத்திரிப்புராணம், திருவாதவூரடிகள் புராணம்* போன்றவற்றிற்குப் பாடியும் பண்ணோடு பயன் சொல்வதிலும் தனித்துவம் மிக்கவர்கள் என்று பல அறிஞர்கள் வாயாரக் கூறியும் எழுதியும் உள்ளார்கள். அத்தோடு இந்த வரன் முறையால் கட்டாயம் அறங்காவலர் ஒருவர் நித்தியம் ஆலயத்தில் சமூகம் கொடுக்க வேண்டிய ஒரு நிலைப்பாட்டையும் சட்டமாக அன்றிச் சம்பிரதாயமாக ஏற்படுத்திச் செயற்பட்டும் வருகின்றார்கள்." (ஆதாரம்: *நாகம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பூசித்த ஸ்ரீ நாகபூஷணி அம்மன்,* (2003), விவேகானந்தா அச்சகம், யாழ்ப்பாணம், ப.78.)

28. 1960 ஆம் ஆண்டு முதல் உயர்திருவிழாக்கள் 15 நாட்களாக்கப்பட்டன.

29. நித்திய நைமித்திய குருமார்கள்:
"அம்பாளின் நித்திய பூசைகளையும் மாதாந்த உற்சவங்களையும் சிவஸ்ரீ ஐ.கை.வாமதேவக்குருக்களும், சிவஸ்ரீ சாமிநாத. பாலசுந்தரகுருக்களும், சிவஸ்ரீ சம்பு. மகேஸ்வரக்குருக்களும் செய்து வருகிறார்கள். (பரம்பரைப் பூசை உரித்தாளார்கள்).

கொடியேற்றம் முதலாக கும்பாபிஷேகக் கிரியைகளை வடகோவை சிவஸ்ரீ வை.மு.பரமசாமிக் குருக்கள் செய்து வருகின்றார்கள். (இவரும் பரம்பரை மகோற்சவ உரித்தாளர்). நித்திய நைமித்திய குருமார்கள் ஆலய அறங்காவலர் சபையின் தீர்மானங்களுக்கு அமையத் தமது கருமங்களையும் ஆற்றிச் சிறப்பாகப் பணிபுரிந்து வருவதையும் அடியார்களின் வேண்டுதல்களை மிகுந்த பயபக்தியுடன் செய்வதையும் அவதானிக்க முடியும்."(ஆதாரம், *மு.கு.நூ. ப.79.*)

30. அம்பிகை அடியார்களுக்கென 1996 இல் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலில் 75 மலசலகூடங்களும் 10 கிணறுகளும் அமைக்கப்பட்டன.

31. 1960 முதல் "அமுதசுரபி" அன்னதானசபை திருவிழாக் காலத்தில் அடியார்களுக்குச் சிறந்த முறையில் அன்ன தானம் வழங்கிவருகின்றது.

32. தாகசாந்தி:
**"சுமார் 100 வருடங்களுக்கு மேலாக அன்னையைத் தரிசிக்க வரும் அடியார்கட்கு எதுவித பிரதி பலனையும் எதிர்பாராமல் அமரர் தம்பையா அவர்கள் தாகசாந்தி நிலையம் அமைத்துத் தொண்டாற்றினார். அவரின் பணியை மகனார் டாக்டர் த.சோமசேகரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொடர்ந்து செய்து வருகின்றார். இவரின் இப் பணி ஒரு பாரிய தொண்டாகும். தாகம் தீர்க்க நீர் பெறத் தனியான கிணறும், அன்னையை பூசனைசெய்யத் தனியான மலர்த் தோட்டமும் அமைத்துத் தொண்டு செய்யும் இப்பெரியாரின் தொண்டிற்கு நம் நாயன்மார்களில் எவரை ஒப்பிடலாம் என்று எமக்குத் தெரியவில்லை."** (ஆதாரம் *மு.கு.நூ. ப.83.*)

33. நயினை அம்பாளுக்குக் கும்பாபிஷேகங்களைச் செய்த குருமார்களும் ஆண்டுகளும்

1951 - ஊரெழு சிவஸ்ரீ வை. பாலசுந்தரக் குருக்கள்.
1963 - நயினை சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள்.
1983 - கோப்பாய் சிவஸ்ரீ வை.மு. பரமசாமிக் குருக்கள்.
1998 - கோப்பாய் சிவஸ்ரீ வை.மு. பரமசாமிக் குருக்கள்.

*(மு.கு.நூ, ப.85.)*

(அ) 1986.03.03 இல் தீக்கிரையாக்கப்பட்ட தேர்கள் மஞ்சங் களைப் புதிதாகச் செய்தார்கள்.

- பிள்ளையார் தேர் திருநெல்வேலி ஆ.சீவரெத்தினம் ஆசாரியார்.
  வெள்ளோட்டம் 01.07.1968.
- முருகன் தேர், மஞ்சம் திருநெல்வேலி செ.கந்தசாமி ஆசாரியார்.
  தேர் வெள்ளோட்டம் - 03.07.1976.
- மஞ்சம் வெள்ளோட்டம் - 12.07.1981.

(ஆ) 1986 இல் எரிக்கப்பட்ட தேர்களுக்குப் பதிலாகப் புதிய தேர்கள், மஞ்சங்களைச் செய்தார்கள்.

- பிள்ளையார் தேர் திருநெல்வேலி த.இராசரத்தினம் ஆசாரியார்.
  வெள்ளோட்டம் 01.07.1998.
- முருகன் தேர் - அராலியூர் சி.அமரசிங்கம் ஆசாரியார்.
  வெள்ளோட்டம் 25.06.1999.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அம்பாள் மஞ்சம் அராலியூர் சி.அமரசிங்கம் ஆசாரியார்.
  வெள்ளோட்டம் 11.06.2000.
- பெரிய சப்பரச் சகடை நயினை வீ.வைத்திலிங்கம் ஆசாரியார் குழுவினர், 1988.
- சிறிய சகடை திருநெல்வேலி ஆ.சீவரெத்தினம் ஆசாரியார். (1987)
- வெள்ளிக்கொடிக்கம்பம் 2002 ஆம் ஆண்டு திரு.த. பாஸ்கரன் ஆசாரியார், யாழ்ப்பாணம்.

34. நவகலச இராஜகோபுரத் திருப்பணியை அறங்காவலர் சபை தற்போது மேற்கொண்டு வருகிறது. இக் கோபுரம் 99' உயரமாயமையவுள்ளது. கிழக்கு நுழைவாயிலில் 'கோபுர தரிசனம்' இந்துமாக் கடலில் ஒளிபரப்பி நிற்க வேண்டும் என்பது அறங்காவலர் சபையின் உயரியஎண்ணம்.

35. "மன்னுசீர் இலங்காபுரியிலம்பிகை நின்
மாபெரும் புகழினுக் கிலக்காய்
இன்னல் மேவிய நல்லரவு சுற்றியகல்
இருஞ்சிறைக் கருடன் மேவியகல்
இன்ன பாஷைய தென்று அறிவுறா எழுத்தால்
இலங்கு கற்சாதனம் இரண்டு
தன்னை நேரிலா நின் உருவதும் ஐந்தும்
சாட்சியாம் நாகபூஷணியே."

(தியாகராசர் இராமச்சந்திரர்).
(குட்டிப்பிள்ளையார்) (ஆதாரம், *மு.கு;நூ*, ப.94.)

36. புராணங்கட்குப் பண்ணோடு பொருள் சொல்ல வல்லவர் வாழ்ந்த மண் நயினாதீவு. சமகாலத்தில் அதாவது இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன் சகல புராணங்கட்கும் பொருள் சொல்வதில் ஆற்றல் மிக்க பௌரணிகர் பத்துப் பேருக்கு மேல் இருந்தார்கள். இவர்களை விடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராணங்களைப் *பொருள்பிரித்துப்* பாடவல்லவர் பலர் இருந்தார்கள். *(ஆதாரம், மு.கு.நூ, ப.93.)*

37. "நயினை மான்மியம்" பாடியவர் கவிச் செல்வர் ஸ்ரீலஸ்ரீ நாகமணிப் புலவர்.

38. "ஒருகால் நாட்டின் பெரும் பகுதியை உள்ளடக்கிய 'நாகதீபம்' என்றபதம் இன்று நயினைத் தீவை மட்டுமே குறித்து நின்றாலும் இங்குள்ள வழிபாட்டு மரபு ஈழத்தின் ஆதி வழிபாட்டிற்கும் அதன் தொடர்ச்சிக்கும் இன்றும் சான்றாக நிற்பது போற்றத்தக்கது." (சிற்றம்பலம், சி.க (16-04-1990)"ஈழமும் நாகவணக்கமும், பிராமிக் கல் வெட்டுக்கள் தரும் தகவல்கள்" *மணிபல்லவம்*, மணிபல்லவ கலாமன்ற வெளியீடு, நயினைதீவு.)

39. புத்த(ர்)பெருமான் (கி.மு. 523-483 இதற்கிடையில்) நாக தீவில் நாக வழிபாடாற்றியிருக்கிறார். பர்மாவிலிருந்து தர்மசோக மகாராசா புத்திர சோகத்தினால் வருந்தி நாகவழிபாடாற்றிப் புத்திரப்பேறடைய நாகதீவு வந்தார். அருச்சுனன் மணிபுரத்திற்கு (நயினைத்தீவுக்கு) வந்து நாக கன்னியை மணந்து பப்பிரவாகனைப் பெற்றான். இன்றைய ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் அமைந்திருக்கும் இடத்தின் பெயர் பப்பிரவாகன் சல்லி என்பது நோக்கற்பாலது.

40. நயினைத்தீவிலுள்ள படகுத்துறை, உவான்துறை, துடரித் துறை, வாகையடித்துறை என்பன பண்டைய வணிகத் துறைகளாக விளங்கியிருக்கும் இவ்விடங்களில் அகழ்வா ராய்ச்சிகள் நிகழ்த்தப்படுதல் அவசியமாகிறது. (ஆதாரம், பாலசுந்தரம், இ., *நயினைதீவு இடப்பெயர் ஆய்வு,* ப.25.)

41. மதுரையிலே மீனாட்சியாகவும், காஞ்சியிலே காமாட்சியாக வும், காசியிலே விசாலாட்சியாகவும் கேரளத்தில் பகவதி யாகவும், சிருங்கேரியிலே சாரதா ஆகவும், மைசூரிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமுண்டி எனவும், அசாமிலே கர்மாக்யா எனவும், மகா ராஷ்டிரத்திலே பவானி என்றும் அம்பாள் வழிபடப்படுகிறாள். மூவுலகிலும் சிறந்த பேரழகியாக லலிதா மகா திரிபுர சுந்தரி என அம்பாள் அடியார்கள் அனைவராலும் போற்றப்படுகிறாள். அம்பிகையை நாள்தோறும் தியானிப்பவர்கள் தியானிக்கப்படும் பொருளாகவே மாறிவிடுவார்கள் என்பதை "த்யானத் யாத்துரு தேயரூபா" என *லலிதா சகஸ்ர நாமமும்* குறிப்பிடுகிறது.

(மகாலிங்கம், சிவ., "இந்து சமயத்தில் சக்தி வழிபாடு", *மகாசக்தி மகத்துவ மலர்*, 1998,ப.13.)

42. மணித்துவீபம் புவனேஸ்வரி பீடத்தின் மூலக்கருவிடம் என்று தேவி *மகாத்மியம், தேவிபராக்கிரமம், சௌந்தர்ய லஹரி, புவனேஸ்வரி அஷ்டகம், புவனேஸ்வரி ஸுப்ரபாதம். ஸ்ரீ புவனேஸ்வரி நவரத்தினமாலிகா, ஸ்ரீ புவனேஸ்வரி தாண்டகம்* முதலிய நூல்களால் உணர்த்தப் பெறுதல் காணலாம்.

43. **'ஈஸ்வரி'** நாகத்தினை அணிந்து காட்சி தரும்போது **'நாக பூஷணி'** ஆகின்றார். முருகனின் மயில்வாகனம் கூட நாகத்துடன் காட்சி தருவதும் அவதானிக்கத்தக்கது. இவ்வாறே திருமால் பாற்கடலில் ஆதிசேஷன் மீது அறிதுயில் கொள்ளும் ஐதிகமும் அமைகின்றது. நாகதீபம் நாகருக் குரிய இடமே. இவ்வழிபாடு காலகதியில் பின்வந்த வழிபா டுகளுடன் சங்கமித்தது. நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தினைக் கட்டியவனாகக் கண்ணகியின் தந்தை மாநாய்கன் ஐதிகங்களிற் குறிப்பிடப்படுகின்றான். இம்மா நாய்கனே நயினாப்பட்டர் என்ற பிராமணனையும், கண்ணப்பன் என்ற வேளாளனையும் இக்கோயிலைக் கட்டிய போது இங்கு கொண்டுவந்து குடியேற்றினான் எனக் கூறப் படுகிறது. **இந் நயினாப்பட்டரின் பெயரே நயினைத் தீவாக மாறியது என்று கூறுகின்றனர்.** எவ்வாறாயினும் இத்தலம் ஈஸ்வரி வழி பாட்டிற்குரிய தலமாக எழுச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற இங்கே முன்னர் நில விய நாக வழிபாடு இங்குள்ள **'ஈஸ்வரி'** வழி பாட்டுடன் சங்கமித்தது எனலாம். (சிற்றம் பலம், சி.க.1983, 1998)

44. *"லலிதா அஷ்டோத்திரம், சகஸ்ர நாமம், ஸ்ரீவித்யா, காம கலாவிலாசம், சௌந்தர்யலஹரி* என்பவற்றால் அம்பிகை யின் அருளமுதங்களை நன்றாக உணர முடியும். 'நாக நாடு', 'நாகதீபம்' என நாகர்களாலும் இயக்கர்களாலும் உருவகம் கொண்ட இன்றைய நயினாதீவு ஆதிபராசக் திக்கு **'நாகபூஷணியம்மன்'** என நாம ரூபம் தந்து பூசை உற்சவ ஆராதனைகள் என்பன இயங்கி வருகின்றன.

ஸ்ரீ நாகபூஷணியம்மன் நன்றாகவே வீற்றிருந்து அருட் கொடைகளை அள்ளி வீசிவருவதைக் காண்கின்றோம். மிலேச்ச் ஆதிக்கங்கள் விஸ்வரூபமாக எடுப்பதைக் கூட அம் பாள் தனது கமலக் கண்களால் பொசித்துக் கொண்டுதான் அமைகிறாள். இத்தலம் தேவர்களாலும், நாகராஜாக்களாலும், இயக்கர்களாலும் ஆதீனப்படுத்தி கந்தர்வர்களது செயற்பாடுக ளால் புனிதமுங்கொண்டு சான்றோர்களால் ஆதரிக்கப்பட்ட புண்ணிய ஷேத்திரமாகும். தொடர்ந்து துறவிகளாலும் வேதியர் களாலும் தபசிகளாலும் மெய்யுணர்வு கொண்ட சீலர்களாலும் வளர்க்கப்பட்டு இன்றும் தெய்விகத் திருவருள் தரவல்ல புனித மிக்க ஷேத்திரமாக அமைந்திருக்கிறது.

ஸ்ரீசக்கரபூஜை, சகஸ்ரநாமம், திரிசதி, அஷ்டோத்திரம் என்றெல்லாமிருக்கும் ஆராதனை மந்திரங்களால் நிறைவு கொண்டதாக அனைத்துத்தினமும் மந்திரவுருப்பெற்று இவ்வால யத்தை "மந்த்ர கிருஹ" மாக மாற்ற வழிசெய்கின்றனர் பரிபால சபையினர். மாகேஸ்வர பூசைகளால் ஏராளமான பக்தர்களது பசிப்பிணியை நீக்குகின்றனர். இருந்தும் என்! கலியுகத்து ஆட்சியில், மிலேச்சர்களது மேலாண்மையும் இருக் கத்தான் செய்யும்! இது கன்மவினைகளின் எச்சங்கள். மிலேச்ச கலாசாரங்களுக்கு ஆப்பு வைத்து அவற்றை அடியோடு சிரித்து வீழ்த்தி, நாகபூஷணியம்மனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவருளுக்காளாகும் வகையில் இந்த ஞாலமும் நலம்பெற ஆவன செய்ய வேண்டிய பொறுப்பு சைவமக்களையே சாரும். அடியார் பெருமக்களது பக்தியின் வேகத்தாலும், அம்பாளின் நாம பஜனைகள் மூலமாகவும், அம்பாளின் மகத்துவ உபன்னியாசங்களாலும், தவங்கள் விரதங்களினாலும், உற்சவ சிறப்புகளாலும் அம்பாளின் கருணை வெள்ளம் சமுத்திரமாகப் பிரவாகிக்க வேண்டுமெனப் பிரார்த்திப்போமாக."

(மஹாராஜஸ்ரீ. ஷண்முகநாதக் குருக்கள், சு.து (1998), *மகாசக்தி மகத்துவ மலர்*,ப.51.)

45. "ஆணிப்பொன் முத்தெனும் மாலை சூட்டித் தருகினிலே
பேணிப்பயந்த புத்திரரோடிந்தப் பெண்ணரசை
மாணிக்க இரத்தினம் வைத்தே இழைத்திட்ட வாகனத்திற்
காணிற் கவலை கலைந் தோடிடும் பலகாதங்களே."

(கவி "கஸ்தூரி" ஆ.இராமுப்பிள்ளை.)

46. "அருளுருவாய் அனைத்துயிர்க்கும் அன்னையாகி
ஐந்தொழில்கள் புரி ஆதி சத்தியே நின்
கருணையின்றிக் கணக்கிலாக் கஷ்ட முற்றுக்
கதறி நிற்கும் உயிர்களுள் நின்று சூழ்ந்த
இருளகல வழியேதும் இல்லையென்று
ஈடற்ற உறுதியுடன் இந்த ஏழை
உருகி நின்றுன் சந்நிதியில் கேட்டயாவும்
உவந்தளிப்பதுன் கடமை ஒப்பில் தாயே."

(வரகவி ஸ்ரீ நாகமணிப்புலவர்)

47. "சரணம் சரணம் என உனைச் சார்ந்திலன் தரணிமேற்
தரணம் முன் செல்லி அதன் பின்னர்ச் செல்லுங்கதியிலிருக்கும்
மரணம் பவமற்றிருக்கவும் நாள் வந்து வாய்த்திடுமோ
அரணஞ் சிறந்த நயினையில் வாழ் அருள்அம்பிகையே"

(திரு.வே. செல்வநாயகம்,
- விவேகானந்த அச்சகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48. "அற்புதமான அருளுடையாள் அருள் நோன்பினர்க்கே
சற்குணமான நற்புத்திரபாக்கியம் தானளிப்பாள்
முற்றிய நோய் நனி தீர்த்திடுவாள் மூல மூர்த்தியருட்
பொற்பதம் போற்றிடுவார் பெறுவார் பல யோகமுமே."
(வித்துவான் கந்தசாமி காமாட்சிசுந்தரம்)

49. "முன்னைமுதல் நாகர் தொழமூர்த்தமாய் மூலத்துள்
முகிழ்த்தெழுந்து முப்போதும் கருணை செய்த
அன்னையென அனுதினமும் அடியார் போற்றி
அகத்துள்ளே தருளுருவம் கண்டு நாளும்
பின்னைவரு சந்ததியும் பேறுபெற்றுப்
பெரிதுவந்து அடிபணிந்து தொடரவைத்த
இன்னமுதே நயினையுறை நாகம்மாளே
இன்பமுறக் குடமுழுக்கு ஆடீர் அம்மா."
(கவிஞர் நா.க.சண்முகநாதபிள்ளை, பி.எஸ்.சி)

50. "உலகநாயகி உத்தமிநாயகி
இலகு சக்தி இறைவி மனோன்மணி
நலிவு தீர்த்து நலந்தரும் அம்மையே
பொலிவுறச் செய்புதுயுக வாழ்க்கையே."
(கவியோகி சுந்தானந்த பாரதியார்)

51. "ஐந்துதலை நாகங்கள் உன்னைச் சூழ
அவைநஞ்சை அடக்கியுன் நிழலாய் ஆக்கி
இந்துவின் சடைமுடியான் இருந்து கயிலை
இடப்பாகம் தான் தந்து காட்சி நல்க
அந்தமிலாப் பசிப்பிணியைத் தீர்க்கச் செய்யும்
அற்புதத்தை நினைந்தடியார் வாழ்த்தி ஏத்த
சந்தமும் நயினையுறை நாகம்மாளே
சாந்தி பெறக் குடமுழுக்கு ஆடீர் அம்மா."
(கவிஞர். நா.க.சண்முகநாதபிள்ளை, பி.எஸ்.சி)

8774 LL



205549
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
KOHA JPL
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52. "பரந்தெழுந்த பல சமயப் பற்றும் உந்தன்
பாசமணி பல்லவத்தில் பற்றி நின்று
கரந்துவரு உன்கருணை வெள்ளத்துள்ளே
சுகமுழுக்கு ஆடிடவே நின்றார் தாயே
சிரந்தழுவிப் பதம் சூடித் திக்கு எட்டும்
தித்திக்கும் அருளமுதம் பருக நிற்போர்
அரந்தைகெட நயினையுறை நாகம்மாளே
ஆனந்தக் குடமுழுக்கு ஆடீர் அம்மா."
(நயினை கவிஞர் நா.க.சண்முகநாதபிள்ளை, பி.எஸ்.சி)

53. "அகிலத்துயிர்கள் அனைத்திற்கும்
அன்னம் பாலித்தின் பூட்டும்
மகிமை மிக்க மாதாவாம்
மன்னர் அன்னை பூரணிபோல்
திகழும் 'அமுதசுரபி' எனும்
சிறந்த அன்னதான சபை
மிக மேலான நயினையிலே
மேலாம் பணியைத் தொடர்ந்திடுக."
(வித்துவான்,கலாநிதி.க.சொக்கலிங்கம்,எம்.ஏ)

54. "முத்தியாங் கரையைப் பற்றி நானுய்ய
முன்னதாய் முரணலை மோதி
வற்றிடா மாய வாரிதி யதனில்
மயங்கி வீழ்ந் தாழ்திடா வாறு
சத்தியாய்ச் சிவமாய்த் தனிப்பரம்தானே
தானுமாய் நின்ற தற்பரையே
சித்தெலாம் வல்லாய் சேயெனைக் காத்தாள்
திருமணி நாகபூஷணியே."
(நயினைஸ்ரீ.முத்துக்குமாரசாமி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

55. "முந்நாளில் முருகனுக்குச் சக்தி யீந்தாய்
முனிவர்க்குத் தேவர்கட்கும் முதன்மையீந்தாய்
பிந்நாளில் சங்கரர்க்கும் பெருமை யீந்தாய்
பேரின்பக் காதல் வளம் பெருக வைத்தாய்
இந்நாளில் இராமகிருஷ்ணர் ரமணர் போன்ற
இணையற்ற ஞானியரை உலகுக்கீந்தாய்
இந்நாட்டைச் சொந்தமென்னும் இரு இனத்தார்
இணங்கி வாழ்ந்திடச் செய்தல் அரிதோ அன்னாய்?"
(நயினை.க.இராமச்சந்திரா).

56. பெற்றதாலன்னை பெறுமுயிரனைத்தும்
பேணலாலன்னை பெற்றிடவோ
உற்றதாலன்னை விரும்பிய வனைத்தும்
முதலவா லன்னை யெக்கலையுஞ்
சொற்றதாலன்னை யுலகொடு வானுந்
தொழுதலாலன்னை யென்றென்றும்
பற்றதாங் கருணை பொழிதலாலன்னை
பராபரை நாகபூஷணியால்."
(நயினை ஸ்ரீ நாகமணிப்புலவர்.)

57. "பெற்றதாய் பார்க்கப் பிள்ளைதான் வருந்திப்
பிறப்பெனும் சாகரத்தாழ
நற்றவமில்லா என்னை நீ விட்டால்
நியாயமோ நல்லுரையாகச்
செற்ற வக்கரையில் ஏறியான் உய்யத்
துணையு நீ யேயன்றி யாருளர் சொல்
கற்றவர்க்கினியாய் நயினையம்பதிவாழ்
கண்மணி நாகபூஷணியே."
(நயினை ஸ்ரீ முத்துக்குமாரசாமி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

58. "எனக்கென்றோர் தனிவரம் யான் கேட்கவில்லை
என்னினத்தார் வாழ்வொன்றே கருதவில்லை
உனக்கெல்லா உயிர்களுமே சொந்தமென்ற
உண்மையை நான் ஒரு போதும் மறந்ததில்லை
சினங்கொண்டு தீங்கிழைக்கும் தீயார் தாமும்
சீலமுற வேண்டு மென்றே வேண்டுகின்றேன்
தனக்கொருவரொப்பில்லாத் தாயே இந்தத்
தாரணியிற் சாந்தியையே தருவாய் நீயே."
(நயினை க.இராமச்சந்திரா.)

59. "நீருற வளைந்து புரண்டெழுந் திரைந்து
நிறைந்திடும் பணத்திரை விரித்துக்
காருற விடங் கொண் டுலகெலா மீன்ற
கருணை நாயகி திருக் கோலத்
தேருற விளங்கு முரசு மொத் திருந்த
விருங்கட லெனவெண் டிசையும்
பாருடன் புகழத் திகழ் சிகாமணிபோற்
படிந்ததந் நயினையம் பதியே."

60. "பவக்கடற் கிடைவீழ்ந் தலமரு வோரைப்
பாதுகாத் தின்பமே பயக்குஞ்
சிவத்திடைப் படரும் பச்சிளங் கொடிதன்
திருப்பதத் துணை மல ரெனவே
யுவப்புறத் தனைச் சூழாழிமேனாவா
வொழிதர மறவி நோயுற்றுத்
தவிப்பவ ரயர்கைக் குறுபுனையுமானத்
தங்குமந் நயினையாந் தலமே."
(நயினை மான்மியம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகவம்சம்/ நாகவணக்கமுறை/ நாக அரசு

வடமொழி இலக்கியங்களில் நாகர்களைப்பற்றிய பல ஐதிகங்கள் காணப்படுகின்றன. இவர்கள் பாதாளவாசிகள் என்றும் நினைத்த மாத்திரத்தில் வேண்டிய உருவத்தினை எடுக்கும் திறன் படைத்தவர்களென்றும், நகரங்களில் வாழ்ந்த இவர்கள் செல்வந்தர்கள் என்றும், இவர்களின் கன்னிகைகள் அழகு மிக்கவர்கள் என்றும் ஐதிகங்கள் தோன்றின. இவர்களிற் சிலர் அரை மனித உருவமும், அரை நாக உருவமும் படைத்த தெய்விகத் தன்மை பொருந்தியவர்கள் என்ற கருத்துக்களும் மேற்கூறிய ஐதிகங்களிற் காணப்படுகின்றன. பாளி இலக்கியங்களும் இவர்களை அமானுஷ்யர்கள் என அழைக்கின்றன.

இந்தியாவில் வரலாற்றுக் காலத்தில் நிலைத்திருந்த நாகவம்சங்கள் பற்றிய குறிப்புகள் பல உள. தக்கணத்தில் சாதவானர் தமது நாகவம்சத் தொடர்பினை நிலை நாட்டத் தவறவில்லை. இவ்வாறே வட இந்தியாவில் குப்தப் பேரரசின் எழுச்சிக் காலத்தில் நிலவிய நாக அரசுகள் பற்றிய குறிப்புக் களும் அவதானிக்கத்தக்கவை. தமிழ்நாட்டிலுள்ள காவிரிப்பூம் பட்டினம் நாகர்களது தலைநகராக முன்னொருகால் விளங்கிய தென்ற ஐதிகமும் வழக்கில் உண்டு. சங்கப் புலவர்களிற்சிலர் 'நாக' என்ற அடைமொழியைத் தாங்கியும் காணப்பட்டனர்.

மணிமேகலையில் செட்டியான சாதவன் திசைமாறி நாக நாட்டை அடைந்தும் நாகபாஷை தெரிந்ததால் அங்கிருந்து தப்பிவந்த செய்தி கூறப்படுகிறது. இதனால் 'நாகவம்சம்' 'நாக' என்ற அடைமொழியையுடைய பெயர்கள் 'நாகநாடு' போன்ற பதங்கள் ஆகியன ஓர் இனத்தின் அடைமொழி அல்ல எனவும் மாறாக நாக வணக்கத்தில் ஈடுபட்ட மக்களே இத்தகைய அடைமொழிகளால் அழைக்கப்பட்டனர் எனவும் கொள்வதே தருக்க ரீதியானதாகும். இத்தகைய வழிபாடு இந்தியா எங்கணும் வியாபித்திருந்தாலும் பண்டைய தமிழகத்தின் ஒரு பகுதியாகிய இன்றைய கேரளப் பிரதேசத்தில் தான் இது முக்கியமான ஓர் இடத்தினை வகிக்கின்றது. இன்றைய கேரளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைய சேரநாட்டின் ஒரு பகுதியாகும். கி.பி. 2ஆம் நூற்றாண்டில் தொலமி என்ற அறிஞரின் கவனத்தை ஈர்க்கும் அளவுக்கு இங்கு நாகவழிபாடு முன்னிலை பெற்றிருந்ததுபோற் தெரிகிறது. அவர் குறிப்பிடும் 'அய்லய்'(AIOI) என்பது அக அல்லது பாம்பைக் குலமரபுச் சின்னமாகக் கொண்ட அவ்வகை வணக்கத்திலீடுபட்ட மக்களைக் குறித்தது என்பர். இன்னும் சிலர் இது 'ஆய்' வம்சத்தைக் குறிக்கும் என்பர். இன்னும் கேர ளத்தில் நாயர்களின் வீட்டின் ஒவ்வோர் தென்மேற்கு மூலையிலும் பாம்புகள் சுகமாக வாழ்வதற்கான 'காவு' அல்லது சிறிய சோலை காணப்படுவதானது நாக வழிபாட்டின் தொன்மைக்கும் தொடர்ச்சிக்கும் ஒரு சிறப்பான சான்றாகும். இச்சந்தர்ப்பத்தில் பாக்கர் இப்பாம்பு வணக்கத்தில் ஈடுபட்ட நாயருக்கும், ஈழத்து நூல்களிற் குறிக்கப்படும் நாகருக்கும் இடையே உள்ள ஒற்றுமையை இனங்கண்டு இந்நாக வணக்கமும் அங்கிருந்தே ஈழத்தினை அடைந்தது என்ற கருத்தினை முன்வைத்தமை நினைவு கூரற்பாலது. (Parker, H, 1984,15.)பௌத்தமதமும் ஜாதகக்கதை மூலமும், பாளி நூல்களிலும் **'நாகர்'** பற்றிய ஐதிகங்களை எடுத்துக் காட்டு கின்றது. இக் கருத்தினை உறுதிப்படுத்துவதாகப் பண்டைய இந்திய, ஈழப் பௌத்த வழிபாட்டிடங்களிற் காணப்படும் நாக உருவங்கள் விளங்குகின்றன.

> ".... நாக என்ற பதத்திற்கும் 'நக்ன' என்ற வடமொழிப் பதத்திற்குமிடையே உள்ள தொடர்பினை எடுத்துக் காட்டி இப்பதம் 'ஆடையின்றித் திரிவோரைக்' குறித்தது என்றும், ஆரம்பத்தில் உடல் முழுவதையும் மறைக்காது திரிந்த இம்மக்கட் கூட்டத்தினர் காலகதியில் அரையின் கீழ் உள்ள பகுதியை மட்டும் மறைத்தனர் என்றும் கூறப்படுகின்றது. இவ்வாறே கேரளத்திலுள்ள **'நாயர்'** என்ற வகுப்பினர் **'நாகர்'** வழி வந்தோர் என்றும் கருதப்படுகின்றது." (Subramaniam, K.R., 1985,12)

*சிலப்பதிகாரக்* கண்ணகி கதையிலே கண்ணகியின் தந்தையான 'மாநாய்கன்' நாகநாட்டில் பெற்றதாகக் கூறப்படும் இரத்தினக்கல் பற்றிக் கூறுதல் அவசியமாகின்றது. இத்தகைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தினக்கல்லை அளித்தவன் நாகநாட்டு மன்னனான **'அரவ ரசன்'** என்பவன் ஆவான். அரவரசன் என்றால் **நாகமன்னன்** என்பது பொருளாகும்.

> "மாநாய்கன்" என்ற பதம் மா + நாய்கன் என்ற இரு கூறுகளையுடையதென்றும், நாய்கன், நாவிகா என்ற பதங்களிலிருந்தே 'மாநாய்கன்' என்ற சொல் வந்தது என்றும், இதனால் 'மாநாய்கன்' என்றால் கடலோடிகளின் தலைவன் என்பது பொருளாகும்."

என்ற கருத்தும் பொருந்துவதாயுள்ளது.

Veluppillai,A,(1989)

*சிலப்பதிகாரம், மணிமேகலை* ஆகியனவற்றில் குறிப்பிடப் படும் 'நாகநாடு' பற்றி அறிதல் பொருத்தமுடையதாகும்.இவை குறிப்பிடும் நாகநாடு பாளிநூல்கள் கூறும் நாகதீபமே என் பதில் ஐயமில்லை. *மணிமேகலை*யில் வரும் மணிபல்லவம் இந்நாக நாட்டின் ஒரு பகுதியாக விளங்கியிருக்கலாம். சிலர் தற்கால நயினாதீவுதான் இந்த மணிபல்லவம் என அபிப்பிராயப்ப டுகின்றனர். ஒரு பரந்த பிரதேசத்தைக்குறித்த **'நாகதீபம்' என்றசொல் ஈற்றில் இன்று 'நாயினாதீவு' என்ற ஒரு சிறு தீவுக்கு வழங்கப்படு கிறது எனக் கொள்வதே சால்புடையது. வரலாற்றுச் சான்றுகளும், தடயங்களும் நயினாதீவே 'நாகதீபம்' என்பதனை நிறுவுகின்றன.**

**நாகதீபம், நயினாதீவு** நாகவழிபாட்டுக்குரிய இடமே. இவ் வழிபாடு காலகதியில் பின்வந்த வழிபாடுகளுடன் சங்கமித்தது. நாகர்கள் அமானுஷ்யர்கள் அல்லர் என்பதனையும் **நாகவழி** பாட்டிற் திளைத்தோரே இப்பெயர் கொண்டழைக்கப்பட்டனர் என்பதற்குமான இலக்கிய, கல்வெட்டு, தொல்லியற் சான்றுகள் பல உள. அக்காலத்தில் ஒருவர் 'குடியிருந்த பெயர் பெரும்பாலும் அவரது சமய நம்பிக்கையைப் பிரதி பலிப்பதாக இருந்தது. இத்தகைய பெயர்களில் **'நாக'** என்ற பெயர் ஈழத்தை ஆண்ட மன்னர்கள் பலர் குடியிருந்த பெயராகவும் மக்கள்பலர் குடியிருந்த பெயராகவும் காணப்படுவதை நோக்கும் போது இவை அவர்கள் கடைப்பிடித்திருந்த வழிபாட்டையே சித்திரிக் கின்றன எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மனின்
எழுந்தருளித் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகமன்னர்கள்

ஈழத்து மன்னர்களின் பட்டியலை நோக்கும் போது ஈழத்தின் வரலாற்றுக் காலம் தேவநம்பியதீசனின் ஆட்சியோடு தான் (கி.மு.250-210) ஆரம்பமாகின்றது. இம்மன்னனுக்குப் 10 சகோதரர்கள் இருந்தனர். அவர்களில் ஒருவனின் பெயர் 'மகாநாக' என்பதாகும். தேவநம்பியதீசனின் தம்பிக்குப் பின்னரும் பல மன்னர்கள் 'நாக' என்ற பெயரைச் சூடியிருந்தமை தெரிகின்றது. இவ்வரசர்களின் அட்டவணையைப் பாளி இலக்கியங்கள் தருகின்றன. காலப்போக்கில் நாகவணக்கத்தின் சின்னமாகிய இப்பெயர்கள் மறக்கப்பட்டாலும் கூடத் தொடர்ந்தும் பல மன்னர்கள் இப்பெயர்களைச் சூடியிருந்தமையானது இவ்வழிபாடு மன்னர் மத்தியிலும் நன்கு வேரூன்றியிருந்ததை எடுத்துக் காட்டுகின்றது. இவர்களது பெயரும் காலமும் வருமாறு:-

| | |
|---|---|
| **துல்லத்தநாக** | **- கி.மு. 119** |
| **கல்லத்தநாக** | **- கி.மு. 103** |
| **சோரநாக** | **- கி.மு. 63 - 51** |
| **மகாதாதிகமகாநாக** | **- கி.பி. 7 - 19** |
| **ஈழநாக** | **- கி.பி. 33 - 43** |
| **மகல்லக நாக** | **- கி.பி. 136 - 143** |
| **குஜ்ஜநாக** | **- கி.பி. 186 - 187** |
| **குஞ்சநாக** | **- கி.பி. 187 - 189** |
| **முதலாவது சிரிநாக** | **- கி.பி. 189 - 209** |
| **அபயநாக** | **- கி.பி. 231 - 240** |
| **இரண்டாவது சிரிநாக** | **- கி.பி. 240 - 242** |
| **மகாநாக** | **- கி.பி. 569 - 571** |

புத்தர்பிரான் இந்நாட்டிற்கு மேற்கொண்ட மூன்று விஜயங்களில், ஒரு விஜயம் யக்ஷர்களோடு சம்பந்தப்பட மற்றைய இரண்டு விஜயங்களும் நாகருடன் தொடர்புபடுத்தப்பட்டன. இவ்விரு யக்ஷ- நாக வழிபாடுகளுக்கும் உரியவர்கள் அமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுஷ்யர்கள் என்ற கருத்தே இப்பாளி நூல்களில் இடம் பெற்றுள்ளன. பழைய சமஸ்கிருத, பாளி இலக்கியங்களிற் சித்திரிக்கப்பட்டி ருப்பது போன்று *மகாவம்சத்திலும் மணிமேகலையிலும்* நாகர் ஒருபோதும் மனிதவர்க்கத்தினராகச் சித்திரிக்கப்படவில்லை.

நாகதீபத்தில் வாழ்ந்த நாக அரசர்களுக்கிடையே ஏற்பட்ட சண்டையை நிறுத்துவதற்காகவே புத்த(ர்)பிரான் தமது இரண் டாவது விஜயத்தை மேற்கொண்டதாக *மகாவம்சம்* கூறு கின்றது. (M.V 1:44:70) மகோதர குலோதர அரசர்களுக்கி டையே 'இரத்தின சிம்மாசனம்' யாருடையதென்ற பிரச்சி னையைப் புத்தர்பிரான் தீர்த்துவைத்ததாகவும் எண்பதுகோடி நாகர்களும் மதம் மாறியதாகவும் *மகாவம்சம்* கூறுகின்றது.

நாகதீபத்தினைவிடக் கல்யாணிப்பகுதியிலும் ஒரு நாக அரசு இருந்ததுபற்றிய குறிப்பு மகாவம்சத்திலுண்டு.

புத்தபிரானின் மூன்றாவது விஜயத்தின்போது (சேருவாவில்) சிறிதுநேரம் தரித்து நின்று தியானத்தில் ஈடுபட்டதாகவும் எதிர்காலத்தில் தமது நெற்றி எலும்பைவைத்து அப்பகுதியில் ஒரு பௌத்த ஸ்தூபி அமைக்கப்படும் என ஆரூடம் கூறியதா கவும் இவ்வைதிகம் குறிக்கின்றது. புத்தரின் அப்போதைய விஜயத்தின் போது இப்பகுதியில் பின்னர் செல்வாக்குடன் விளங்கிய சுமண என்ற நாகவம்சத்தவன் ஆறுகோடி நாகர் களை இந்தியாவில் இருந்து அழைத்து வந்ததாக நம்பப்படு கின்றது. இச்சுமணனின் தாயாகிய இந்திகாவும் மூன்றுகோடி நாகினிகளுடன் இங்கு வந்து குடியேறினாள். சேருவாவிலவிற் கும் நாக வணக்கத்திற்குமிடையே உள்ள தொடர்பினை எடுத்துக்காட்டும் விதத்தில் இப்பகுதியில் கண்டெடுக்கப்பட்ட தனித்துவம் வாய்ந்த புத்தர்சிலைகள் பற்றியும் சில அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இத்தகைய சிலைகளில் **புத்தரின் தலைமீது நாகபாம்பினது படம் சித்திரிக்கப்பட்டுள்ளது. இது புத்தர் நாகத்தால் பாதுகாக்கப்படுகின்றார் என்ற செய்தியை உணர்த் துவதாய் அமைந்துள்ளது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புத்தர் ஞான ஒளிபெற்ற ஆறாவது வாரத்தில் நாகங்களின் தலைவனாகிய 'முசலிந்த' என்பவனால் மழையிலிருந்து பாதுகாக் கப்பட்ட நிகழ்ச்சியே இவ்வைதிகமாகும்.** கி.பி. இரண்டாம் நூற் றாண்டுக்குரிய 'தொலமி' என்ற கிரேக்க அறிஞரின் குறிப்பும் திருகோணமலைப் பகுதியில் நாகர் செல்வாக்கு அதிகம் காணப்பட்டதை உறுதிப்படுத்துகின்றது. (Rajanayagam, C; 1926: 78-79) இவ்வறிஞரின் வரைபடத்திற் காணப்படும் இரு பதங்க ளாகிய **நாகெய்ரோய்** (Nagairoi) **நாகதிபொய்** (Nagadiboi) ஆகிய னவற்றை விளக்க வந்த இராசநாயக முதலியார் இவை முறையே ஈழத்தின் தென், கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்த நாகர்களைக் குறித்தன எனக் கூறியுள்ளார். (Rajanayagam, C, 1926 :79). சின்னத்தம்பி தொலமியின் குறிப்பினை விரிவாக மேலும் ஆராய்ந்துள்ளார்.

(Sinnatamby, J.R, 1968, A: 49 -50)

(I) 'நாகர்' என்பது, இனக்குழு; (வம்சம்).
(II) 'நாகவழிபாடு' (வணக்கமுறை) பண்பாட்டு அம்சம்.
(III) 'நாக அரசமரபு'.

என்ற மூவகையான பாகுபாடுகளையும் நன்கு மனங்கொண் டிருத்தல் இவ்விரண்டு தளங்களையும் விரிவாகவும் விளக்க மாகவும் தெளிவாகவும் விளங்கிக்கொள்ள உதவுவதாகும்.

பிறிதொரு கண்ணோட்டத்திலே, **'நாகர்'** என்ற வகுப்பினர் **நாகரிகவளர்ச்சியுடையவராக இருந்தனர் என்பதற்குப் பல சான் றுகள் ஆங்காங்கு கிடைத்துள்ளன** என்றும் வரலாற்றறிஞர்கள் குறிப்பிடுவர். இத்தொடர்பில் பேராசிரியர்கள் சி.பத்மநாதன், சி.க.சிற்றம்பலம், கா.இந்திரபாலா, ஆ.வேலுப்பிள்ளை, பொ.பூலோகசிங்கம், செனரத்பரணவிதான, தமிழறிஞர் வி.கன கசபைப்பிள்ளை, பன்மொழிப்புலவர் கா.அப்பாத்துரை, தமிழ றிஞர் வித்துவான் க.சொக்கலிங்கம், வித்துவான்,பண்டிதர் க.குகதாசன், பி.ஏ, திருமதி தனபாக்கியம், முதலியார் குல.சபா நாதன், மாதகல் மயில்வாகனப் புலவர், கலாநிதி க.குணராசா, கலாநிதி செ.குணசிங்கம், க. தங்கேஸ்வரி (பா.உ) ஆகியோர் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.வி.கனகசபைப்பிள்ளை நாகர்களின் வரலாற்றை ஓரளவு தொகுத்துக் கூறியுள்ளார். இப்பேரறிஞர் ஆராய்ச்சி நடத்திய காலத்தில் தமிழ்நூல்கள் பல ஏட்டுப்பிரதிகளாகவே கிடந்தன என்பதை நோக்குமிடத்து இவர்பட்ட இன்னல்கள் ஓரளவு புலனாகும். நாகர்களைப்பற்றி வெளியிட்ட சில குறிப்புக்களை நோக்குவோம்.

"....... **(நாகர்)** ஒரு காலத்தில் இந்தியா, இலங்கை, பர்மா ஆகிய பரப்பின் பெரும் பகுதியையும் ஆண்டார்கள். பெரிதும் தெக்கணத்திலேயே இருந்திருக்கக் கூடிய ஒரு நாகர் தலைநகரம் *இராமாயணத்திற்* கீழ் வருமாறு வருணிக்கப்பட்டுள்ளது.

**"நஞ்சுறைவன் பற்கள் கொடு நாகரின மைந்தர்**
**பொன்செய் கொடுந்தாழிடும் புரிசைமதில் காக்க**
**எஞ்சுதலில் வீதிபல எங்கணும் நிறைந்து**
**மிஞ்சவரு போகவதி மேவு நகரத்தே."**

"மின்செய்பொலங் கோயிலிடை வியன்தவசின் மீதே
அஞ்சவரு வாசுகி அமர்ந்தபதி காண் நீ
மஞ்சுதவழ் மாடமொடு கூடம்மிடைகாடு
விஞ்சவரு பைங்கழனி யாவும் விழி கொள்வாய்."[1]

**கி.மு. 13 ஆம் நூற்றாண்டினருகாமையில் கங்கைக்கும் யமுனைக்குமிடையேயுள்ள பகுதிகள் நாக அரசுகள் இருந்ததாக *மகாபாரதத்தி*லிருந்து கேள்விப்படுகிறோம்.** காவியத் தலைவனாகிய அருச்சுனன் தன்நாடு கடந்த வாழ்வில் முதலில் உலிபி என்ற நாக இளவரசியையும், அதன் பின் மணிபுரத்தை ஆண்ட நாக அரசன் சித்திரவாகனன் புதல்வியாகிய சித்திராங்கியையும் மணம்புரிந்து கொண்டதாகக் கூறப்படுகிறது.

வரலாற்றில் நாகர்களை கி.மு. 6 ஆம் நூற்றாண்டிற் காண்கிறோம். அப்போது ஒரு நாக மரபினர் மகதத்தை

---

1. *Griffithi's Ramayana*, IV, 205, *Indian Antiquary*, Vol. p.5.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டனர். இம் மரபைச் சார்ந்த ஆறாம் மன்னனாகிய அஜாதசத்துருவின் ஆட்சியிலேயே கௌதம புத்தர் தம்புதிய கோட்பாட்டை வகுத்துரைத்தார். அது நாகர்களின் பேராதரவைப் பெற்றது.[2]

> "........ இலங்கை வரலாற்று நூல்கள் யாவுமே நாகர்களைப்பற்றிய செய்திகளுடன் தொடங்குகின்றன. இவற்றிலிருந்து **கி.மு. 6ஆம் நூற்றாண்டின் தீவின் மேற்குக்கரையில் வல்லமை வாய்ந்த நாக அரசுகள் நிலவினவென்றும் அக்காரணத்தால் தீவு நாகத்தீவு என்று அழைக்கப்பட்டதென்றும் அறிகிறோம்.** 1800 ஆண்டுகளுக்கு முன் வரையப்பட்ட பண்டை அமராவதிச் சிற்பங்களிலும் அது போன்ற பிற இடங்களிலும் தலைக்குமேல் பின்புறமாக விரிந்த படங்களுடன் நாகங்கள் தீட்டப்பட்ட மனித உருவங்கள் உள்ளன. இவை நாகர் உருவங்களே."[3]

"அமராவதியின் அழிபாடுகளிலிருந்து அகற்றப்பட்டுள்ள சில துண்டங்கள் சென்னை அரசினர் கண்காட்சிச்சாலையிற் காணப்படுகின்றன. இச் சிற்பங்களில் **நாக அரசருக்குத் தனிச் சிறப்புச் சின்னமாகப் பின்புறம் ஐந்தலை அல்லது ஏழுதலை நாகம் உள்ளது. நாக இளவரசியருக்கு இதுபோல முத்தலை நாகங்களும் பொது நிலை நாகர்களுக்கு ஒரு தலை நாகங்களும் உள்ளன. இச் சிற்பங்களை அரிது முயன்று செதுக்கிய செதுக்குக் கலைஞர் நாகர்கள் நாக இயல்புடையவர் என்றும், அவர்கள் உடல் பாதி மனித உருவாகவும், பாதி பாம்புருவாகவும் அமைந்திருந்தன என்றும் கருதியதாகத் தோன்றுகிறது.** இந்நம்பிக்கையைப் பண்டைத் தமிழ் கவிஞர்கள் அரைகுறையாகவே கொண்டி ருந்ததாகத் தெரிகிறது. ஏனெனில் அவர்கள் தம்முடன் சமகா லத்தவரான நாகர்களை மனிதராகவேகருதிக் குறிப்பிடுகின்றனர். ஆனால்,

---

**2.** *Tree and serpent worship by fergusson*, p.60.

**3.** *Archaeological survey* of southern India, Vol.I. The Buddhists stupas of Amaravati and Jaggayapeta.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அதேசமயம் பண்டை நாகர்கள் பாதாளத்திற் பாம்புகளாக வாழ்ந்ததாகக் குறிக்கின்றனர்.**

"சோழர் தலைநகராகிய காவிரிப்பூம்பட்டினத்தின் பழைமையையும் செல்வவளத்தையும் குறிப்பிடும்போது, நாகர் தலைநகர் அதாவது நாகர் நாட்டின் தலைநகரைப் போல் பழமையும் புகழும் உடையதாயிருந்தது என்று கூறுகிறார். இதிலிருந்து 1800 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திருந்த தமிழ் மக்கள் நினைவெல்லைக்குள்ளாக, **நாகர் அரசுகளை விடப் பழைமைவாய்ந்த அரசுகள் எதுவும் இருந்ததில்லை என்று தோன்றுகிறது.** காவிரிப்பட்டினமே நாகர்களின் ஒரு பழைய வாழ்விடமாயிருந்ததென்று கூறப்படுகிறது."

'நாகர்களில் எயினர், ஒளியர், அருவாளர், பரதவர் ஆகிய பல கிளையினர் இருந்தனர். இவர்களில் மறவரே மிக வல்லமை வாய்ந்தவராகவும் போர்த்திறமிக்கவராகவும் இருந்தனர். நாகமரபினரிடையே முற்றிலும் அடங்காப் பண்புடையவர்கள் எயினர் அல்லது வேடரே. நாகர்கள் பல கலைகளில் திறமையுடையவர்கள்; சிறப்பாக நெசவு அவர்கள் தனித் திறமையாய் இருந்தது."

திரு.வி. கனகசபைப்பிள்ளை அவர்கள் எழுதிய நூலினை மொழிபெயர்த்த பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை அவர்கள் இந்நூலின் 86 ஆம் பக்கத்தில் அடிக்குறிப்பாக எழுதியுள்ள பாகமும் பரிசீலனைக்குகந்ததொன்றாகும்.

**"நாகர்கள் தமிழராகவே தமிழகத்தில் வாழ்ந்தனர். எங்கும் வேறு இன மொழிக்குரியவரென்ற பேச்சும் ஏற்படவில்லை. தனியினமாகவே வாழ்ந்தனர். ஆகவே, அவர்கள் கடல் கொண்ட தமிழகத்திலோ, தமிழகம் சூழ்ந்த நிலத்திலோ இருந்த தமிழினப்பிரிவினர் என்றும், கடல்கோளின் பயனாகவோ வேறு காரணங்களாலோ எங்கும் பரந்தவர் என்றும் கருத இடமுண்டு."**

இது இன்னும் விரிவாக ஆராயத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகவழிபாடு

நாகவழிபாடு இந்தியாவின் பழங்குடிகளுள் மட்டுமல்ல உலகத்திலே சரித்திரகாலத்துக்கு முற்பட்ட வேறனேக குழுவின ருள்ளும் மிகப் பரவியிருந்ததொன்று என்பதற்குச் சான்றுகள் பலவுள. நாகவழிபாடு சம்பந்தமான அநேக குறிப்புகளைப் பண்டிதர் ந.சி. கந்தையாபிள்ளை அவர்கள் எழுதிய *பழந்த மிழர்* என்ற நூலிற் காணலாம்.

> **"நாகவழிபாடு பகல் வழிபாடு போலவே உலகம் முழுமை யிலும் வியாபகம் பெற்றிருந்தது. இவ்வழிபாட்டின் தொடக் கம் எவ்வகையினது என்று துணிதல் கூடவில்லை."[4]**

உலகின் பலபாகங்களில் கூட்டங்களாக வாழ்ந்த மக்கள் விலங்கு பறவை முதலியவைகளில் யாதோ ஒன்றைத் தமது குலக்குறியாகக் கொண்டனர். இதனை ஆங்கிலமொழியில் 'Totem' என வழங்குவர். மயூரர், நாகர், லம்புக்கர்ணர், கருடர் முதலிய பெயர்கள் இதற்கு உதாரணங்களாகும். இக்குலங்க ளுக்குரிய விலங்குகளும் பறவைகளும் அவ்வவ் மக்கட் கூட்டத் தினரால் புனிதமுடையவையாகக் கருதப்பட்டன. அவை களின் உருவங்கள் கொடிகளிலும் தீட்டப்பட்டன. ஆகவே ஒவ்வொரு கூட்டத்தினரும் ஒவ்வொரு கொடியுடையவர்களாயிருந்தனர்.

---

4. The sun and serpent by C.F.Oldham, ch.X- XI.

4 **"ஆதி அநாகரிக மக்களுள் பாம்பு வழிபாடு பயத்தினால் எழுந்தது போலும். சத்தப்படாமல் நகர்ந்து போய்க் கன்னியைப் போற் சதிமானஞ் செய்வதும், குப்பை கூழங்களுள், பொந்து சந்துகளுள் மறைந்து கிடந்து எவருங் காண முன்னரே அனர்த்தம் விளைவிப்பதும், தன் சத்துருவின் தோற்புரையில் கவ்வுதல் ஒன்றினால் அவனை மரணத்துக்கிடமாக்கி விடு கின்றதுமாகிய இந்தச் சொல்லரிய வல்லமையைப் பொருந்திய பிராணி, இயல்பாகவே சனங் களுடைய அச்சத்துக்கும் அதனால் உபாசனைக்கும் ஆதி தொட்டு இலக்காகிக் கொண்டது."** (ஞானப்பிரகாசர் சுவாமி. *தமிழரின் பூர்வ சரித்திரமும் சமயமும்*, ப. 58.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒல்ட்ஹாம்[5] என்னும் ஆசிரியர் நாகவணக்கத்தையும் ஞாயிற்று வணக்கத்தையும் ஆராய்ந்து சிறந்த நூலொன்று வெளியிட்டுள்ளார். டாக்டர் லோகல் அவர்கள் சர்ப்ப வழிபாடு முதலியன பற்றி எழுதிய நூலிலும்,[6] பிரான்சியப் பேராசிரியர் துப்ரே எழுதிய நூலிலும்[7] சரித்திரவாராய்ச்சியறிஞர் திரு. எச். கிருஷ்ணசாஸ்திரி அவர்கள் எழுதிய '*தென்னிந்தியத் தெய்வங்கள்*' என்ற நூலிலும்[8] நாகவழி பாட்டின் தொன்மையும் சிறப்பும் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளன. ஒல்ட்ஹாம்** எழுதிய நூலின் முக்கிய குறிப்புகளை பண்டிதர் கந்தையாபிள்ளை அவர்களே அழகாக மொழிபெயர்த்துத் தந்துள்ளார்கள்.

"இந்திய நாட்டில் படமுள்ள **நாகம்** பகல் வணக்கத்தோடு தொடர்பு பெற்று வருகின்றது. அது ஞாயிற்றினின்று தோன்றியவர்களெனச் சொல்லிக் கொள்ளும் மக்கட் கூட்டத்தினரின் குல இலச்சினையாகும். எங்கெல்லாம் பகல்வணக்கம் காணப்பட்டதோ அங்கெல்லாம் படமுடைய பாம்பு புனிதமுடையதாகக் கருதப்பட்டது. இந்தியாவிற் காணப்படுதல் போலவே ஞாயிற்றை வழிபடும் நாடுகளிலெல்லாம் **நாகம்** வழிபடப்பட்டது. சீனா, பேரு, ஆபிரிக்கா முதலிய நாடுகள் ஒன்றிலிருந்து ஒன்று மிகவும் தொலைவில் இருக்கின்றன. இந் நாடுகளில் இவ் வழிபாடுகள் மற்றை நாடுகளின் சம்பந்தமில்லாது தனித்துத் தோன்றின என்று கூறுதல் முடியாது. இவ் வணக்கமுறை இந்நாடுகள் ஒன்றிற் காணப்படுவது போலவே மற்றைய நாடுகளிலும் காணப்படுகின்றது. **ஆகவே ஞாயிற்றுக் குலத்தவர் என்று சொல்லிக் கொண்ட ஒரு குலத்தாருடைய மத்தியிலிருந்தே இவ் விழிபாடுகள் பரந்து நாலாதிசைகளிலும் சென்றிருந்தல் வேண்டும்" என்பது மொழி பெயர்ப்பு.**

---

5. *The Sun and the serpent* by C.F. Oldham, ch, x-xi.
6. *Indian serpent* - lore or The Nagas in Hindu legend and Art - by J.P.H vogel, Ph.d.
7. *Iconographi of sorthern India,* by. G. Jonvean Dabreuil.
8. *South Indian Images of Gods and Goddesses* - by H. Krishna Sastri.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம் முழுமையிலும் நாகத்தின் புனிதம்

வரலாற்றுக்கால ஆரம்பத்தில் **பாம்பு,** பகல்வழிபாடுகள் நன்றாக வளர்ச்சியடைந்திருந்தன. மிகப்பழங்காலத்தில் யூபி ரோதசுக்கும் இந்து நதிக்கும் இடையில் இவ்வழிபாடுகள் ஓங்கியிருந்தன. பபிலோனியாவிலும் அதனை அடுத்த நாடுகளி லும் பண்டை நாட்களில் ஞாயிற்று- **பாம்பு** வழிபாடுகளே இருந்தன. **பாபிலோன் மக்களின் ஆதித் தெய்வங்களுள் ஒன்று ஈஆ. இது ஏழு தலை நாகவடிவுடையது.** சூரியனும் **நாகமும்** பீனிசீயரால் வணங்கப்பட்டன. கிரேக்கர் ஞாயிற்றையும் **பாம்பை யும்** வணங்கினார்கள். எகிப்தில் ஆதிகாலமுதல் பகலும் பட முள்ள **பாம்பும்** வணங்கப்பட்டு வந்தன.[9] மஞ்சூரிய மக்களின் **பாம்புத் தெய்வங்கள் இன்றும் ஆறுகளுக்கும் மழைக்கும் அதிப திகள்.** யப்பானியர் ஐதிகத்தின்படி மலைத் தெய்வங்கள் பாம்பு வடிவங்களை எடுத்துள்ளன. இந்நாடுகளில் ஞாயிற்று, பாம்பு வழிபாட்டு முறைகள் இந்தியாவிற் காணப்படுவனபோன்றன. சேரநாடு **நாகர்** நாடு எனப்படும். சாரை என்பதே சேர என வந்தது. **இன்றும் ஒவ்வொரு நாயர் சாதியினரின் கொல்லையிலும் நாகத்தெய்வங்கள் வழிபடப்படுகின்றன.**

கிறித்துவ ஆண்டின் முற்பகுதிகளிற் சீன யாத்திரிகர்கள் இந்தியாவுக்குச் செல்லும் வழியிற் **பாம்புத்** தெய்வங்கள் எல்லா ஆறுகளையும் குளங்களையும் ஆள்வதைக் கண்டனர். **திபெத்தில் இன்றும் குளங்களும், நீரூற்றுக்களும் பாம்புத் தெய்வங் களால் ஆளப்படுகின்றன. பேருவில் கசமர்க்கா என்னுமிடத்தில் பாம்பு ஆலயத்திற் பாம்பு வடிவக்கல் இருந்தது.**

**பாம்பு வழிபாடு இந்தியாவில் ஆரம்பித்ததென ஆராய்ச்சியாளர் துணிவர்.**[10]

---

9. The lotus and hooded snakes were in Egypt, which make it probable that the religions symbols of both lountries originally came form the Hindus. The symbolical *language of Ancient Art and Mythology,* p. 109.

10. The mythical serpent of the Hindus too is generally represented with five heads to signify perhaps the five senses, but



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகர் வரலாறு

புத்த(ர்)பிரான் நாகருக்காக இலங்கைக்கு இரண்டாவது முறை வருகை தந்த போது, நாகதீபத்திலுள்ள ஜம்புக்கோளப் பட்டினத்தில் நாகர்களைத் தன் போதனைகளைத் தழுவச் செய்தார் என மகிந்தர் தேவநம்பபியதீசனுக்கு எடுத்துரைத்தார். இப்பழம்பெயரைக் கொண்டே, யாழ் குடாநாட்டில் வசித்த ஆதிநாகர் குடிகள் பௌத்தத்தைச் சமயப்பொறையுடன் தழுவினர் என்பதனையே நாம் அறியமுடிகிறது. அதேபோல் இங்கு வாழ்ந்த பழந்தமிழ்க்குடிமக்களும் சமயப்பொறையும், இன எதிர்ப்புத் தன்மையுமுடையவர்களாக இருந்தார்கள் என்பதினை எடுத்துரைப்பதற்கும் இப்பழம் பெயர் ஆதாரமாகின் றது. எடுத்துக்காட்டாகச் சங்கமித்தையும், பௌத்தசங்கத்தின ரும் வெள்ளரசமரத்துடன் ஜம்புகோளத்துறையில் இறங்கியே பாதயாத்திரையாக அதனை அனுராதபுரத்திற்கு எடுத்துச் சென்றனர். மேலும் இந்நிகழ்ச்சியை நினைவூட்டுமுகமாக அங்கு ஒரு விகாரையும் எடுப்பித்தனர். (*மகாவம்சம்,* XX:25.) இத்த கைய சந்தர்ப்பங்களில் ஆதி நாகர்களோ அல்லது பழந்தமிழ்க் குடிகளோ பௌத்தமதத்தவருக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. இவர்கள் காட்டிய ஆதரவும் வரவேற்புமே சுமுகமானமுறையிற் பௌத்த மதத்தைச் சிங்கள மக்கள் காலப்போக்கில் தழுவவழி வகுத்தது எனலாம். தென்கிழக்குப் பகுதியில் நனிகிரி, நாகதும என்ற இரு பிரிவுகளை இவர் குறிப்பிடுவர். இவையே *மகாவ மிசம்* குறிப்பிடுகின்ற மணிநாக பவத, நாகபவத என்பவை களாகும். கே.ஆர். சின்னத்தம்பி இப்பிரிவுகளை அடையாளம்

---

still it is the hooded snake, which we believe to be a native of India, and consequently to have been orignally employed as a religions symbol in the country from whence the Egypthians and Phonecians probably borrowed it and transmitted it to the Greeks and Romans upon whose bracilets and other symbolic ornamants we frequently find it. *(Symbolical language of Ancient Art Mythology,* p. 16.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணும் போது நனிகிரி என்ற பிரிவை தென்கிழக்கு இலங்கை யெனவும் நாகதும பிரிவு நாகமகாவிகாரை கட்டப்பெற்ற திஸ்ஸமகாராமப் பகுதி எனவும் அடையாளம் காண்பர்.[11]

மேலும், நாகமகா விகாரையை ஈழநாகன் (கி.பி.93-102) கட்டியிருக்கலாம் என்பர். ஆனால் *மகாவமிசம்*(XXII, 9) மகா நாகன் கட்டியதாகக் குறிப்பிடும். ஆயினும் அவன் ஆதியிலி ருந்தே புத்தருடன் தொடர்புபடுத்தப்பட்ட நாகதீவு என்ற தீவி னை முல்லைத்தீவிற்கும் கொக்கிளாய்க்குமிடைப்பட்ட பகுதி களாகக் கொள்வர். மகோதரநாகன் ஆண்டபிரிவு கடலாற் சூழப்பட்ட ஒரு தனித்தீவு என *மகாவமிசம்* (1- 45) தெளிவாகக் குறிப்பிடும்.[12] *மணிமேகலை* (VI-211-214) **காவேரிப்பட்டினத் திற்குத் தெற்காக முப்பது யோசனை தூரத்திற் கடல் சூழ்ந்த மணிபல்லவம் அமைந்துள்ளது என்கிறது.** *சசோனி ஜாதகம* (Sassoni Jataka) இல. 360 **நாகதீவைச் செருமதீவு எனவும், அது கருடனின் இருப்பிட மெனவும் வருணிக்கிறது. இந்த ஜாதகக் கதை இன்றைய நயினாதீவின் பழைய வரலாற்றையே குறிப்பிடு கின்றது.** அதாவது **நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மனைப்** பூசித்து வந்த **நாகத்தினை** எவ்விதம் கருடன் தாக்கியது என்ற வரலாற் றினையே இப்பெயர் வரலாறு குறிப்பிடுவதாகும். மேலும் *வலாஹச ஜாதகம்* (196), **'கடலோர மாதகக் கல்யாணி (கள னியா) ஒரு பக்கத்திலும், நாகதீபம் இந் தப்பக்கத்திலும்' எனக் குறிப்பிடுவதனால் ஒரே திசையில் வட மேற்கிலமைந்துள்ள நாகதீவையே (நயினாதீவை) தெளிவாக புவியியலடிப் படையிற் காட்டியுள்ளது.** வலாஹசஜாதகத்தை மொழி யெர்த்த டாக்டர் ரௌஸ் (Dr. Rouse) **இலங்கையுடன் இணையாத தனித்தீவா கவே இதனைக் கருதுகிறார்.**[13] *மகாவம்சத்தை* மொழிபெயர்த்த ரேனர் (Turnour) என்பவரும் இக்கருத்தினையே தெரிவிப்பர். காலப்போக்கில் இந்நிலை மாறி நகர்ப்பகுதிகள், எல்லைகள் விரிவாக்கம் பெறுகின்றன. அதனால் வரலாற்றுக் காலத்தில்

**11.** Sinnathamby, J.R. Ceylon in Ptolemy's *Geography,* 1968, p.31.

12. *மகாவம்சம்,* 1 : 45, 46, 60

**13.** Rouse, Dr , *Jatakas,* No ii, pp. 90 and Index pp. 312.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாகதீபம்** என்ற பிரிவு இலங்கையின் வடமாகாணத்தைக் குறித்ததாகக் ஹெய்கர் கருதுவர்.[14] 'செலிக்மன்' கிறித்து சகாப்தத்தின் பல நூற்றாண்டுகளுக்குப் பின் **நாகதீபம்** என்பது மஹாவில்லாச்சியவிற்கு வடக்கேயுள்ள பகுதியைக் குறித்த தென்பர்.[15] *விட்டிபொத், கடம்பொத்* (கி.பி.1345இல் எழுதப்பட்ட நூல்கள்) ஆகிய சிங்கள நூல்களை ஆதாரமாகக் கொண்டு W.H.D சில்வா **நாகதீபம்** என்பது வடபிரிவினைக் குறிக்கும் என்பர்.[16] காசிச்செட்டி யாழ்குடாவே **நாகதீபம்** எனக் கொள் வர்.[17] போல் (Paul) இலங்கையின் மேற்குப்பாகத்திலுள்ள குடாப்பிரிவு, களனியாற்றைத் தலைநகராகக் கொண்டு நாகராட் சியிலிருந்தது என்பர்.[18] H.பாக்கர் இலங்கையின் மேற்குப்பகு தியிலும், சிறப்பாக வடபகுதியிலும் **நாகர்கள்** வாழ்ந்தனர் என்றும், ஆனால் வடபகுதியே வரலாற்றிற் பல நூற்றாண்டுக ளாக **நாகதீபம்** என அழைக்கப்பட்டு வந்ததெனவும் கூறுவர்.[19] மேலும் அவர், புத்தரால் நாகர்கள் மதமாற்றம் செய்யப்பட்ட பின்னர், அவர்கள் பற்றிய குறிப்புக்கள் தெளிவாக வரலாற்று நூல்களில் இல்லை யெனவும், **நாகதீபம் என்ற பெயரே இங்கு ஒரு காலத்தில் நாகர்கள் வாழ்ந்திருக்கலாம் எனக் கருதக் கூடிய சான்றாக அமைகிறது எனவும் கருதுவர்.** செ.குணசிங்கம் என்ப வர் கோகர்ணக் கடற்கரையில் **மகா நாகன்** (கி.பி.556 - 559) செய்த நாகவழிபாட்டை ஆதாரமாகக் கொண்டு (*சூளவம்சம்*, 41:75- 87) **நாக** வழிபாட்டையுடைய **நாகர் குடிகள் ஆரம்பகாலத் தில் திருகோணமலைப் பகுதியில் வாழ்ந்திருந்தார்கள்** என்பதினை வற்புறுத்துவதோடு, **நாக** எனப்பட்டது இலங்கையின் வடபகுதி, (கிழக்கு, மேற்குப்பகுதி உட்பட) முழுவதையும் உள்ளடக்கியி ருந்ததென்றும் அதன் தென்னெல்லையை நிச்சயிக்துக்

**14.** Geiger, W. Culture in Mediaeval *times,* ed. by Heinz Bechert,1960.
**15.** Seligman, *Veddhas,* pp. 26.
**16.** Silva W.A.de., J.R.A.S (C.B) Vol .30, 1925, pp. 315.
**17.** Casizhetty, J.R.A.S (C.B) Vol .31, No. 82.
**18.** Paul Peiries, J.R.A.S (C.B) Vol .31, No. 82.
**19.** Parker , H., *Ancient* Ceylon, 1909, pp. 14.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளல் தற்போதைய நிலையில் முடியாததொன்று எனவும் கூறுவர்.(*கலாநிதி செ.குணசிங்கம், கோணேஸ்வரம்*, 1973.)

'**நாகதீபத்தின்** அரசியல் வரலாற்றைக் குழப்பமின்றி அறிந்து கொள்ளக்கூடிய தகவல்களைப் பெறுவதில் பல இடர்பாடுகள் எம்மை எதிர் நோக்கியுள்ளன.*மணிமேகலை, மகாவம்சக்* குறிப்புக்களிலிருந்து, ஆதி நாக அரசுகள் கி.மு. 6, கி.பி.2 ஆம் நூற்றாண்டு வரை தென்னிந்தியாவின் நிலப்பரப்பான கந்தமாதன (இராமேஸ்வரப்பிரிவு) நாக அரசுகளுடன் தொடர்பு படுத்தப் பட்டிருந்தன என்பதனை நாம் அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது. ஆரம்பத்தில் இந்த நாக அரசுகள், நாகதீபத்தை மட்டுமன்றித் தீவில் மேற்குக் கரையோரமாகக் கல்யாணி வரை (இன்றைய களனியா) தமது ஆட்சியை விஸ்தரித்திருந்தன. காங்கேயத்தில் இருந்த நாக அரசு கிழக்குக் கரையோரமாகத் திஸ்ஸமகாராம வரையும் தமது ஆதிக்கத்தை விரிவாக்கம் செய்திருந்தமையைத் தொலமியின் புவியியற்படம் எடுத்துக் காட்டுகின்றது. ஆனால் வடபகுதியில் நாகதீபம் தவிர்ந்த பகுதியில் இடையிடையே சிங்கள அரசின் செல்வாக்கிற்குட்பட்டவையாக இருந்திருக்கின்றன''.[20]

தன்னிச்சையான பல குறுநில அரசுகள் நாகதீபத்திற் காலந்தோறும் உருவாகியிருந்தாலும் கி.மு இரண்டாம் நூற்றாண்டின் இறுதிக்காலத்திலே நாகதீபத்தில் ஒரு தமிழரசு முதன் முதலாகத் தன்னை அதிகாரபூர்வமாகப் பிரகடனப்படுத்தியிருக்கலாம் எனத்தெரிகின்றது. அதுவரை காலமும் நாகதீபத்தினதும் இலங்கைத்தீவினதும் கரையேரத் துறைகளில் இயங்கி வந்த சுதந்திர வர்த்தக நிறுவனங்களின் நிர்வாகத்தில் ஈடுபாடில்லாது, ஒரு நாட்டு மக்கள் அனைவரையும் கட்டியாள வேண்

---

20.தனபாக்கியம் குணபாலசிங்கம், (1988), *இலங்கையிற் தொல்லியலாய்வுகளும் திராவிடக் கலாசாரமும்*, சென். ஜோசப் கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு, ப.200.



[stamp]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும் என்ற அவாவினால், இலங்கைத் தீவின் அரசாட்சியைக் கைப்பற்றினார்கள் சேனன், குட்டகன் எனும் வர்த்தகப் பெரு மக்கள். பின் எல்லாளன் எனும் சோழ இளவரசன் இலங்கை முழுவதையும் தன் ஆட்சிக்குட்படுத்தினான்.

பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை சுவாமிஞானப்பிரகாசர், முத லியார் இராசநாயகம் முதலானோர் நாகதீபத்தின் பழைய இராஜ தானி சிங்கைநகரென அழைக்கப்பட்ட வல்லிபுரப்பகுதி என்பர்.

சோழராட்சிக்குப்பின் நாகதீபம் (யாழ் குடா) சேதுபதி மன்னர் களின் ஆட்சிக்குட்பட்டதாகத் தெரிகின்றது. குலோத்துங்கன் II (கி.பி.1133-1150) காலத்தவரான புகழேந்திப்புலவர் நாக தீபத்தினையும், இராமேஸ்வரத்தையும் ஆண்ட பாண்டிய அரசன் சிங்கையாரியசேகரனைப் பற்றிப் புகழ்ந்து பாடியுள்ளார்.[21]

இலங்கையில் விக்ரமபாகுவின் (கி.பி. 1116 - 1137) ஆட்சியிற் பாலந்தீவு அரசனான வீரதேவ, படையுடன் மாதோட்டத்தில் வந்திறங்கினான் எனச் *சூளவம்சம்* குறிப்பிடும். (சூளவம்சம் 61 : 36 - 37) *சூளவம்சம்* குறிப்பிடும் பாலந்தீவு இராமேசுவரப் பிரிவேயாம். **ஆதிநாகர் காலத்தில் நாகதீபம் இராமேஸ்வர அரசின் பகுதியாக இருந்து வந்ததுபோலச், சேதுபதி மன்னர்கள் காலத் திலும் இருந்துவந்துள்ளது என்று இக்குறிப்புக்களிலிருந்து அறிவுறுத் தப்படுகின்றது.** இதனை மேலும் வலியுறுத்தும் வகையில் மார்கோபோலோ கி.பி.1290 இல் யாழ்குடா மன்னனைப்பற்றிக் குறிப்பிடுமிடத்து அப்பகுதி சந்தமான் (Sandaman)என அழைக கப்படும் மன்னனால் ஆளப்பட்டது என்பர். இங்கு சந்தமான் என்பது சேதுமானன் எனும் சேதுபதி மன்னர்களே ஆவர். பாண் டிய வமிசத்துத் தொடர்புபூண்ட முதலாம் பராக்கிரமபாகுவின் (கி.பி.1153-1186) ஆட்சியில் ஜம்புத்தீவு (நாகதீபம்) தானாகவே இலங்கைத்தீவுடன் இணைந்ததெனச் சூளவம்சம் கூறினாலும், முதலாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக்குப்பின் நாகதீபம் சேது பதிமன்னரின் நிருவாகத்தின் கீழ் இருந்தமையை மேற்கூறிய

21.*தமிழ்நாகர் சரிதை,* பாட்டு, 16.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாரங்கள் உறுதிப்படுத்துகின்றன. மேலும் **முதலாம் பராக்கிரமபாகுவின் நயினாதீவுக் கல்வெட்டு அவன் அங்கு வாழ்ந்த தமிழ்மக்களுக்காக எழுது வித்ததொன்றாகும். இதனாற் பௌத்தப் புனிதத் தலமான நயினாதீவு பராக்கிரமபாகுவின் காலத்திற் சிங்களமயமாக்கப்பட்ட பிரதேசமல்ல என்று தெரிகின்றது.**[22]

## கல்வெட்டுக்களில் நாகவழிபாட்டுச் சான்றுகள்

**இலக்கியங்கள் குறிக்கும் நாகவழிபாடு பற்றிய கருத்தினை உறுதி செய்வனவாக ஈழத்தின் பழைய கல்வெட்டுக்களாகிய பிராமிக் கல்வெட்டுக்கள் கூறும் செய்திகள் அமைந்துள்ளன. இவற் றுள் பெரும்பாலானவை கிறிஸ்தவத்திற்கு முற்பட்டவை.** இக்கல் வெட்டுக்கள் கருங்கற் பாறைகள் காணப்பட்ட இடங்களிற்றான் வெட்டப்பட்டன. இத்தகைய பாறைகளில் அமைந்த குகைகள் பௌத்த துறவிக்குத் தானங்களாக ஆக்கப்பட்டன.

வடபகுதியிலுள்ள வவுனியா மாவட்டத்தில் **'நாக'** என்ற பெயருள்ள சிற்றரசர் இருந்ததற்கான சான்றுகள் காணப்படுவ தாலும், நாகதீபம் என்ற பெயர் ஈழத்தின் வடபகுதியை உள்ள டக்கிக் காணப்பட்டதாலும் நாக அரசர்கள் பற்றிய குறிப்பு *மகாவம்சத்தில்* காணப்படுவதாலும், வடபகுதியும் பிறபகுதிகள் போன்று நாக வழிபாட்டிற்றிழைத்திருந்ததென்பதில் சந்தேக மில்லை. ஏறத்தாள 90 கல்வெட்டுக்களில் **'நாக'** என்ற அடை மொழியுடன் காணப்படும் பெயர்கள் சிவ, விஷ்ணு வழிபாடுக ளுக்கு முன்னர் நாகவழிபாடு ஈழத்தில் தழைத்திருந்ததை எடுத்தியம்பும் அதேவேளை இத்தகைய வழிபாட்டைத் தழுவி யோர் பிற்காலத்தில் பௌத்த, இந்து சமயங்களுக்கு மாறிய தையும் எடுத்துக் காட்டுகின்றன.

**'நாககுலம்' பற்றிய குறிப்பு இரண்டு கல்வெட்டுக்களில் உள்ளது.** அம்பாறை மாவட்டத்தில் 'பம்பரகஸ்தலாவை' யிலும், குருநாகல் மாவட்டத்தில் 'ஹிப்பவுவ' என்ற இடத்திலும் உள்

22.தனபாக்கியம் ஜி., (1988), *மு.கு.நூ,* ப.205.



பொதுசன நூலகம் யாழ்ப்பாணம், விசேட சேர்க்கைப் பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளன. இக்கல்வெட்டில் 'பருமகன்' என்ற பட்டப் பெயரைத் தாங்கிய நாககுலத்தினைச் சேர்ந்த வருமான அதிகாரி ஒருவன் குறிக்கப்படுகின்றான்.

'பம்பரகஸ்தலாவ' கல்வெட்டில் **'நாகபவத' (நாகபப்பத) 'நககமிய'** என்ற பதங்கள் பற்றியும் குறிப்பிடுதல் அவசியமாகின்றது. இது **'நாகமலை'** என்ற பதத்திலிருந்து மருவியிருக்கலாம். **நாகபாம்புகள் புற்றெடுக்கும் இடம் சிறுமலை போலக் காட்சியளிப்பது வழக்கம்.** இதனாற் போலும் இவ்வாறு அழைக்கப்பட்டிருக்கவேண்டும். இப்புற்றுக்கள் பெரும்பாலும் மரங்களின் கீழே அமைவதுண்டு. *பெரும்பாணாற்றுப்படை*யில் (232 - 233) மருத மரத்தின் கீழ் உள்ள புற்றிலுள்ள பாம்புக்கு அம்மரத்திலுள்ள தெய்வத்திற்கும் அளிக்கப்பட்ட நிவேதனம் பற்றிக் காணப்படும் பின்வரும் குறிப்பு மனங்கொள்ளத்தக்கது.

"பாம்புறை மருதினோங்கு சினை நீழற்
பலிபெறு வியன்கள மலிய வேற்றி."

(*பெரும்பாண்*.232-233)

குருநாகல் மாவட்டத்திலுள்ள கல்வால விகாரைக் கல்வெட்டில் (1049) **'நாககமிய'** என்ற பதம் காணப்படுகின்றது. இது ஒரு சமயம் **நாகங்கள் வாழும் கிராமத்தைக் (நாககம) குறிக்கலாம் எனக் கூறுவர் பேராசிரியர் கலாநிதி சி.க. சிற்றம்பலம்.** பழைய மலையரட்டைப் பிரதேசத்திலும் (மலைநாடு) நாகவழிபாட்டிற் திளைத்திருந்த மன்னர்கள் ஆட்சி நடாத்தியதைப் பிராமிக் கல்வெட்டுக்கள் எடுத்தியம்புகின்றன. கண்டி மாவட்டத்தில் பம்பரகல, கோணவத்த ஆகிய இடங்களிலுள்ள இரு கல்வெட்டுக்கள் இங்கே ஆட்சிசெய்த **'நாக'** என்ற பெயரைத் தாங்கிய குறுநில மன்னர்களின் ஆட்சி பற்றிக் கூறுகின்றன. **'நாக' என்ற பெயரைத்தாங்கிய மூன்று பிராமிக் கல் வெட்டுக்கள் அநுராதபுரம், குருநாகல், மொனராகலை ஆகிய மாவட்டங்களுள்ள அநுராதபுரமாவட்டத்திலுள.** பில்லாவேகலக் கல்வெட்டில் **நாகராஜாவின் ஆட்சிக்** காலத்தில் பௌத்தகுருமாருக்கு அளிக்கப்பட்ட வதிவிடம் பற்றிக் குறிப்புண்டு. குருநாகல் மாவட்டத்திலுள்ள கதுறு வெலக்கல்வெட்டில் நாகரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜாவின் ஆட்சிக் காலத்தில் அளிக்கப்பட்ட குனகத்தானம் பற்றிய குறிப்புண்டு. ***சூளவம்சத்தின்*** **மன்னனொருவனுக்கு நாக மொன்று கொடுத்த மணிபற்றிச்** ***சிறுபாணாற்றுப்படையில்*** **(895 - 899) குறிக்கப்பட்டுள்ளமை ஈண்டு நினைவு கூரற்பாலது.**


பௌத்தம் இலங்கைக்கு வந்தபோது நாகவணக்கமும் இந்நாட்டின் ஆதிவழிபாடுகளில் ஒன்றாக இருந்ததென்று தெரிகின்றது. இவ் வழிபாட்டு முறைகளுடன் பின்னர் இந்துக் கடவுளரின் வழிபாடுகள் சங்கமித்தன. **நாகவழிபாடு பற்றி நாம் ஆராய்ந்த சான்றுகள் இவ்வழிபாடு ஈழம் முழுவதையும் வியாபித் திருந்ததை எடுத்துக் காட்டுகின்றன.** அநேகமாகப் பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படும் இடங்களில் எல்லாம் இவ்வழி பாடுபற்றிய சான்றுகள் தெளிவாகக் கிடைக்கின்றன. இவை நாகதீபப் பகுதியில் வாழ்ந்த மக்களுக்குரிய வழிபாட்டை மட்டும் உணர்த்தவில்லை. **இதனால் நாகரை ஒரு வம்சத்தினர் என்று கருதுவது பொருந்தாது.**

**நாகபாம்புகள் சேஷ அல்லது அனந்த, வாசுகி, தடிக, திருதராஷ், ஐராவத, கார்க்கோடக என்ற பெயர்களினாலும் அழைக்கப்படுகின்றன.**

சமஸ்கிருத இலக்கியங்களில் **ஆதிசேஷனே** தனது தலையில் பூமியைத் தாங்கி நிற்கின்றான் என்ற ஐதிகம் உண்டு. இவ்வாதி சேஷனே தனது தோள்களை மாற்றிப் பாரத்தினைத் தாங்கும் போது பூமி அதிர்ச்சி ஏற்படுகின்றது என்ற நம்பிக்கையுண்டு. பாற்கடலில் அமிர்தத்தினைக் கடைவதற்கு வாசுகியைக் கயிறாகப் பயன்படுத்திய செய்தி விஷ்ணுவின் கூர்ம அவதாரம் பற்றிய குறிப்பிற் காணப்படுகின்றது. திரிபுரத்தினைச் சிவன் அழித்தபோது **பாம்பு** அவரது வில்லின் நாணாகப் பயன்பட்டது என்ற ஐதிகமும் உண்டு. சிவன், துர்க்கை, கணேசன், சூரியன் ஆகிய தெய்வங்கள் **நாகத்தினை** அணிகலமாகக் கொண்டுள் ளனர். *ஹரிவம்சத்தில்* கிருஷ் ணனால் **நாகமாகிய** காளியன் அடக்கப்பட்டது குறிப்பிடப்பட்டுள்ளது. விஷ்ணுவின் ஆசனமும் சேஷ அல்லது அனந்தனே. பலராமன் சேஷனது அவதாரமே என்று கூறப்படுகிறது. **முசலிந்த என்ற பாம்பினை புத்தர் அடிபணிய வைத்த செய்தி பௌத் தமத நூல்களில் உண்டு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கருடன் கல்லும் பாம்பு சுற்றிய கல்லும்
(கடல் மட்டத்திற்கு மேல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நாகபாம்பு வழிபாடு

'நாகவழிபாடு' தென்னாசியாவில் பழங்குடி மக்களின் வாழ்வோடு இணைந்த வழிபாடாகத் தோற்றம் பெற்று அன்று தொட்டுத் தென்னாசிய நாகரிகத்தில் செல்வாக்குச் செலுத்தி வரும் ஒரு வழிபாடாகக் காணப்படுகின்றது. செழிப்பு, வளம், சந்ததி விருத்தி போன்ற அம்சங்களைப் பிரதிபலிப்பனவாக இவை அமைந்தன. மரங்களின் கீழ் மட்டுமல்ல பிற இடங்களிலும் நாகங்கள் வாழ்ந்த புற்றுமண்ணை நோய் தீர்க்கும் மருந்தாகப் பயன்படுத்தும் மரபு அன்றுதொட்டு இன்றுவரை நிலவி வருகின்றது. மலட்டுத் தன்மையைப் போக்குவதற்கும் மக்களைப் பாதுகாப்பதற்கும் இவ் வழிபாடு இயற்றப் படுகின்றது. பண்டைய காலத்தில் நாகங்களின் பயத்தின் நிமித்தமும் இத்தகைய வழிபாடு தோன்றியிருக்கலாம். பாம்பைக் கொல்பவர்கள் பல்வகைத் துன்பத்திற்கு ஆளாவார் கள் என்ற நம்பிக்கையும் வளர்ச்சி பெற்றுள்ளது. அத்துடன் இறந்தவர்களே நாகபாம்பு உருவில் வீட்டுக்கு வருகிறார்கள் என்ற நம்பிக்கையும் காணப்படுகின்றது.

பாம்பின் சிலைகள் மரங்களின் கீழும் ஆற்றோரம், நீர் நிலைகள், கோயில்கள் ஆகிய இடங்களிலும் வைத்து வழிபடப்பட்டன. நீர் நிலைகளிலே நீராடி ஆற்றின் கரையிலே நாகத்தின் சிலைகளை அமைத்துத் தொடர்ந்து நாற்பது நாட்களுக்கு அவற்றிற்கு அபிஷேகம் செய்து அலங்கரித்து வழிபடல் மூலம் பெண்களின் மலட்டுத் தன்மை நீங்கும் என்ற நம்பிக்கையும் உண்டு. இவ்வாறு அனுஷ்டிக்கும் வழிபாட்டின் மூலம் மகப்பேறு கிடைத்ததும் அதற்கான பிராயச்சித்தமாக ஒரு நாகசிலையை, நாகங்கள் காணப்படும் ஆற்றோரங்களிலும் மரங்களின் கீழும் சேர்க்கும் வழக்கம் உண்டு. இவ்வாறு நேர்த்திக் கடனுடன் மேற்கொள்ளும் நாகபூசை, அஸ்வமேதம் அல்லது புத்திரகாமேஷ்டி போன்ற யாகங்களுக்குச் சமமானது என்ற நம்பிக்கை உண்டு. இவற்றைவிட நேர்த்திக் கடனாக நாகச் சிலைகளை ஆலயங் களுக்கு அளிக்கும் வழக்கமும் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கைலைக் காட்சியுடன்
நயினை
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகவழிபாடும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மனும்

கல்வியெனும் பல்கடலில் வீழ்ந்த மக்கள் இவ்வாறு **நாக தீபத்தைப்**பற்றி ஆராய்ந்து முடிவு கட்டாதிருந்தபோதிலும் பௌத்தப் பொதுமக்களுக்குஞ் சைனீஸ் பொதுமக்களும் நயினாதீவு தான் புத்தர் தரிசித்த புனிதத்தலமெனவும் **நாகேஸ்வரி கோயில்** கொண்டெழுந்தருளியிருக்கும் அருட்டலமெனவுங் கருதி யாத்திரை செல்கின்றார்கள். **இன்று நயினாதீவு நித்திய யாத்திரைத்தலமாக விளங்குகிறது.** ஆய்வுக்கும், அனுஷ்டானத்திற்குமுரிய பேதங்களையும் இவ்விடத்திலே எண்ணலாமல்லவா! நம்பிக்கையே வழிபாட்டின் அடிப்படை. **வழக்காறுகள் சான்றுகளா?** என்ற விவாதம் சுவாரஸ்யமானது.

## சக்தியும் சிவமும்

சக்திபீடங்கள் அறுபத்துநான்கினுள் ஸ்ரீ புவனேஸ்வரி பீடமும் திரிபுரபைரவி பீடமும் **மணித்தீவி**லுள்ளன என்று *பிரபஞ்ச உற்பத்தி, யாமள தாண்டகம்* முதலிய நூல்கள் குறிப்பிடுவதாலும் **நயினாதீவிலுள்ள அம்பாள் ஆலயம் ஒரு சக்திபீடமாகக் கருதி வழிபாடியற்றப்பட்டு வருகின்றமையாலும் நயினாதீவு மணித்தீவு எனும் பெயர் பெறலாயிற்று. புவனேஸ்வரியின் மகத்துவத்தை அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசாமிக்குருக்கள் பக்தி சிரத்தையுடன் விரிவாக எழுதியுள்ளார். எனினும் கோயிற் கட்டியத்தில் அம்பாள் நாகராஜேஸ்வரி என்றே போற்றப்படுகிறாள்.** அம்பாள் அநேக அம்சங்கள் உடையவள். யார் யார் எந்த அம்சத்தை விசேடமாகப் பெறவிரும்புகின்றனரோ அதற்கேற்ற தேவியம்சத்தைப் பெரிதும் போற்றி வணங்குகின்றனர். உற்று நோக்குமிடத்து, **பிரபஞ்சத்தைத் தோற்றுவித்து நடத்துகின்ற பராசக்தி பரமசிவத்தின் வேறானதன்று என்பது புலப்படும். விளக்கும் ஒளியும் போல சக்தியும் சிவமும் ஒன்றே. இவையிரண்டும் பின்னிப் பிணைந்தவை.**



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி
205549
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இன்றும் ஆலயத்திலுள்ள மகாபராக்கிரமபாகுவின் கல்வெட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அருளது சக்தியாகும்
அரன்றனக்கு அருளையின்றித்
தெருள் சிவம் இல்லை அந்தச்
சிவமின்றிச் சக்தி இல்லை."

எனச் *சிவஞானசித்தியாரிற்* கூறியிருப்பது நோக்குக.


## நயினாதீவுச் சிலாசாசனம் (கல்வெட்டு)

**நயினை ஸ்ரீ நாகபூஷணியம்பாள்** கோயிலின் தென் கோபுரவாயிலில் இந்தச் சிலாசாசனம் தற்போது காணப்படுகின் றது. 1922 ஆம் ஆண்டு மாசி மாதம் நல்லூர்ச் சுவாமி ஞானப்பிரகாசர் நயினாதீவுக்குச் சென்றபொழுது சாசனக் கல்வெட்டை அக்கோயிற் பூசகர் பிரம்மஸ்ரீ நா.சாமிநாதக் குருக்கள் அவர்களுடைய உத்தரவோடு புரட்டுவித்துப் பின்னர் 'லோசன்' எனும் திராவகத்தைக் கொண்டு கல்லை நன்றாக உரோஞ்சிக் கழுவிப் புகைப்படம் எடுப்பித்துக் கொண்டு திரும்பினார்கள். இந்தப்படத்தை முதலில் இராசநாயகம் அவர்கள் சாமியாரிடமிருந்து பெற்று முழுச்சாசனத்தையுந் தெளிவாக வாசித்துத் தமது *புராதன யாழ்ப்பாணம்* எனும் நூலிற் பதிப்பித்தார். யாழ்ப்பாணச் சரித்திரத்திற் கரிசனை கொள்ளு மாறு இச் சாசனம் உள்ளது. சாசனவாசகங்கள் வருமாறு:-

**"ஊராத்துறையிற் பரதேசிகள் வந்து இருக்க வேணு மென்றும் இவர்களின் ரஷைப்பட வேணுமென்றும் பு(து)துறைகளில் பரதேசிகள் வந்த(ாலித்) துறையிலே(ல) சந்திக்க(ே)வனு மென்றும் நா(வாய) ஆனை குதிரையொடு(ம்) பண்டார சேவைக்கு ஆனை குதிரை கொடுவந்த மரக்கலங் கெட்டதுண்டாகில் நாலத்தொன்று பண்ட(ா)த்துக்கு கொண்டு மூன்று கூறும் (உ)டைய வனுக்கு விடக்கடவதாகவும் வாணிப**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ நாகபூஷணி அம்மை

ஸ்ரீ நாகபூஷணி அம்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரக்கலங் கேட்ட துண்டாகில் செம்பாகம் பண்டாரத்துக்குக் கொண்டு செம்பாகம் உடையவனுக்கு விடக்கடவதாவும் இவ்வயவ ஸதை தித்து... தனையுங் கல்லிலுஞ் செம்பிலும் எழுத்து வெட்டுவித்து இவ்வயனஸதை செய்து கொடுத்து தேவபராக்கறம பூஜோ."

இந்தச் சிலாசாசனம் (கல்வெட்டை) மகாபராக்கிரமபாகுவால் 12 ஆம் நூற்றாண்டின் பழைய எழுத்துக்களிற் செதுக்கப்பட்டுள்ளது. நெடுந்தீவு, நயினாதீவு ஆகியவற்றையடுத்துள்ள கடற் பகுதி களின் கப்பல்கள் அடிக்கடி சேதமுற்றன என்பது இதனால் அறியக்கிடக்கின்றது. இன்றும் இக்கடல் மார்க்கம் முக்கியத்துவம் மிக்கதாகவே இலங்குகின்றமை மனங்கொளற் பாலது.

## ஸ்ரீ நாகபூஷணி அம்மை

"... ஸ்ரீ நாகபூஷணியம்மை எழுந்தருளியிருக்கும் ஆலயம் முதன்முதல் எக்காலத்தில் எவரால் ஆக்கப்பட்டதென அறியப்படாப் புராதனமுடையது. இந்தியாவிலுள்ள சிவஸ்தலங்கள் போல முற்காலத்தில் சிவசந்நிதி தேவசந்நிதி முதலியவற்றையும் ஏழு பிரகாரங்களையும் கோபுரங்களையும் கொண்டு விளங்கியது. செம்பினால் ஆக்கப்பட்ட தேரொன்றும் பவளரத்தினம் இழைத்துச் செய்யப்பட்டதேரொன்றும் இங்கேயிருந்தன. ஒரு சர்ப்பம் இங்கே நெடுநாள் வசித்துத் தவஞ்செய்து தனது சாபம் நீங்கப் பெற்றது. அதனைத் தமது திருமேனியில் அணிந்து சாப நிவர்த்தி செய்தருளியமையாற்றான் இங்கு எழுந் தருளிய அம்பிகை நாகபூஷணியென்னுந் திருநாமம் உடையராயினர்."

என்கிறார் நயினாதீவு ஸ்ரீமான் தியாகர் இராமச்சந்திரர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகம் அர்ச்சனை செய்த காட்சி

முன்னொரு காலத்தில் நயினாதீவிலுள்ள அம்பிகையை ஒரு **நாகம்** பூசித்துவந்ததாம். ஒரு நாள் அந் **நாகம்** அர்ச்சனை செய்தற்பொருட்டுப் பூக்கள் கொய்து கொண்டு புளியந்தீவி லிருந்து மீளும் வழியில் ஒரு கருடன் அதனைக் கொல்லும் பொருட்டு எதிர்த்துவந்தது. கருடனைக் கண்டஞ்சிய **நாகம்** கடற்கரைக்குச் சமீபத்திலிருந்த கல்லொன்றினைச் சுற்றிக் கொண்டிருந்தது. கருடனும் **அந்தநாகத்தைக்** கொல்லாமலும் அதனை விட்டகலாமலும் அதற்கெதிரேயிருந்த கல்லொன்றின் மீது இருந்தது. இவ்வண்ணம் இவையிரண்டும் பகைமை கொண்டிருக்கும் சமயத்தில், அக்கடல் வழியாக மரக்கலத்திற் சென்ற வைசிகன் ஒருவன் (மாநாய்கன் என்பர் சிலர்) அந் **நாகத்தின்** பயத்தைக் குறிப்பாலுணர்ந்து மரக்கலத்தை நிறுத்தி அக்கருடனை விலகும்படி கேட்டான். **'உனது செல்வம்யாவற் றையும் கொணர்ந்து நாகம்மாள் கோயிலுக்குக் கொடுப்பாயானால் விலகுவேன்'** என்றது கருடன். வணிகனும் அங்ஙனமே செய் தான். **நாகமும்** தனது நன்றியைச் செலுத்தி நயினாதீவை அடைந்தது. வணிகனும் தனது நாட்டுக்குத் திரும்பினான். நடந்தவற்றையெல்லாம் தன் மனைவியிடம் கூறினான். அன்றிரவு வணிகனும் மனைவியும் நித்திரை கொள்ளும் பொழுது ஒரு **பேரொளி தோன்றி அவர்களுடைய கண்க ளைச் சிறிது நேரம் கூசச் செய்தது. பின்பு அவர்கள் எழும்பிப் பார்த்த பொழுது நாகரத்தினக்கற்கள் அவ்வறையிலே இருப்பதைக் கண்டார்கள். நயினாதீவிலுள்ள அம்பிகையின் திருவருள் இருந்த வாறென்னே!** என அவர்கள் வியப்புற்று நயினாதீவுக்கு யாத்திரை செய்யப்புறப்பட்டார்கள். அவர்கள் நயினாதீவுக்குச் சென்று வடகிழக்குக் கடற்கரையில் **நாகம்மாளுக்குச்** சிறந்த தோர் ஆலயம் கட்டுவித்தார்கள். ஏழுவீதிகளும் கோபுரங்களும் அமைத்தார்கள். நயினாப்பட்டர் எனும் பிராமணக் குருவைப் பூசகராக நியமித்தார்கள். இத் தீவுக்கருகில் இப்பொழுதும் **பாம்பு சுற்றிய கல், கருடனிருந்த கல்** என இரு கற்களைப் பக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்கள் காட்டுகின்றார்கள். இக்கற்கள் அலைகளினால் மோதுண்டு இயற்கையாகப் பெற்ற வடிவங்களை ஆதாரமாகக் கொண்டு மேற்கூறிய கதைகள் உருவாகியிருத்தலும் கூடும். **இவ்விரு கற்களும் இன்றும் கடல் மட்டத்துக்கு மேலே நீண்டு கொண்டு காணப்படுவதுதான் உண்மை.**

நயினை நாகபூஷணி அம்மன் கோயிலுக்குப் பூசகராக வந்த நாயனார் பட்டர் அல்லது நயினார்பட்டர் நயினாதீவு தெற்கு மண்ணிப்புளி என்னும் இடத்தில் வாழ்ந்தனர் என்றும், அது இக்காலத்தில் பட்டர்வளவு என அழைக்கப்படுகின்ற தென்றும் சோதிடகலாநிதி சு.ஐயாத்துரை கூறியுள்ளார்.

## இந்திரலோகம் எனத் திகழும் சக்திபீடம்

இன்று நயினாதீவிலே 'இந்திர லோகம்' எனக் கூறத்தக்க வகையில் **ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்** சிறப்புற அமைந் துள்ளது. திருப்பணிகளை இனங்கண்டு அறங்காவலர் சபை யினர் காலத்துக்குக் காலம் நிறைவேற்றி வருவதுடன் 'சமய வழிபாட்டு மரபு' சீர்குலையாவண்ணம் பேணும் முறையிலும் பொறுப்புணர்வுடனும் தொண்டுபுரிந்துவருவது உலகச்சைவ, இந்துமக்களாலே பெரிதும் பாராட்டப்படுவதை அறியமுடிகிறது. இக்கருத்தின் பிரகாரம் **இலங்கையில் இப்புனித ஆலயத்தைப் போன்ற தொன்மையும் கீர்த்தியும் வாய்ந்த சக்திபீடம் பிறிதொன் றில்லையெனலாம். தனது அளப்பரும் பரங்கருணையினாலே உயிர்வர்க்கத்தை அரவணைப்பவள் ஸ்ரீ நாகபூஷணி அம்பிகை.**

மூலஸ்தானத்து மூலமூர்த்தியின் **விக்கிரகத்தின் அமைப்பைப் பார்த்தால் அது ஆயிரம் வருடங்களுக்கு முந்தியதாகப் புலப்ப டுகிறது.** ஆனால் மூலஸ்தானத்து நாகப்பிரதிஷ்டை இதற்கும் முன்னால் ஏற்பட்டிருக்கலாம். மூலஸ்தான விக்கிர கத்துக்குப் பின்னர் உள்ள நாகபடம் பார்க்கப் பயங்கரமாக இருக்கிறது; சீறுவதுபோல இருக்கிறது என்று காரைக்குடி எம்.செல்லக் கண்ணு ஸ்தபதி குறிபிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிந்திய சிற்பசாத்திர வல்லுநர் எம்.நரசிம்மன் அவர்களின் கருத்து வருமாறு,

**'நாகதீவில் மூலஸ்தானத்தில் அம்மன் உருவம்போல இருப்பது பழைய நாகப்பிரதிஷ்டையே. இதுமிகவும் தேய்ந்து அம்மன் உருவம் போலத் தெரிகிறது. இதற்குப் பின்னால் ஐந்தலை நாகப்பிரதிஷ்டை ஒன்றுண்டு. இந்தியாவிலும் நாகவழிபாட்டுக்கே பிரத்தியேகமாகவுள்ள இவ்வாறான புராதன கோயிலைக் காண்பதரிது. கலப்பற்ற தூய்மையான நாகவழிபாட்டுப் பண்பினை நயினாதீவிற் காணலாம். சரித்திர காலத்திற்கு எட்டாத காலந் தொடக் கமுள்ள கோயில் இது என்பது புலனாகின்றது."**

**உயிருள்ள நாகபாம்பு வழிபாடு கூட நயினாதீவில் இருந்த தெனச் செல்வி. சி.எவ்.கோர்டன் கம்மிங் குறிப்பிட்டிருப்பதாக. வண.ஜேம்ஸ் காட்மன் எடுத்துக்காட்டியுள்ளார். மணமுடித்து நெடுங்காலம் பிள்ளைப்பாக்கியம் இல்லாதிருக்கும் பெண்மணி கள் நாகராஜனை வழிபட்டு, நாகப்பிரதிஷ்டை செய்தால் கைம்மேற்பலன் உண்டாகும் என்ற நம்பிக்கை நம் மக்களிடையே இன்றுமுண்டு. நயினாதீவில் வேப்பமரத்தடியிலுள்ள நாகப்பிரதிஷ்டை இதனை வலியுறுத்துகின்றது.**

## போர்த்துக்கேயர் கோயிலை இடித்தலும், தீ வைத்தலும், தேரை அழித்தலும்

புராதனப் பெருமை வாய்ந்த **நயினை ஸ்ரீ நாகேஸ்வரி ஆலயம்** வர்த்தகரின் பொருள் கொண்டு விஸ்தரிக்கப்பட்டு விளங்கு வதைக் கண்ட போர்த்துக்கீசர் இதனைச் சும்மா விட்டுவைப் பார்களா? இந்த ஆலயத்தில் உள்ள பொருள் பண்டத்தை அபகரிக்கும் பேராசைபிடித்த போர்த்துக்கீசரும், பாதுகாப் பணியினரும் இதனை அழிக்கவும் கொழுத்தவும் தொடங்கினர். **கோயில் தரைமட்டமாக்கப்பட்டது. இந்த வன்முறையாளரின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொடிய செயலைக் கண்டு சைவமக்கள் அனலிடைப்பட்ட புழுப் போலத் துடிதுடித்தனர்.** தாங்கள் பக்தியுடன் வழிபட்டுவந்த மூர்த்திகளையும், பூசைப் பாத்திரங்களையும், தேர்களையும் அந்நியர் தீண்டக்கூடாதெனக் கருதிய சைவநன்மக்கள் அவற்றை வெவ்வேறிடங்களில் ஒளித்து வைத்தார்கள். அம்மனை மேற்குக் கடற்கரையிலுள்ள ஓர் ஆலமரப் பொந்தில் வைத்து வழிபட்டுவந்தனர். இந்தமரம் "அம்மாள் ஒளித்த ஆல்" என வழங்கப்பட்டதென ஓர் ஐதிக முண்டு. **அந்நியர் கோயிலை இடித்த போதிலும் அம்பாள் வழி பாட்டை நிறுத்த முடியவில்லை.** கோயிற் திருக்கதவினையும், தேர்களையும் தீவைத்தெரித்தார்கள். 'அரசபடை' தீவைக்கத் 'தொண்டர்படை' அத்தீயை அணைத்தது. **தொண்டர்க்கு நேரவிருந்த மரணம் கோயிலுக்காயிற்று. நாகம்மாள் நயினைதீவு மக்கள் ஒவ்வொரு வருடைய உள்ளங்களாகிய பெருங்கோயிலிலும் உறுதியான இடம்பெற்று விளங்குகிறாள்.** அந்நியமதத்தினரும் ஆக்கிரமிப் பாளரும் இன்னல் செய்தவிடத்தும்- ஊறுசெய்தவிடத்தும்- நயினாதீவு மக்கள் சைவப்பற்றினைக் கைவிடவில்லையென் பதனை இது உறுதிப்படுத்துகின்றது. இக்கோயிலை அந்நியர் அழிக்கவந்தபோது கோயிற் தேர் தானாகவே உருண்டு மேற் குக் கடலில் ஆழ்ந்துவிட்டதாம். ஒரு சமயம் அக்காலச் சைவமக்கள் அதனைக் கடலினுள் தள்ளிவிட்டிருத்தலுங் கூடும். சிற்சில காலங்களில் **'தேர்முடி கடலில் பௌர்ணமித் தினத்தில் தெரிகிறது'** என்ற ஒரு கதையும் அடிக்கடி கேட்கப்ப டுவதுமுண்டு. இது பண்டைக்காலத்தில் தேர்முதலானவை கடலினுள் தள்ளப்பட்ட நிகழ்ச்சியின் எதிரொலியாகவும் இருக் கலாம். இவ்வாலயத்திற்குச் சமீபமாகவிருக்கும் தென்னந் தோப்புகளிற் சிலவிடங்களிற் கிண்டிப்பார்த்த போது தரையின் கீழ்ப் பழைய கட்டடங்கள் காணப்பட்டன. திருக்குளமொன்று வெட்டியபொழுது கோயிற் பூசைக்குரிய வெண்கலப் பொருள் கள் சில வெளிக்கிளம்பின. இவை மேலும் ஆராயத்தக்கன.

டச்சுக்காரர் ஆட்சியின் பின்னர் நயினைதீவில் மீண்டும் நாகேஸ்வரி ஆலயம் சிறிய அளவிற் கட்டப்பெற்றது. எனினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே தாபிக்கப்பெற்றிருந்த சிவலிங்கத்தைச் சைவர்கள்தாம் மறைத்து வைத்திருந்த இடத்திற் காணாமற் பெரிதுங் கவலை கொண்டார்கள். எனினும் நயினாதீவுக்கு வடபால் உள்ள புலியேத்தி அல்லது புளியந்தீவு எனும் சிறுதீவில் பழைய சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதாகக் கேள்வியுற்ற சைவர்கள் ஒருவாறு மனந்தேறினார்கள். இக்கோயில் நாகதம்பிரான் கோயில் என அழைக்கப்படுகின்றது. புலியேத்தியிலுள்ள **நாகதம்பிரான்** கோயிலிலே தாபித்திருக்கும் சிவலிங்கம் **நயினாதீவு நாகேஸ்வரி** ஆலயத்தின் சுற்றுப்பிரகாரத்தில் முன்னரே பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த சிவலிங்கங்களுள் ஒன்றாயிருத்தல் கூடும் என்ற கொள்கையுமுண்டு.

டச்சுக்காரர் ஆட்சிக்குப் பின்னர் **நாகேச்சரத்தில்** தேவி ஆலயமே முதன்மை பெற்றுள்ளதெனக் கருத இடமுண்டு. அற்றன்று பண்டு தொட்டு இது தேவியாலயமாகவே விளங்கிற்று என வாதிப்பாருமுளர்.

அன்று **நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன்** கோயிலும் வீதியும் 15 பரப்பு வரை இருக்கும். மூர்த்தி, தலம், தீர்த்தம் எனுமும்மையாலும் சிறந்து விளங்குவது இந்த **நாகேஸ்வரி** ஆலயமாகும். கோயிலுக்குத் தென்புறத்திலும் வடபுறத்திலும் தீர்த்தங்கள் உண்டு.

யாழ் கச்சேரியிலுள்ள 'கோயில் இடாப்பு' 1882 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டது. இராமலிங்கர் இராமச்சந்திரன் 1788 இல் கட்டியது.

மனேச்சர் : இராமலிங்கர் கார்த்திகேசரும் பிறரும் கல்லுக் கட்டடம்.

**திருவிழா ஆண்டுக்கொருமுறை ஆனி 10ஆம் தேதி தொடக்கம் 20 ஆம் தேதிவரை 10 நாட்கள் என்று இடாப்பில் உண்டு. இன்று 15 நாட்கள் உயர்திருவிழா நடை பெறுகிறது.**

கிழக்குக் கோபுரம் 1935 ஆம் ஆண்டளவிற் கட்டப்பெற்றது. கருப்பகிருகம், அர்தமண்டபம், மகாமண்டபம் முதலியவற்றைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுள்ளது. கோயிலின் தென்புற உள்வீதியில் தேவஸ்தான அலுவலகம் (களஞ்சியம்) உண்டு.

இன்று கோயிலின் வெளி(மேற்கு) வீதியில் அறங்காவலர் சபையின் நிர்வாகப்பகுதி, கணக்குப்பகுதி, கணக்காய்வுப்பகுதி, தகவற்பகுதி என்பன உள்ளன.

உள்மேற்கு வீதியில் பிள்ளையார் கோயில், வாகனசாலை, சுப்பிரமணியர் கோயில் என்பன உண்டு. கிழக்கு வீதியில் நவக்கிரகங்கள், வைரவர் கோயில் முதலியன உண்டு. தேரோடும் வெளிவீதியில் அடர்ந்து செழித்த வேப்பமரங்கள் காணப்படுகின்றன. யாத்திரிகர் தங்குவதற்கு வசதியான கிழக்கு மடம், மேற்கு மடம், தெற்கு மடம், தென்மேற்கு (சோமபதி) மடம், வடமேற்கு (நகரத்தார்) மடம், வடக்கு (இளந்தளை யசிங்க முதலியார், வட்டுக்கோட்டை) மடம், குணரத்தின மடம் ஆகியன முன்னர் இருந்தன.

இன்று வடக்கு வெளிவீதியில் கல்யாணமண்டபத்துடன் கூடிய விடுதி மண்டபம் அமைந்துள்ளது. அங்குள்ள புதிய 'நூலகம்' குறிப்பிடத்தக்கது. **'நாகம்மாள்** நூலகத்துக்கு" வேண்டிய நூல்களை இன்று உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து தருவிக்க அறங்காவலர்சபை முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. **'நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் நூலகம்'** பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களுக்கும், பட்டதாரிகளாகப் பயிலும் உள்வாரி, வெளிவாரி மாணவருக்கும், கல்லூரி மாணவருக்கும் பிறருக்கும் பெரிதும் பயன் தரும் ஒன்றாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சைவசமயத்தின் வரலாற்றையும், ஆலய வரலாற்றையும், அம்பாள் வழிபாட்டு மரபுகளையும் அறிய இந்நூலகம் பேருதவிபுரியும்.

இவ்வாலய விமானம் 1951 ஆம் ஆண்டு தை மாதம் புனரமைக்கப்பட்டது. பாண்டியநாட்டுச் சிற்ப முறையில் இரண்டு நிலை விமானங்கள் அமைக்கப்பட்டன. 51.04.26 இல் புனராவர்த்தன சம்புரோக்ஷண மஹாகும்பாபிஷேகம் நடை பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய பூசையும் விழாவும்

உஷத்காலம், காலைச்சந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, அர்த்தசாமம் என ஐந்துகால நித்திய பூசைகள் நடை பெறுகின்றன. கோவிலுக்கென நித்திய மேளம் உண்டு. சிவன், அம்பாள், விநாயகர், சுப்பிரமணியர், விஷ்ணு முதலிய ஐவரின் பூசைத் தினங்கள் ஒவ்வொரு மாதத்திலும் நடைபெறும். ஆனி மாதத்தில் மகோற்சவம் நடைபெறும். புரட்டாதியில் நவராத்திரி பூசை சிறப்பாக நடைபெறும். பகலிற் சங்காபிஷேகம் இரவில் ஸ்ரீசக்கர பூசையும் நடைபெறுவதுடன் விஜயதசமியன்று அம்பாயுத பூசையும் வன்னிவிருட்ச பூசையும் நடைபெறும்.

**"நாகம்மாள் கோவிலில் பாரம்பரியமாகச் சந்தான கோபாலரைப் பிரதிஷ்டை செய்து அநேக பக்தர்கள் புத்திர-சந்தான முடையவர்களாய் மீண்டும் அம்பாளைத் தரிசனை செய்து விலைமதித்தற்கரிய திருவாபரணம், வாகனம், தீபம் முதலியவற் றைக் காணிக்கைகளாகக் கொடுத்திருக்கின்றனர். இந்தக் கோவிலில் அழகிய கைலாசவாகனம், சர்ப்பவாகனம், காம தனுவாகனம் குதிரை, காராம்பசு, நாகம், எலி, மயில், அன்னம், சிங்கம், மஞ்சம், சப்பரம் முதலியனவும் உள்ளன. இவையாவும் பக்தர்கள் காணிக்கையாகக் கொடுத்துதவியனவாகும்." என்று எழுதுகிறார் அறங்காவலர் சபையின் தலைவரும், பரம்பரை உறுப்பினருமான திரு.ஆறுமுகம் தியாகராசா அவர்கள்.**

## சர்வமதசந்நிதி நயினையாத்திரை - அன்று

"யாழ்ப்பாணத்திலே அலுப்பாந்தித்துறையிலிருந்து வத்தை அல்லது தோணி எனப்படும் மரக்கலங்களிலே நயினை யாத்திரிகர்கள் அம்பாள் தரிசனத்திற்குச் செல்லும் வழக்கம் அன்று இருந்தது. பாய்விரித்துச் செல்லும் இவை காற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதக பாதகங்களுக்கு ஏற்பத் திசைகளைமாற்றியும் வளைந்தும் மணிக்கணக்காகப்பயணம் செய்ய வேண்டியவையாய் இருந்தன. வெயில், மழையெல்லாம் யாத்திரிகர்களை வாட்டியெடுக்கும். தோணியின் ஆட்டங்கள் அசைவுக்கு ஆற்றாது பலர் வாந்தியெடுப்பதும், சோர்ந்து கிடப்பதும் யாத்திரையின் போது எதிர்கொள்ளும் அவலங்கள். யாத்திரையின் இறுதிக் கட்டத்தை நெருங்கும்போது ஏழாற்றுப்பிரிவு எனப்படும் நீர்ச்சுழற்சிப்பகுதியை கடக்கையில் தோணிகள் பயங்கரமாகத் தளம்பி இருபக்கங்களிலும் சரிந்தும் நிமிர்ந்தும் பெண்கள், சிறுவர் சிறுமிகளை அச்சுறுத்தி தோணியினுள்ளே நீர் வந்துவிடுமோ என்ற அச்சமும் தீவிரமாய் வாட்டும். "அம்பாளுக்கு அரோகரா நாகம்மாளுக்கு அரோகரா" என்ற கோஷம் எழுந்து இவர்களின் அச்சத்தை ஓட்டுவதும் நம்பிக்கையை நெஞ்சங்களில் ஊட்டுவதும் பக்தியை எழுப்புவதும் இயல்பாக நடந்தேறும். காலையில் தொடங்கும் யாத்திரை காற்றின் சாதகபாதங்களுக்கேற்ப மதியத்திலோ மாலையிலோ நிறைவு பெறும்.

சிலகாலத்தின் பின்பு பண்ணைப்பாலம் (தாம்போதி) அமைக்கப்பட்டதாலும், பண்ணையின் மறுகரையான மண்கும்பானிலிருந்து நெடுஞ்சாலை புங்குடுதீவினூடாகக் குறிகாட்டுவான் துறைவரை போடப்பட்டதாலும் பண்ணைச் சிறுகடலைப் படகுகளிற் கடந்து தரைப்பாதைவழியாக நடந்தோ, மாட்டு வண்டிகளிலோ பின் பேருந்துகளிலோ குறிகாட்டுவானைச் சென்றடைந்து அங்கிருந்து தோணிகளிலே நயினாதீவு செல்லுமளவிற்குப் பயணம் சிறிது எளிதாயிற்று.

"பணவசதியுடையோர், நடுத்தர வசதியினர் காரைநகர் வரை யாழ்ப்பாணத்திலிருந்து பேருந்துகளிற் சென்று காரைநகர்த் துறைமுகத்திலிருந்து படகுகளிலோ, பாதை எனப்படும் பாரியமிதப்புக் கலத்தின் வாயிலாகவோ ஊர்காவற்றுறையடைந்து 'மச்சுவாய்' எனப்படும் பாய் விரித்துச் செல்லக்



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
பிரதேச சேர்க்கைப் பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிய பாதுகாப்பும் விரைவுங் கொண்ட கலங்களில் யாத்தி ரையைத் தொடர்ந்தனர். பணப்புழக்கம் குறைவான அக்கா லத்தில் கீழ் மத்தியவகுப்பாரும் ஏழைகளும் முதலிற் கூறி யாங்கு யாத்திரை செய்வதே பொது வழக்காயிருந்தது.

இத்தகைய இடர்நிறைந்த பயணங்களுக்கும் காற்றால் உண்டாகும் சிரமங்களுக்கும் அக்காலத்தில் முகங்கொடுத்து அன்னையின் தரிசனத்திற்கும் வழிபாட்டிற்கும் ஆண்டுதோறும் அடியார்கள் சென்று வந்தனர் என்றால் இதற்கெல்லாம் **அடிப்ப டைக்காரணம் அவர்களின் உள்ளங்களிலே நிறைந்து கிடந்த பக் தியும் பற்றுறுதியுமே என்பதிற் சிறிதும் ஐயமில்லை.** அக்காலத்தில் நயினை யாத்திரிகருக்கு நயினையில் தங்கிநிற்க விடுதிகளோ, உணவுகளோ இல்லை. கோயிலுக்கு வருவோர் ஆலய வீதிக ளிலுள்ள மரநிழல்களின் கீழே தங்கித் தாம் கொண்டு சென்ற அரிசி காய்கறிகளைக் கொண்டு தாம் எடுத்துச் சென்ற பாத்திரங்களில் ஆங்காங்கே வீதிகளில் சமைத்து உண்பதும் தமது அவசிய கருமங்களைச் சுற்றாடலில் உள்ள மணலிடங் களில் மேற்கொள்வதும் வழக்கம். நயினைக்குத் தேர்த்திருவிழா வைத் தரிசிக்கச் சென்றோர்- தீர்த்தம் - தெப்பத் திருவிழாவை யும் முடித்துக்கொண்டு மூன்றோ நான்கோ நாட்களின் பின்பே வீடுகளுக்கு மீள்வதும் அக்காலத்திற் சர்வசாதாரணம்!" என்று மேலும் விபரிக்கிறார் பரம்பரை அறங்காவலரும் சபையின் தலைவருமான திரு.ஆறுமுகம் தியாகராசா அவர்கள் (2003).

## நயினை யாத்திரை - இன்று

"இன்று நயினை செல்வதென்பது இலகுவானதாயும் உளமகிழ்வைத் தருவதாயும் உள்ளது. அதிகாலை குறிகாட்டு வான் துறைக்குச் சென்று அங்கிருந்து நீராவிப்படகிலே (Steem Boat) நயினையை அடைவது ஒருமணித்தியாலத்தினுள்ளே மேற்கொள்ளக்கூடியதாய் விட்டது. காலையிற் செல்வோர் மதியத்திலோ மாலையிலோ திரும்பி வீட்டுக்கு வருவது வியப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிற்குரியதன்று. எனினும் கோயிலில் தங்கும் காலங்களில் உணவு குடிநீர்வசதிகளைப் பெறுவதும் இன்று இலகு வாயுள்ளது. இன்று வதிவிடவசதி, சமையல்வசதி, குடிநீர்வசதி, மலசலகூடவசதி என்பன அறங்காவலர் சபையினராலேயே (ஏற்பாடுகள்) செய்யப்பட்டுள்ளன.**

## 'வாகீச கலாநிதி' கி.வா.ஜ. அவர்கள் பெயரிட்ட 'அமுதசுரபி' அன்னதானசபை

**'அமுதசுரபி'** என்னும் அள்ள அள்ளக் குறையாத அன்ன சுரபிகொண்டு ஆபுத்திரன் என்பவன் அகிலத்தாரின் உறுபசி போக்கிடும் அரும்பணியினை ஆற்றிவந்தான். அவனுடைய பெருந்தொண்டு கண்டு பொறாமைகொண்ட இந்திரனானவன் பாண்டிநாடெங்ஙனும் மழைபொழியவைத்து, அது வசதியும் வளமும் உடையதாய் விளங்கிட வழிசமைத்தான். இதனால் ஆபுத்திரனிடம் உணவை நாடி வருவோர் குறைவாயினர். அவன் தன் கையகத்துள்ள **'அமுதசுரபி'** பயனற்று போயிற்றே என்று கலங்கினான்.

சாவகநாட்டில் மழைவளம் சுருங்கிக் கண்கள் வரண்டு அங்குள்ளோர் உணவு கிட்டாது அலமந்து வருந்துவராயினர். இதனை அறிந்த ஆபுத்திரன் சாவக நாடு செல்லும் கப்பல் ஒன்றிலே அக்கப்பலிலுள்ளோர் வேண்டியபடி தன் அமுத சுரபியோடு ஏறி அங்குள்ளோர் பசிபோக்கிடச் செல்ல இந்திரனின் சூழ்ச்சியால் புயல் ஒன்று வீசிற்று. அப்புயல் காரணமாகக் கப்பல் **மணிபல்லவத்தில்** கரை ஒதுங்கிற்று. புயல் அடங்கியதும் கப்பலில் வந்தோரும் மாலுமிகளும் ஆபுத்திரன் ஏற்கெனவே கப்பலில் ஏறிவிட்டான் என்று எண்ணித் தாமும் ஏறிக்கொண்டு கப்பலைச் சாவகம் நோக்கிச் செலுத்தினர். ஊழ்வினை காரணமாக் கப்பலில் ஏறத் தவறிய ஆபுத்திரன் தன்னந்தனியாய், தன்பணி நிறைவேற உண்டான தடையால்



8774 c.c.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருந்தி, தான் உறங்கிய இடத்தின் அருகேயிருந்த கோமுகிப் பொய்கையில் **அமுதசுரபி**யை இட்டு, தானும் உண்ணா நோன்பு நோற்று மரணமடைந்தான்.

ஆபுத்திரனதும் அமுதசுரபியினதும் வரலாறும் அதனை *மணிமேகலை* பெற்றுப் பலரதும் பசி போக்கியும் அரும்பணி யைத் தொடர்ந்த செய்தியும் *மணிமேகலைக்* காப்பியம்மூலம் நாம் அறிவன.

**நயினை**மக்கள், தம்மூர்வந்து அன்னையைத் தரிசித்துச் செல்வாரின் பசிப்பிணி போக்கிடும் மருத்துவனாய்மாறி அன்னம் பாலித்திடும் அன்னதானசபை **'அமுதசுரபி'** என்ற பெயரால் வழங்கிவருவது முற்றிலும் பொருத்தமேயாகும்.**'அமுதசுரபி'** என்ற பெயரை வைத்தவர் *கலைமகள்* ஆசிரியரும் வாகீச கலாநிதியுமான, பேரறிஞரும் (அமரர்) கி.வா.ஜகந்நாதன் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போது யாத்திரிகர் தங்குவதற்கான அறைகளும் மண்டப மும் ஒருங்கமைந்த **'இறைபயணிகள் இல்லமும் கல்யாண மண்டபமும்'** என்ற மண்டபத்தை ஆலய நிர்வாகம் அமைத்துப் பரிபாலித்து வருகின்றது. தற்போது அம்பிகையைத் தரிசிக்கவரும் வெளியூர் அடியார்களுக்குத் தினசரி அன்னதானம் வழங்கும் திருத்தொண்டும் இம்மண்டபத்தில் ஆலய அறங்காவலர் சபை யினரால் நடாத்தப்பட்டு வருவது நன்றியுடன் விதந்து கூற வேண்டிய நற்பணியாகும். விடுதியில் தங்குவோரும் இந்து சமயம் சார்ந்த நூல்களைப் படித்து ஆய்வு செய்வதையும் அறிவை விருத்தி செய்வதையும் நோக்கமாகக் கொண்டோரும் பயன்பெறத்தக்கவாறு **'இந்து கலாசார நூலகம்'** என்ற பெயரில் பெறுமதிமிக்க அரியதொரு நூலகமும் இங்கு அமைந் துள்ளதையும் பாராட்டுவதும் நம் ஒவ்வொருவரதும் கடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினைமான்மியமும் நாகம்பாளும்

*"நயினைமான்மியம்"* நாகமணிப்புலவரின் புலமைவீச்சுடனான கவிதைக் கருவூலம். *'நயினைமான்மியம்'* இன்னும் அச்சுவாகனம் ஏறவில்லை. இளைப்பாறிய கல்வி அதிகாரி பண்டிதர், வித்துவான் (அமரர்) க.குகதாசன், பி.ஏ அவர்கள், *"நயினைமான்மியம்"* பற்றிப் பின்வருமாறு எழுதுகிறார்.

**"நாயினைமான்மியம் என்பது நயினையது மான்மியம் என விரியும், மான்மியமென்றால் சிறப்பு அல்லது மகிமை. சக்தி பீடங்கள் பலவற்றுள் புவனேஸ்வரிபீடம் எனச் சிறப்பிக்கப் படுவது நயினாதீவாகும். அங்கே கோயில் கொண்டிருப்பவள் ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆவாள். ஈழத்திலுள்ள பெருமை பெற்ற அம்மன் ஆலயங்களுள் இது தலை சிறந்ததாகும். இங்குள்ள தீர்த்தம் பாவங்கள் பலவற்றையும் தீர்க்கவல்லது என்பது சைவ மக்களின் நம்பிக்கை. இத்தகைய சிறப்புகளைப் புலவர் தமது நூலில் விரிவாகக் கூறுகிறார். முதற்கண் இப்பதி அமைந்துள்ள ஈழமண்டலத்தின் சிறப்பினைக் கூறி அதன்பின் நயினைத் தலத்தின் மகிமையையும், அதன் பின் அங்குள்ள அம்பிகையின் கருணைத் திறத்தினையும் பின்பு அங்குள்ள தீர்த்தத்தின் விசேடத்தையும் நயம்பட எடுத்துரைத்து இறுதியாக இத்தலம் சம்பந்தமான புராண வரலாறுகளையும் விரித்துரைத்துத் தனது நூலை நிறைவு செய்கிறார் நாகமணிப் புலவர்."**

*"நயினைமான்மியம்,* கடவுள் வணக்கம், அவையடக்கம், பாயிரம் என்ற மூன்று அங்கங்கள் போக, ஈழமண்டலச் சருக்கம், ஸ்தல விசேட சருக்கம், மூர்த்தி விசேடச் சருக்கம், தீர்த்த விசேடச் சருக்கம், சேடன் அருச்சுனைச் சருக்கம், விழாப் பவனிச் சருக்கம், உவகைச் சருக்கம், மகாமணிச் சருக்கம், புண்ணியராசதரிசனச் சருக்கம், மணிபல்லவச் சருக்கம், பீடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைச் சருக்கம், நாகர் வதைச் சருக்கம், பாத்திரச் சருக்கம், ஆபுத்திரச் சருக்கம், புகார்ச் சருக்கம், மணித்தீப மகத்துவச் சருக்கம் எனப் **பதினாறு** சருக்கங்களைக் கொண்டது.

*நயினைமான்மியம்* ஓராயிரம் விருத்தப்பாக்களால் இயன்ற நூல். இந்தநூலின் பாயிரத்தில் புலவர் இதனை "**நயினையின்** மீது மான்மியம் மிக்க விருத்தமாய், ஏதிலாயிரம் ஐந்துடன் ஏழு நான்கு ஓதினேன்." என்று கூறியுள்ளார்.

## நயினைமான்மியத்தின் காப்புச் செய்யுள் (சிவகாமி அம்மை துதி)

**'முச்சகமுந் தனியளிக்கும் அருள்மழை தோய்ந்தன குழலும்முதுநீர்க்கஞ்சத்து**

**அச்சனைய திருமுகமும் கருவிழியும் வெண்ணகையும் ஆம்பல்வாயும்**

**கச்சணியும் இளமுலையும் மலர்க்கரமும் சிற்றிடையும் கனகத்தாளும்**

**பச்சுருவுந் திகழ் மணியரங்கில் வளர் சுந்தரியைப் பணிதல் செய்வாம்.'**

"தெய்வமகளிரை வர்ணிக்கும்போது கேசாதிபாதமாக வர்ணிக்கும் மரபு இப்பாடலில் அணிச் சிறப்பாகக் கூந்தலுக்குக் கருமுகிலும், முகத்துக்குத் தாமரைமலரும், திருவாய்க்கு ஆம்பலும், உவமைகளாகக் கூறப்பட்டிருப்பதையும், கருவிழியும் வெண்ணகையும் என்ற தொடரில் முரண்தொடை அணியும் மிளிர்கின்றன. இப்பாடல் *அருணாசலபுராணத்தில்* வரும் **'காரொழுகும் குழலாளை'** எனத் தொடங்கும் பாடலையும், *திருக்கோவையாரில்*வரும் **'திருவளர் தாமரை சீர்வளர் கவிகள்'** எனவரும் பாடலையும் எனக்கு நினைவூட்டுகின்றன." என்று எழுதுகிறார் ஆலயப் பரம்பரை அறங்காவலர் மரபில் வந்த வித்துவான், பண்டிதர் க.குகதாசன், பி.ஏ அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாயிரம்

எந்தவொரு நூலுக்கும் பாயிரம் மிக இன்றியமையாதது. "ஆயிரமுகத்தான் அகன்றதாயினும் பாயிரம் இல்லது பனுவல் அன்றே" என்பது இலக்கண விதி. அதற்கமையத் தனது நூலுக்கும் ஏழுபாடல்களால் பாயிரம் பாடியுள்ளார் புலவர். இப்பகுதியில் புலவர் **நயினை நாகபூஷணி அம்மனின்** பராக்கிரமமும் கருணைத் திறனும், நயினைத்தலம் பற்றிய பிறநூற் செய்திகளும், **நயினைக்கும்** மணிமேகலைக்கும் உள்ள தொடர்பும், மூர்த்தி, தலம், தீர்த்த விசேடங்களும், கோவில் திருவிழாக் காட்சியும் கூறி ஈற்றில் நூற்பயனையும் இருபாடல்களிற் கூறிப் பாயிரத்தை நிறைவு செய்கிறார். நூற்பயன் கூறும் பாயிரப் பாடல் இது.

**'ஆற்றுமிக்கதை அன்பொடு நித்தலுஞ்**
**சாற்றுகின்றவர் தன் பொருள் விண்டுளோர்**
**ஏற்ற கேள்வியரேவின ரின்மையின்**
**போற்றினோடரும் பேரின்ப மெய்துவர்.'**

*நயினை மான்மியம்* மகாமணிச் சுருக்கத்தில் மணித்தீவில் நாகரெத்தினம் பெற வந்த அரசதூதுவன் அங்கு வந்து அம்பிகை இருந்த மணிப்பீடத்தைக் கண்டு அதனைத் துதித்து வழிபட்ட விதத்தை **நாகமணிப் புலவர்** பின்வருமாறு பாடுகின்றார்.

**'மண்ணேயானாய் உனக்கபயம் மருந்தேயானாய் உனக்கபயம்**
**கண்ணேயானாய் உனக்கபயம் கதிரேயானாய் உனக்கபயம்**
**பெண்ணேயானாய் உனக்கபயம் பிறவேயானாய் உனக்கபயம்**
**விண்ணேயானாய் உனக்கபயம் விதியே ஆனாய் உனக்கபயம்.'**

**நயினை நாகமணிப்புலவர்** தாம் வாழ்ந்த காலத்துச் செய்திகளைத் தமது நூலின் மூலம் தந்துள்ளார். அதிலிருந்து ஒரு செய்யுள்.

**'சீரியர் வாழ்த்த முனிவரர் வாழ்த்தச் சித்தர் கந்தருவர்கள் வாழ்த்த**
**வாரியர் வாழ்த்த வளர்மணித் தீபத்தமர்ந்த சாம்பவியடியவராற்**
**சோரிய யாவும் தருவிரை மலர்த்தாட் குறைவிலாப் பெரும் புகழென்றும்**
**வாரியினாவா யெனத் திரியாது வாழ்த்துவார் வாய்களே வாய்கள்.'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நயினாதீவுச் சாமியார்' எனப்படும் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி

**ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி** ஆறுமுகம் பார்வதி தம்பதிக்கு அவதரித்த பிள்ளைகளில் ஆறாவதாக 1897ஆம் ஆண்டு அவதரித்தார். இவரின் குரு **ஆனைக்குட்டிச்சாமியாரும், ரமணமகரிஷியும்** என்பதிலும் ஐயமில்லை. **நயினாதீவு** காட்டுக் கந்தசாமி கோயிலின் மேற்குப் புறத்திலேயே ஸ்ரீ முத்துக்குமார சுவாமியவர்களின் சமாதிக் கோயிலை உருவாக்கி நித்திய பூசைக்குரிய ஆலயமாகக் கொண்டுவந்தனர். இப்பணியை அவரது குடும்பத்தினர் தற்போது செய்துவருகின்றனர். 1949 ஆம் ஆண்டு தைமாதம் 26ஆந் திகதி முத்துக்குமாரசுவாமிகள் பரிபூரண நிலையைப் பெற்றுச் சமாதியடைந்தார். **நாகபூஷணி அந்தாதி, நமச்சிவாயமாலை** ஆகிய பாமாலைகளைத் திரு வாய் மலர்ந்தருளியுள்ளார். சுவாமியார் சிவலிங்கப்புளியடியில் திரு எஸ்.சுப்பிரமணியம் அவர்கள் இல்லத்தில் பரிபூரண நிலையடைந்தார்.

**ஸ்ரீ முத்துக்குமாரசுவாமிகள்** கவித்துவம் கைவரப் பெற்றவராக இருந்தார். **நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன்** மீது *ஸ்ரீநாக பூஷணி அந்தாதி மாலை* என்ற பாடற்றொகுப்பு ஒன்றினையும் பாடியுள்ளார். இதிலிருந்து பெற்றபாடல் வருமாறு,:-

**'பெற்றதாய் பார்க்கப் பிள்ளை தான் வருந்திப்**
**பிறப்பெனும் சாகரத்தாழ**
**நற்றவமில்லா என்னை நீ விட்டால்**
**நியாயமோ நல்லுரையாகச்**
**செற்றவக் கரையில் ஏறியான் உய்யத்**
**துணையுநீ யேயன்றி யாருளர்சொல்**
**கற்றவர்க் கினியாய் நயினையம்பதிவாழ்**
**கண்மணி நாகபூஷணியே.'**

தற்போதைய அறங்காவலர் சபைத்தலைவர் திரு. கா.ஆ. தியாகராசா அவர்கள் கூறும் அம்பாள் திருத்தொண்டுத் திருப்பணிகள் பற்றிய தகவல்களை இனி நோக்குவாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'முகாமைத் திட்டத்தின் விதிகளுக்கமைய பரம்பரை முறையில் மு.காசிப்பிள்ளையின் பின் கா.ஆறுமுகமும், க.கந்தசாமியின் பின் க.கனகசபாபதியும், ச.இரகுப்பிள்ளையின் பின் இ.தியாகராசாவும், கா.ஆறுமுகத்தின் பின் ஆ.தியாகராசாவும், வே.பொன்னம்பலத்தின் பின் பொ.இராசலிங்கமும், க.கனகசபாபதியின் பின் க. நாகேஸ்வரனும் பரம்பரைத் தர்மகர்த்தாக்களாக நிர்வாகத்தில் சேவை யாற்றியும் சேவையாற்றிக் கொண்டும் இருக்கிறார்கள். 1951.04.26 ஆந் திகதி மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. சித்திரத்தேர் வேலை 1956.08.24 இல் ஆரம்பமாகியது. தேர் வெள்ளோட்டம் 1957.07.08 இலும் திருவீதியுலா 1957.07.11 இலும் வலம் வந்தது. 1963இலும் 1983இலும் மகாகும்பாபிஷேகங்கள் சிறப்புற நடந்தேறின. 1997-1998 காலப் பகுதியில் பாரிய திருப்பணிகளைச் செய்து மகா கும்பாபிஷேகத்தினைச் செய்ய வேண்டுமென அறங்காவலர் சபை எடுத்த தீர்மானத்தைச் செயற்படுத்தி 1998.04.01 இல் மகாகும்பாபிஷேகத்தைச் சிறப்பாகச் செய்துள்ளோம். சுமார் நாற்பத்தைந்து வருட காலத்திற்கு முன்பு அமைக்கப்பட்ட ஆலயத்தின் கொட்டகையை முற்று முழுதாகப் புனரமைத்து உட்புறமாகச் சீற்அடித்து, உட்சுவர்களுக்கும் தளத்துக்கும் மாபிள் கல்பதித்தும், மின்சாரப் புனரமைப்புகளைச் செய்தும் 1986ஆம் ஆண்டு மார்ச்மாதம் வன்செயலால் அழிக்கப்பட்ட பின்னர் சுப்பிரமணியர் தேர்களையும் புதிதாகச் செய்து வீதியுலா வரச்செய்யவும், கோபுரங்கள், பண்டிகைகளுக்கும், கோபுரச்சுவர்களுக்கும் வர்ணம் தீட்டுவதும், பாதிக்கப்பட்ட தேர்மண்டபமும், தெற்குக் கோபுர மண்டபமும், அடியார்களுக்கான குடிநீர்வசதி, நீராடுவதற்கான நீர் நிலைகள், உயர்திருவிழாக்களுக்கான பணிமனைகள், மஞ்சத்திருப்பணி என்பனவும், தொடர் திருப்பணிச் சேவைகளா கச் செய்யப்படவேண்டுமெனச் சபை தீர்மானித்தது. 1998.04.01 முதல் கலியாணமண்டபத்தில் தினமும் சிறப்பாக இரவு பகல் உணவு வழங்கற் சேவை சிறப்பாக நடைபெற்று வருகின்றது.''**[23]

23. *மகாசக்தி மகத்துவமலர்*, (1998), யோகநாதன், நா.(பதிப்.) யுனிஆட்ஸ் பிரின்ரிங்ஸ், கொழும்பு, ப.163-165.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மரபு வழி அறங்காவலரும், இந்நூலாசிரியரின் தந்தையும் கனடாவில் வாழ்பவருமான 'அருள்மாமணி' ஸ்ரீமான் பரமலிங்கம் கந்தசாமி கனகசபாபதி அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நயினை ஸ்ரீ நாகபூஷணி எழுந்தருளி அம்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

***பின்னிணைப்பு:***

# நயினை ஊஞ்சல்

## காப்பு

1. சீர்பூத்த தென்னிலங்கை தன்னின்மேவும்
திரைபூத்த கடனயினை நகரில்வாழும்
ஏர்பூத்த நாகேசு வரியைப்போற்றி
இசை பூத்த செந்தமிழாலூஞ்சல்பாட
ஆர்பூத்த சடைமௌலியரானாரீன்ற
அருள் பூத்த வறிபிச்சை தொழிலென்றோதும்
கார்பூத்த மும்மை மதக் களிற்றின்பாதம்
கரம்பூத்த மலர் கொண்டேகருதிவாழ்வாம்.

2. பலனோங்கு செம் பவளக் கால்களாக
பகர்வைர ரத்தினமே விட்டமாக
குலனோங்கு வெண்டரளங் கயிறதாக
கூறரிய மாணிக்கம் பலகையாக
வலனோங்கு மூஞ்சன்மிசை யினிதுவைகி
மலர்மகளும் கலைமகளும் வடந்தொட்டாட்ட
நலனோங்கு திருநயினை நகரில்வாழும்
நாகபர மேஸ்வரியேயாடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. உவகையொடு மலரயன்மால் கரங்கள்கூப்ப
ஓசைமணி வாயிலட்ட பாலர்காப்ப
தவமறையோர் தூபமொட்டு தீபங்காட்ட
தாழ்ந்து கண நாதர்புகழ் மாலைசூட்ட
அவிரிடப துவசமகல் வரணந்தூர்ப்ப
அனந்தன் முதலுரகர்செய செயவென்றார்ப்ப
நவையறுசீர் நயினைநகர் தன்னில்வாழும்
நாகபரமேஸ்வரியே யாடீரூஞ்சல்.

4. கொம்பினொடு துடிமுரசு முழவமோங்க
குடைகளுட னாலவட்டம் குழுமியோங்க
தும்புரு நாரதர்வேத கீதம்பாட
தொண்டரக மகிழ்ந்து சுகவாழ்வுகூட
வம்பவிழு மலர்மாரி யமரர் பெய்ய
வரமுனிவரடி பரவியாசி செய்ய
நம்புமடியவர்க்கருளி நயினைவாழும்
நாகபரமேஸ்வரியே யாடீரூஞ்சல்.

5. அன்னநடை யயிராணி கவிகைதாங்க
அயிலை நிகர் விழியரம்பைகளாசியேந்த
வன்னமுலை யுருவசி வெண்கவரிவீச
மணிகொள் கிருதாசி கமண்டலங்கைக் கொள்ள
மின்னிடைமேனகை வெனிலை பாகுநல்க
வியந்து திருலோத்தமை விகித நடனஞ் செய்ய
நன்னயஞ் சேர் நயினைநகர் தன்னில்வாழும்
நாகபரமேஸ்வரியே யாடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. மதிமுகமாலினி பனிநீர் வாசந்தூவ
மயிலை நிகர் சுகேசை மலரடிகணீவ
விதிமுறை மங்கலை முதலோ ராலஞ்சுற்ற
வேதியர்தருமம் மகளிர் சுபவசனஞ்சாற்ற
அதிவினயமொடு சுமனை யாடிகாட்ட
அன்பினிந்திதை சுகந்த வருக்கநீட்ட
நதியுலவு நயினைநகர் தன்னில்வாழும்
நாகபரமேஸ் வரியே யாடீரூஞ்சல்.

7. கோலமுறு வைரமணிச் சுட்டியாட
குலவுமெழின் மாணிக்கத் தோடுமாட
வாலியமுத் தாரமொடு மதாணியாட
வயங்குவளை தொடியுடனங் கதமுமாட
காலவொளிர் பாடகமுஞ் சிலம்புமாட
தண்டையொடு பாதசரந் தயங்கியாட
ஞாலமுகமென விளங்கு நயினைவாழும்
நாகபரமேஸ்வரியே யாடீ ரூஞ்சல்.

8. முந்துதவ மாதர் துதிகூறியாட
முகமனொடு புனன்மாதர் முன்னின்றாட
வந்தனையோ டுரகமட மாதராட
வரையிலுறை மாதரடி வணங்கியாட
கந்தருவ மாதரிசை பாடியாட
கருதரிய புவிமாதர் களிகொண்டாட
நந்துதவழ் கழனிசெறி நயினைவாழும்
நாகபரமேஸ்வரியே யாடீரூஞ்சல்.



205549

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. ஆரணியே யம்பிகையே யாடீருஞ்சல்
அந்தரியே சௌந்தரியே யாடீருஞ்சல்
பூரணியே புங்கவியே யாடீருஞ்சல்
புராதனியே புராந்தகியே யாடீருஞ்சல்
காரணியே காருணியே யாடீருஞ்சல்
கன்னிகையே கண்மணியே யாடீருஞ்சல்
நாரணியே நாயகியே யாடீருஞ்சல்
நாகபரமேஸ்வரியே யாடீருஞ்சல்.

10. பனிவரையில் வருமுமையே பரையேபோற்றி
பகருமற மெண்ணான்கும் வளர்த்தாய்போற்றி
தனிமுதலாம் பரமனிடத் தவளேபோற்றி
தணப்பில் பல சக்திவடி வானாய்போற்றி
இனிமைமிகு மாரமுதே கனியேபோற்றி
எவ்வுயிர்க்குந் தாயாகி இருந்தாய்போற்றி
நனிகுலவு நயினைநகர் தன்னில்வாழும்
நாகபரமேஸ்வரியே யாடீருஞ்சல்.

11. ஆவாழி யந்தணரோ டரசர்வாழி
அரிய தவ மகநிகமாகமும்வாழி
தாவில் குல மங்கையர்கள் கற்பும்வாழி
சைவ சமயமுமறமும் தழைத்துவாழி
பாவார் வெண்ணீறு பஞ்சாட்சரமும்வாழி
பாடியவூஞ்சற் றமிழும் பாரில்வாழி
நாவார்கள் புகழ்நயினை நகரும்வாழி
நாகபரமேஸ்வரியே யாடீருஞ்சல்.

-ஸ்ரீலஸ்ரீ ம. அமரசிங்கப்புலவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடஇலங்கையின் சக்திபீடம் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன்

# இக்காலத்தில் பாடப்படும் பாடல்

சீர்வாழி சிவசமயம் வாழி
தேவாதி தேவுமெல்லாத் தேவும்வாழி
பார்வாழி மதிதொறு மும்மாரிவாழி
பசுக்குலம் வேதியர்தருமம் பலவும்வாழி
நீர்வாழி நயினைநக ருறைவோர்வாழி
நீடாயுளன்ன சொர்ணம் நிறைந்துவாழி
ஏர்வாழி **இராமச்சந்திர மகிபன்வாழி**
இனம்வாழி இவ்வூஞ்சல் வாழி மாதோ.

- சுபம் -






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு

உ
சிவமயம்



# திருக்கேதீச்சரம்
# திருவாசகமடத்தின் ஸ்தாபகர்
# திருவாசகப் பெருங்கடல்
# ஞானவள்ளல்
# ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகள்
# (1904 - 1988)

(நூற்றாண்டு ஜயந்தி வெளியீட்டிலிருந்து சில பகுதிகள். தமிழ் கூறுநல்லுலகின் சிந்தனைக்கும் துரித செயற்பாடுகளுக்குமாக.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு

உ
சிவமயம்

# திருக்கேதீச்சரம்
# திருவாசகமடத்தின் ஸ்தாபகர்
# ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகள்
## (1904 - 1988)

வவுனியாவில் முன்னை நாள் அரச அதிபராகக் கடமை யாற்றிய திரு. செ. சிவஞானம் அவர்களிடம் திருக்கேதீஸ்வ ரத்தில் மடம் அமைப்பதற்காக மரங்கள் கொண்டு செல்வதற் கான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றார் ஸ்ரீசபாரத்தின சுவாமி கள். காட்டில் பெரிய மரங்களை வெட்டித் தோளில் சுமந்து கொண்டு வந்து வண்டிகளில் ஏற்றியவர் ஸ்ரீ சபாரத்தினசுவாமி கள் எனவும் அவரது ஆத்மிக தாகத்தையும் பக்தி வீறையும் கண்டதாகவும் திரு.செ. சிவஞானம் அவர்கள் குறிப்பிட்டார்.

திருக்கேதீஸ்வரத்தில் மடம் அமைப்பதற்குத் தானே அத்தி வாரம் எடுத்து கால்கோளிட்டார். சிவனைப்பாடிய மாணிக்க வாசகரின் *திருவாசகம்* நிலைக்க எண்ணிக் கல்லும் மண்ணும் சுமந்தார்கள். மன்னார்க்கடலால் நடந்து மடம் கட்டும் பொருட் களைச் சேர்த்து திருவாசக மடத்தை உருவாக்கிச் சுண்ணாம் பினாற் **'திருவாசக மடம்'** என்று பெயர் எழுதினார். சேர்.கந் தையா வைத்தியநாதன் அவர்களின் பக்க உதவிகளும் கிடைத்தன. இந்தக் காலத்திற்கு முன்பே சுவாமிகள் திருக்கே தீச்சரம் சென்று குடிசை அமைத்து (சனநடமாட்டமில்லாத காலம்) சிறந்த விவசாயியாகவும், கர்மயோகியாகவும் விளங் கினார். உழைத்துப் பெற்ற ஊதியத்தில் விருந்தோம்பல் செய்தார். துறவிகள், அடியார்கள், சான்றோர்கள், கூடி அற மும், ஆன்மிகமும் வளர்க்கும் அரங்கமாக மடம் விளங்கிற்று. திருவாசக மடத்தை அருள் மடமாக்கிய பெருமை சபாரத்தின சுவாமிகளுக்கு உண்டு. பிற்காலத்தில் மடத்தை நிர்வகிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பைத் திரு. சி. சரவணமுத்து அடிகளார் ஏற்றுச் சிறப்பாக நடத்தி வந்தார்.

சுவாமிகள் அங்கே கௌரீசர் பாடசாலை, நெசவுப் பாட சாலை நிறுவி நடத்தி வந்தார். தனித்து நின்று திருவாச கமடத்தில் 35 அடி நீளக் கிணறு உண்டுபண்ணினார். **சமூகத் தொண்டும் சமயத் தொண்டே எனச் செயற்பட்டவர் சபாரத்தின சுவாமிகள்.**

இவர் இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முன் 1904.03.28 இல் சிவயோக சுவாமிகள் வசித்த கொழும்புத்துறைக்கு அண்மைக் கிராமத்தில் அவதரித்தார். இளமையிலேயே யோகர் சுவாமிகளின் அருட்பார்வை இவருக்குக் கிட்டியமை இவர் முன்னர் செய்த நல்வினைப் பயன்.

**ஆரம்பக்கல்வியைக் கொழும்புத்துறைச் சைவப்பாடசாலையில் கற்றார். பின் கொழும்புத்துறைக் கத்தோலிக்கப் பாடசாலையில் கற்று ஆசிரிய பயிற்சிக் கல்லூரிக்குத் தெரிவாகியதும் மதம் மாறவேண்டும் என வற்புறுத்தப்பட்டதால் வெளியேறினார்.** பின் கொழும்புத்துறைச் சைவப்பாடசாலையில் சிலகாலம் ஆசிரி யராகக் கடமையாற்றினார். அங்கிருந்தும் வெளியேறித் திருமணம் செய்தார். குறுகிய காலத்தில் குழந்தைகள் இல்லா மலே மனைவியும் மறைந்தார்.

**ஆன்மிகத் தாகம் கொண்டு தில்லை நடராஜன் நடமிடும் சிதம்ப ரத்திற்குப் பாதயாத்திரை சென்றார்.** அங்கு நடராஜனின் ஆனந் தத் திருநடனத்தைக் கண்டு களித்துச் சிறிது காலம் தங்கித் தாய்நாடு வந்து திருத்தலங்கள் எங்கும் சென்று வந்தார். தித்திக்கும் *திருவாசகத்தில்* தோய்ந்து தெளிவுபெற்றவர் சபாரத் தினசுவாமிகள். **அவருடைய திருவுடம்பு *திருவாசகத்திற்கு* உருகிய ஒளி உடம்பு. *திருவாசகத்தை* ஓதி, ஓதி உள்ளொளி பெற்றவர். பக்தர்களின் உடற்பசி போக்க அன்னதானம் செய்தார். அடியார் களின் அக இருள் நீங்கத் *திருவாசகத்தேனை* வாரி வழங்கினார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிநாட்களில் சுவாமிகள் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தார். தினமும் சுவாமியைச் சந்தித்து உரையாடவும், ஆசீர்வாதம் பெறவும், அவருடைய *திருவாசகக்* கருவூலத்தைக் கேட்கவும் அடியார்கள் கூடுவார்கள். **சுவாமிகள் சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி போலத் *திருவாசகத்தைச்* சொரிவார். அற்புதமான கருத் துக்களையும் சொல்லுவார்.** சுவாமிகள் தமது அவதார கருமம் இனிதே நிறைவேற்றப்பட்டதை உணர்ந்து இந்த உலகத்தை விட்டுச் சிவன்தாழ் அடைந்தமையும் ஒரு முக்கியமான நாளா கவே கொள்ளப்படுகிறது. 1988.01.25 தை மாதம் பூர்வபக்க ஸப்தமி திதியில் அவர் இவ்வுலக வாழ்வை நீத்துள்ளார்.

இது சாதாரண சப்தமி அல்ல. ரதஸப்தமி என்று சிறப் பித்துக் கூறப்படுகின்ற பாரதத்து பீஷ்மாச்சாரியார் இவ்வுலகை விட்டுப் பரமபதம் அடைந்த தினமாகும். எப்படி பீஷ்மர் உத்தராயணகாலம் வரும்வரை அம்புப்படுக்கையில் இருந்து தை மாதம் உத்தராயணம் வந்ததும் பூர்வபக்க ஸப்தமித் திதியைத் தேர்ந்தெடுத்து யாக்கையை விட்டாரோ அதே போல் எமதுசுவாமிகளும் அதே தினத்தில் தனது ஊனுடம் பைக் களைந்தமை எமக்கு ஒருபுறம் ஆச்சரியமாகவும் மறுபுறம் பயபக்தியாகவும் காணப்படுகிறது. அன்னை கிருஷ்ணாபாய் அவர்களும் சமாதியடைந்ததும் ரதஸப்தமி தினத்தில் என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

1988.1.25 பி.ப 3 மணியளவில் சுவாமிகள் அமரரானசெய்தி யாழ் தீபகற்பம் எங்கும் பரவியது. நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தரஞானசம்பந்தபரமாச்சாரியசுவாமிகள் உட்பட அன்பர்களும் அடியார்களும் அவரின் பூத உடலைத் தரிசிக்கச் சுவாமிகள் இருந்த சுண்டிக்குளி இல்லத்தில் கூடினர். 88.01.26 அதிகாலை தொடக்கம் சைவப் பெரியார் உமாபதி கந்தசாமி அவர்களால் சுவாமியின் பூதவுடல் அபிஷேகம் செய்யப்பட்டு, கிரியைகள் நடைபெற்று அலங்கரிக்கப்பட்ட ரதத்தில்வைத்து சங்கு சேமக்கலம் ஒலிக்க அடியார்கள் இழுத்துச் சென்ற காட்சி ஒரு தேர்த் திருவிழாவை நினைவூட்டியது. துண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயானத்தில் சிவயோக சுவாமிகளின் பூதவுடல்தகனம் செய்யப் பட்ட இடத்தில் சுவாமிகளின் உடலும் சந்தனக் கட்டைகள் மேல் வைக்கப்பட்டுக் கற்பூரத் தீயுடன் சங்கமித்தது. புனித அஸ்தி அடங்கிய நினைவாலயம் மறவன்புலோவில் அமைக்கப் பட்டுள்ளது. அஸ்தியின் ஒரு பகுதி பாலாவியிலும் இராமேஸ் வரத்திலும் கரைக்கப்பட்டது. மாதாந்த வருடாந்தக் குரு பூசை திருவடி வழிபாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. 1993 தொடக்கம் சுவாமியின் குருபூசை, திருவடிவழிபாடு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் சிறப்பாகச் சுவாமிகளின் தொண்டர் சபையினர் செய்து வருகிறார்கள். சுவாமியின் நூற்றாண்டு ஜயந்தி விழாவும் ***'பக்திமலர்'*** நூல் வெளியீடும் 2004.03.28 இல் நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கன.

**தம்பு-துரைராசா.**
**செயலாளர்**
**தொண்டர் சபை**

**'திருவாசகம்',**
**31-ஏ, ஜானகி லேன்,**
**பம்பலப்பிட்டி,**
**கொழும்பு -04.**
**இலங்கை.**



ஆதாரம், ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகள்பற்றி முன்னர் வெளிவந்த நூல்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***[1998 இல் 'ஆழ்கடலான்' முருகவே. பரமநாதன் எழுதிய "சபாரத்தின மென்னும் திருவாசகப் பேருற்று" என்னும் நூலில் 44,45 ஆம் பக்கங்களில் 'திருவாசகமடம்' என்னும் கட்டுரை யிலிருந்து ஒரு பகுதி]***

"கதிர்காமம், வல்லிபுரம், கேதீஸ்வரம், செல்வச்சந்நிதி, நல்லூர், கீரிமலை போன்ற இடங்களிலும் மடங்கள் உள்ளன. **இறைபணிக்கே தம்மையர்ப்பணித்த திருக்கேதீஸ்வரம் சபாரத்தினம் சுவாமிகளும், திருக்கேதீஸ்வரத்தில் ஒரு மடம் அமைத்தார்.** தென்மேல் திசையில் (வெளிவீதி) இது துலங்கியது. தற்போது வன் செயலினால் இம்மடம் முற்றாக அழிக்கப்பட்டது.

தானே அத்திவாரம் எடுத்துக் கால்கோள் இட்டார். பிட்டுக்கு நேர்பட மண்சுமந்தான் சிவன். சுவாமிகளும் சிவனைப் பாடிய மாணிக்கவாசகரின் *திருவாசகம்* நிலைக்க எண்ணிக் கல்லும், மண்ணும் சுமந்தார்கள். மன்னார்க்கடலால் நடந்து மடம்கட்டும் பொருட்களைச் சேர்த்துத் **திருவாசக மடத்தை உருவாக்கி, சுண் ணாம்பினாற் 'திருவாசக மடம்' என்று பெயர் எழுதினார்.** சேர்.கந்தையா வைத்தியநாதனின் பக்க உதவிகளும் கிடைத்தன.

இம்மடத்தையும் சுவாமிகளையும் பற்றிப் பெரும் புலவர் சதாசிவமவர்களும் வித்துவான் சி. ஆறுமுகமவர்களும் பாடியுள்ள னர். இம்மடத்திலே அன்பர் சி. சரவணமுத்து அடிகளார் அவர்கள் இருந்து அடியார்பணி செய்யவும் வழிவகுத்தார். உடம்பை வளர்த் தாற் போதாது; உயிரையும் உள்ளத்தையும் வளர்க்க வேண்டு மென்ற இலட்சியமே இம்மடத்தின் நோக்கு."

**(ஆழ்கடலான்)**

* * *

"வவுனியாவில் நான் அரச அதிபராகக் கடமை ஆற்றிய காலத்தில் ஸ்ரீ சபாரத்தின அடியார் **திருக்கேதீஸ்வரத்தில் திருவாசக மடம்** அமைப் பதற்கு மரங்கள் கொண்டு செல்ல அனுமதிப் பத்திரம் கேட்டார்; கொடுத்தேன். காட்டில் பெரியமரங்களை வெட்டி, தோளில் சுமந்து கொண்டு வந்து வண்டிகளில் ஏற்றினார். அவரது ஆத்மிகதாகத்தையும், பக்திவீறையும் அந்தக்காட்சியில் கண்டேன்.

**செ. சிவஞானம்,**
முன்னாள் அரச அதிபர்,
வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# திருக்கேதீஸ்வரம் சபாரத்தினம் சுவாமிகள்

# (1904-1988)


உயர்திரு **சபாரத்தினம் சுவாமிகள் ஒரு தீர்க்கதரிசி, கர்மவீரர்.** இவர்கள் திருக்கேதீஸ்வரத்தில் வெறுமனே *திருவாசகத்தைப்* பாராயணஞ் செய்தும், மற்றவர்களைத் *திருவாசகத்தில்* ஈடுபடுத்தியது மட்டுமல்ல அடியார்களை உபசரித்து அமுது வழங்கியவர். சேர். கந்தையா வைத்தியநாதன் ஐயாவுக்கு வலது கையாக இருந்து பல பணிகள் செய்துள்ளார்கள். **'திருவாசக மடம்'** நிறுவி விழா நடத்த ஏற்பாடு செய்தார். வைத்தியநாதன் ஐயா ஏற்பாட்டில் கௌரீசர் பாடசாலை கட்டி முடித்தார். நெசவுசாலை கட்டி முடித்தார். தனித்து நின்று திருவாசக மடத்தில் 35 அடி நீளக் கிணறு உண்டு பண்ணினார். அதுமட்டுமல்ல அவர்கள் நல்லூர்த் திருவிழாவுக்கு விசேடமாக தேர்த்திருவிழாவுக்கு திருக்கேதீச்சரத்தில் இருந்து கால் நடையாகவே வருவார். ஒருநாள் வெள்ளாங் குளத்தில் ஒரு காட்டு யானை இவரை மறித்தது. உடனே **உன்னிடத்தில் இருப்பது தான் என்னிடத்தில் இருக்கிறது** என்று நின்று விட்டார். யானை வணக்கம் செய்து திரும்பி விட்டது. என்னே அற்புதம்!

திருக்கேதீச்சரம் குடிசையில் சுவாமிக்குத் தொண்டு செய்து வந்த பஞ்சாட்சர அம்மா மரணப்படுக்கையில் இருந்தபோது சுவாமிகள் யாழ்ப்பாணத்தில் இருந்தார்கள். நாங்கள் சுவாமிகள் இல்லை என்று ஏங்கிக் கொண்டிருந்தபோது சுவாமிக்குத் திருவருள் உணர்த்த திடீரெனச் சுவாமிகள் திருக்கேதீஸ்வரம் வந்து சேர்ந்தார். சுவாமி வந்தபின்தான் அம்மா இறைவனடி சேர்ந்தார். **அவர்கள் ஓர் அற்புத சுவாமிகள். அவரின் பெருமையை எழுதி முடியாது.** சிதம்பரம் நடராசருடன், நந்தனார் மாணிக்கவாசகர் போலச் சேர்ந்திருப்பார். இந்திய யாத்திரை கால்நடையாகச் செல்வார். சிதம்பரத்தைக் கண்டு அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லையைக் கடவாமல் அங்கேயே இருப்பார். அவர் எனக்கு முன்னரே திருக்கேதீச்சரத்தை அடைந்து திருப்பணிகள் முற்றுவிக்க உறுதுணையாய் இருந்து கும்பாபிஷேகம் கண்டு ஆனந்தம் அடைந்தவர். அவர் திருவடிக்கு நாம் வணக்கம் செய்து அவரின் திருவுருவத்தைமனதில் பதித்து வணங்கு வோமாக! சுவாமிகள் திருக்கேதீஸ்வரத்தில் இருந்திருந்தால் கோயில் மூடப்பட்டிருக்காது. நாமும் அனாதைகளாக வெளியேறி இருக்கமாட்டோம். ஏதோ இருவினைப் பாசக் கயிற்றின் வழி ஆட்டுவிப்பானுடைய செயலை யார் அறிய முடியும்.!



**'திருவாசகமடம்',**
**திருகேதீஸ்வரம்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# நமது காலத்து ஞானியாக வாழ்ந்தவர் திருக்கேதீச்சரம் திருவாசகம் ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள் (1904 - 1988)

**"இலங்கையிலே பல ஞானியரும், சித்தர்களும் தோன்றியுள்ளனர். அவர்களுள் அண்மைக் காலத்தில் வாழ்ந்த ஸ்ரீசபாரத்தினம் சுவாமிகள் திருவாசகத்தையே தமது வாழ்வின் மூச்சாகக் கொண்டு விளங்கியவர். திருக்கேதீச்சரத்தில் மடம் அமைத்து, வந்த பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானமிட்டு மகிழ்ந்தவர். அத்தகையதொரு ஞானியை நாம் போற்றி நினைப்பது மிகவும் உயரிய காரியமாகும்".**

இவ்வாறு கடந்த 2004.03.28 ஆந் திகதி காலை, பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகளின் நூற்றாண்டு ஜயந்தி விழாவிற் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்திய கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி **ஆத்மகனானந்தஜி மகராஜ் அவர்கள் குறிப்பிட்டார்.**

"திருப்பணித்தவமணி" சி. தியாகராசா (S. T. R) அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சி விசேட பூஜை, தீபாராதனை, கூட்டுப் பிரார்த்தனை என்பவற்றுடன் ஆரம்பமானது.

திரு. தியாகராசா (S. T. R) தமது தலைமையுரையில், ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகள், திருவாசகத்தை மிகவும் ஈடுபாட்டுடன் ஓதி மகிழ்ந்த தன்மையையும், திருகேதீச்சரத்தில் இருந்து ஆற்றிய ஆன்மிகப் பணிகளையும் பற்றிக் குறிப்பிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து சிறப்புரை நிகழ்த்திய திருகோணமலை ஸ்ரீமத் தந்திரதேவா சுவாமிகள் தமது உரையில்,

**“நாம் தேவார திருவாசகங்களை நமது சிறார்களுக்கு ஓதுவித்துப் பழக்க வேண்டும். தொன்மையும் பெருமையும் மிக்க இந்து சமயத்தை நன்கு உணர்ந்து செயற்பட வேண்டும். இந்து சமயம் மிகப்பெரும் சொத்து. அதற்குள் நிறைய ஆன்மிகக் கருத் துக்கள் பொதிந்து கிடக்கின்றன. எனவே எமது மக்களுக்கு அவற் றைப் பரப்புவது பிரதான கடமையாகும். பேதங்களை வளர்த்துக் கொள்ளாமல் ஒற்றுமையோடு செயற்படுதல் அவசியம்.” எனக் குறிப்பிட்டார்.**

கம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்கள் தமது உரையில்,

**“நமது சமயம் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நாற்பா தங்களைக் குறிப்பிடுகிறது. பெரும்பாலான மக்கள், சரியை, கிரியை ஆகியபடிகளில் மட்டுமே நின்று விடுகின்றனர். அதன் அடுத்த படிகளுக்குச் செல்ல முயற்சிப்பதில்லை. நமது காலத்து சிரேஷ்ட முனிவராக விளங்கிய சபாரத்தினம் சுவாமிகள் யோகத்திலும், ஞானத்திலும் சிறந்து விளங்கினார்.”** என்றார். மேலும்,

**“*திருவாசகம்* ஞானக்களஞ்சியம். அதன் உட்பொருள் வார்த்தை களால் விளக்க முடியாதது. *திருவாசகத்தை* ஓதுவதை விட உணர்வது பிரதானமானது. அறிதல், உணர்தல், தெளிதல் என்ற படிகளை நாம் அடையவேண்டும். அப்போதுதான் பிறவிப் பயனை அடைந்தவர்களாவோம்.”** எனவும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து நூற்றாண்டு ஜயந்தி விழாவை முன்னிட்டு வெளியிடப்பட்ட **“பக்திமலர்”** நூல் வெளியீடு இடம்பெற்றது. முதற்பிரதியைப் புறக்கோட்டை வர்த்தகர் சங்கத் தலைவர் எஸ். பி. சாமி அவர்கள் பெற்றுக் கொண்டார்.

சிறப்பு நிகழ்ச்சியாகத் திருவாசக சபையின் செயலாளரும், சமூகத் தொண்டருமான திரு. த. துரைராசா தம்பதிக்குக்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவம் வழங்கப்பட்டது. சியாமளா ஜுவலர்ஸ் அதிபர் திரு. ஜெயவத்சலன் தம்பதி பொன்னாடை போர்த்திக் கௌர வித்தார்கள். திரு. சி. தியாகராஜா (S. T. R) தம்பதியினர், திரு. வே.திருநீலகண்டன் தம்பதியினர் மற்றும் பலரும் துரை ராசா தம்பதியினரை மலர்மாலை சூட்டிக் கௌரவித்தனர்.

**"பக்திமலர்"** நூலைக் கலாநிதி குமாரசாமி சோமசுந்த ரம்,M.A அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார். இந்து சமய விவகார அமைச்சின் செயலாளர் திரு. க. பரமேஸ்வரன், கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் திரு. எஸ். தில்லை நடராஜா ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

**"பக்திமலர்"** நூலின் தொகுப்பாசிரியர் வாகீசகலாநிதி கனக சபாபதி நாகேஸ்வரன், B.A (Hons);M.A அவர்களின் நன்றியு ரையுடனும் தீபாராதனையுடனும் நிகழ்ச்சிகள் நிறைவுபெற்றன.

**ம. சண்முகநாதன்**
**இந்து சமயத் திணைக்களம்.**



---

ஆதாரம், *ஞானச்சுடர்,* (2004), சித்திரை மலரில் வெளியிடப் பெற்ற சுவாமிகளின் நூற்றாண்டு விழா விமர்சனம். கலைபண்பாட்டுப் பேரவை வெளியீடு, தொண்டைமானாறு, செல்வச்சந்நிதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்,B.A.(Hons) ; M.A. (Jaffna)

2004.06.14ல் திருவாசகம் ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகளின் ஞாபகார்த்தமாக ஒரு மண்டபம் அமைப்பதற்காக இடமொன்றைத் திருக்கேதீச்சரத் திருக்கோவில் வீதியில் அல்லது அண்மையில் ஒதுக்கித் தருமாறு திருக்கோவில் திருப்பணிச் சபைக்கு விண்ணப்பித்துள்ளோம்.

செயலாளர்

தொண்டர்சபை

## கனடாவில் விழா

கனடா இந்து சமயப் பேரவைச் சிவனடியார் திருக்கூட்டத்தினரால் 2004-03-28 அன்று ஞாயிற்றுக்கிழமை அருள்மிகு நல்லூர் ஆலயத்தில் திருவாசக சுவாமிகளின் நூற்றாண்டுவிழா திருவாசகம் முழுவதும் ஓதலுடனும், அபிஷேக ஆராதனைகளுடனும் சிறப்புச் சொற்பொழிவுடனும் இடம்பெற்றன.

(ஆதாரம்: கனடா "ஆத்மஜோதி")





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்நூலாசிரியரின் ஆய்வுக் கட்டுரைகளும் பிற வெளியீடுகளும்

**சொற்பேராழி, வாகிசகலாநிதி**
**கனகசபாபதி நாகேஸ்வரன்B.A (Hons); M.A (Jaffna)**
**VAAKEESAKALANITHY.**

***KANAGASABAPATHY NAGESWARAN,B.A (HONS); M.A (JAFFNA).***

1) "இளங்கோ வடித்த இலக்கியம்" - (நயினாதீவு மணிபல்லவ கலாமன்றக் கட்டுரைப்போட்டியில் மேற்பிரிவில் முதலாம் இடத்தைப்பெற்ற கட்டுரை, *கோமுகிமலர்*) மணிபல்லவ கலாமன்ற வெளியீடு, நயினாதீவு,- (1972.)

2) "அரசியல் கோட்பாட்டில் புரட்சி, கலகம் யுத்தம் பற்றிய சில கருத்துக்கள்", கலை இலக்கிய அறிவியல் இதழ், *சங்கமம்*, செப், ஒக், 1974.

3) "கவிதை நெறியும் கவிதை முறிவும்", *கலாசுரபி* (1976), இலங்கைப் பல்கைக்கழகம் யாழ்ப்பாணவளாகம், மனிதப் பண்பியற்பீட மாணவர் சங்கம், முதலாவது வெளியீடு, (மலராசிரியர்- கனகசபாபதி நாகேஸ்வரன்)

4) "ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் இலங்கையர்கோனின் பாத்திரம்", *மல்லிகை,* பெப். 1978.

5) "பாரதியின் கண்ணன் பாட்டில் தத்துவச் சார்பும் போதனைப் பண்புகளும்", *செவ்வந்தி.* , மார்ச் 1978.

6) "ஈழத்தில் நவீன தமிழ்க்காவியங்கள் பற்றிய ஒரு நோக்கு" *மல்லிகை,* ஜனவரி, பெப்ரவரி, 1980.

7) "தடுத்தாட்கொண்ட புராணத்தில் சேக்கிழார் கவிநலன்", '*இந்துநெறி*', (1978.) இலங்கைப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாண வளாகம், இந்துமாமன்ற வெளியீடு.

8) "நாவலரும் முத்துத்தம்பிப்பிள்ளையும்" - ஆறுமுக நாவலர் *நூற்றாண்டுவிழாமலர்*, - ஆறுமுக நாவலர் சபை வெளியீடு, கொழும்பு, -1978.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9) தத்துவப் பொருளும் சஷ்டிமகிமையும், *ஈழநாடு*, 22.10.1979.

10) "மேடைநாடக முன்னோடி சங்கரதாஸ் சுவாமிகள்", *ஈழநாடு*, 13.11.1979.

11) 1980 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டஉரை தொகுப்பு, -ஈழநாடு, 19.11.1979,

12) "தமிழிலக்கிய ஆய்வில் சுவடிகளின் பங்கு" *ஈழநாடு*, 19.11.1979.

13) இந்துகலாசார அமைச்சும் இந்து மாநாடும், *ஈழநாடு*, 22.10.1979.

14) ஐக்கிய நாடுகள் அமைப்பும் பணியும், *ஈழநாடு*.

15) "மனித நாகரிகத்தின் முதிர்வினை விளக்கி நிற்பது பொங்கல்", *ஈழநாடு*, 14.01.80.

16) இந்திய தேசிய காங்கிரஸ் வளர்ச்சியில் சில போக்குகள், *ஈழநாடு*.

17) பேராசிரியர் கனகசபாபதி கைலாசபதி அவர்களின் *"சமூக வியலும் இலக்கியமும்"* நூல்விமர்சனம், *ஈழநாடு*, 10.02.1980.

18) விஞ்ஞானம்- 6 (மாணவர்பயிற்சி) நூல்,- *ஈழநாடு*, 29.10.1979.

19) "இந்துப்பண்பாடும் சமூகமும்", நூல் விமர்சனம், *ஈழநாடு*, 17.02.1980.

20) "அரசாங்கப் பிரசுர நூல்களின் வரிசையில்சிவராத்திரிச் சிறப்புமலர்" பிரதேச அபிவிருத்தி இந்துகலாசார அமைச்சு வெளியீடு, கைநூல் பற்றிய விமர்சனம், *ஈழநாடு*, 02.03.1980.

21) "இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாற்றில் உமறுப்புலவர் ஆற்றிய பங்கு," *ஈழநாடு*, 24.02.0980.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

22) "மொழித்திறனை வளர்க்கும் சாதனங்கள்" - *தமிழிலக் கியக்கழக மலர்*, தமிழிலக்கியக் கழக வெளியீடு, யாழ்ப்பாணம், செப்.1980.

23) "மொழியும் வானொலியும்", *இனமுழக்கம்*, சஞ்சிகை, 1981.

24) "குழந்தைக்குரல்" நூல் விமர்சனம், *கலைக்கோலம், இலங் கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், தமிழ்ச்சேவை, ஒலிபரப்பு*,1980.

25) "தமிழ்க்கல்வியில் மொழிப்பிரயோகம்", *ஈழநாடு*, 23.12.1981.

26) "மலரொன்றைக் கையிலேந்தி", *வவுனியா ஸ்ரீ கந்தசாமி கோயில் மகாகும்பாபிஷேக மலர்*, 07.02.1982.

27) "செந்தமிழின் ஒலிமரபு", *தமிழ்ஒலி*, வானொலி நேயர் மன்றம் வெளியீடு, ஏப். ஜுன், 1982.

28) இளைஞர் வாழ்வில் சமயம், *பராசக்தி*, றோயல் கல்லூரி இந்து இளைஞர் சங்க வெளியீடு, கொழும்பு, 1983.

29) முன்னுரை-'*முரண்பாடுகளின் அறுவடை*', (சிறுகதைத் தொகுதி), திருமதி. கோகிலா மகேந்திரன், 1984.

30) 'பெண்களுக்கு உயர்கல்வி அவசியமில்லை' மேடைப் பேச்சு, *புதுமுறைக்கட்டுரைக் கோவை*, காரைநகர்த் தமிழ் வளர்ச்சிக்கழக, வெளியீடு, ஜுன், 1984.

31) 'வானொலி, தொலைக்காட்சி கள ஆய்வும் நிகழ்ச்சி மதிப்பீடும்.' (கோலாலம்பூர் - ஆசிய பசுபிக் ஒலிபரப்பு அபிவிருத்தித் தலைமையகத்தில் நிகழ்த்திய வானொலி, தொலைக் காட்சி கள ஆய்வனுபவங்கள், தகவல்களை உள்ளடக்கிய ஆய்வுக்கட்டுரை) *ஈழநாடு வாரமலர்*, யாழ்ப்பாணம், 05.08.1984.

32) 'தொண்டன்' பாரதி கலம்பகம், நூற்கணிப்பீடு, *கலைக் கோலம்*, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், தமிழ்ச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவை ஒலிபரப்பு, 03.10.1984. (தொகுத்தளித்தவர்: கனகசபாபதி நாகேஸ்வரன்)

33) 'காவியகாலமும் நாவலிலக்கியயுகமும்' கட்டுரை காவியம் நாவல் ஒப்பீடு, *ஈழநாடு (வாரமலர்),* 6.1.85 : 20.1.85.

34) "பொன்றாப்புகழ் படைத்த சேர் .பொன் . இராமநாதன்", *ஈழநாடு வாரமலர்,* 25.11.1984.

35) "இந்திராகாந்தியின் பணியும், பயனும்" (பெண்மையரசு) *ஈழநாடு வாரமலர்,* 11.11.1984.

36) தொகுப்பு "ஒழுங்குபடுத்தப்பெற்ற நிர்வாகச் சிறப்புப் பெற்றது சோழமன்னன் ஆட்சி," *ஈழநாடு,* 16.07.1985. (இராஜராஜசோழன் விழா)

37) "பிதிர்த்தேவதைகளுக்கான தினம் - ஆடி அமாவாசை", *ஈழநாடு,* 15.07.1985.

38) கிராமப்புறமொன்றின் சமயவாழ்க்கையைத் திரட்டித் தரும் வரலாற்றுநூல், *"இத்திமரத்தாள்",* பேராசிரியர், கலாநிதி சு. வித்தியானந்தனின் உரை, *ஈழநாடு* 17.07.85. (நூலாசிரியர்கள் : பேராசிரியர், கலாநிதி அ. சண்முகதாஸ், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்)

39) 'முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளார்', *ஈழநாடு,* 19.07.85

40) "சுந்தரர் பாடல்களில் விஞ்சிநிற்பது அடிமையுணர்வா? தோழமையுணர்வா?" *தினகரன்,* 30.7.85.

41) "கனவோ இது நனவோ", (உளவியல்), *ஈழநாடு,* 24.07.85.

42) "பக்கம் சாராத திறனாய்வாளர்கள்", *தினகரன்,* 13.8.85.

43) "வாழ்வின் துன்பநிலைச் சித்திரிப்புகள்" *(இந்துநெறி,* யாழ் பல்கலைக்கழக இந்துமன்ற, வெளியீடு 1985).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44) "சனிவிரதமும் அதன் தத்துவமும்", *ஈழநாடு* 21.09.1985.

45) "தீபாவளிப் பண்டிகையும் அதன் புராண வரலாறும்", *ஈழநாடு*, 11.11.1985.

46) "மூலபாடத்திறனாய்வா? பாடபேதத்திறனாய்வா?" (இலக்கிய ஆராய்ச்சி), *ஊற்று*, 50 வது சிறப்பிதழ், 1986.

47) "திறனாய்வுக்கட்டுரை" *தேன்பொழுது*, ஒரு குறிப்பு, *சிரித்திரன்*, சித்திரை, 1986., ப 12-13.

48) "சீறிடும் நாகபூஷணித்தாய், *தினகரன் வாரமலர்*, 18.05.1986.

49) "பாரதிவழிவந்த கவிஞன் பாவேந்தர் பாரதிதாசன்", *தினகரன், வாரமஞ்சரி*, 03.05.1987.

50) "இந்தியத் தெருக்கூத்து *நாடகங்கள்*", மல்லிகை, ஏப்ரல், மே, 1988, ப, 29.

51) "முருக மூர்த்தச்சிறப்பு முனைப்புடைநிகழ்வு அது", *உதயன்*, 23-08-1987.

52) "சர்வமத சந்நிதியாகத் திகழும் நயினைப்பதி" நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேர்த்திருவிழாச் சிறப்பிதழ், *உதயன்*, 28.06.1988.

53) "சைவத்தின் பேருண்மை", *ஆலயமணி*, ஆனி, 1988,ப.26.

54) "நந்தியும் சிறுகதைகளும்", *ஜீவசக்தி*, (சமூக அறிவியல் ஏடு), 05.08.1988.

55) "நயினை ஸ்ரீ நாகபூஷணியின் வரலாறும் வழிபாடும்", *தினகரன், வாரமஞ்சரி*, 26.06.1988, ப.03.

56) "பல்லவர்காலமும் பக்தி இலக்கிய நெறியும்", "*ஆதவன் எழுகிறான்*", செப்ரம்பர், ஒக்டோபர், நவம்பர் 1988, ப.14-20

205549



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

57) "இலக்கியக்கலையில் அறிவியற் சிந்தனைகள்", *தமிழோசை*, 1987, தமிழ்மன்றம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், யாழ்ப்பாணம், திருநெல்வேலி. இலங்கை

58) "யாங்கு ஆகுவள்கொல் பூங்குழை",பண்டிதர் திரு .அ.ஆறுமுகம் அவர்களின் வைரவிழாமலர், 05-02-1989, ப.39-42.

59) "மூலபாடத் திறனாய்வு பிரதிபேதங்கள்".*மல்லிகை,* 24 வது ஆண்டுமலர், ஜனவரி, 1989, ப. 50.

60) "இணைந்து நாதமழை பொழியும் இளவரசர்கள்", *உதயன் சஞ்சீவி*, V.K.கானமூர்த்தி, V.K.பஞ்சமூர்த்தி இணைவின் வெள்ளிவிழா மலர்,26.03.1989.

61) "குறள் காட்டும் உள்ளம்", *உள்ளம்*, (கலை இலக்கிய சமூக மாதஇதழ்), வளர்மதி வெளியீடு, வைகாசி, 89, ப. 3-5, மதி, பிறை, 4)

62) "சமய ஞானம் எளிதோ, *இந்து இளைஞன்*," இலங்கை இந்து இளைஞர் பேரவையின் 10ஆவது ஆண்டு மாநாட்டுச் சிறப்புமலர், 21.05.1989, ப. 17-18.

63) முன்னோடிக் கட்டுரை, "கீரிமலை ஆய்வுவளர வேண்டும்", *தினகரன்*, வாரமலர், 21.05.1989.

64) *சிவத்தத்துவமலர்*, (பதிப்பாசிரியர்) வவுனியா ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோவில் மகாகும்பாபிஷேகச் சிறப்பு வெளியீடு லக்ஷ்மி அச்சகம் கொழும்பு. 23.06.1996

65) "சக்திதத்துவம்", சக்திதத்துவமலர் நாவலப்பிட்டி ஸ்ரீ முத்து மாரி அம்பாள் மகாகும்பாபிஷேகச் *சிறப்புமலர்*, 24.07.1996, Published - Type Setting Designing & Printing By Graphic (Art) Kandy, Sri Lanka.


8774 ட.உ
பொதுசன நூலகம் யாழ்ப்பாணம். விசேட சேர்க்கைப் பகுதி
KOHA JPL
பொது சன நூலகம் யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கைலைக்காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by LUXMI PRINTER, 195, Wolfendhal Street. Colombo 13. T.P: 2448545.